# சமூக அறிவியல்

## பகுதி - 2

## வகுப்பு VIII

**Social Science**
**Part - 2**
**Std VIII**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் நிறுவனம் (SCERT) கேரளம்

2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# 8

# சமூக அறிவியல்

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

அன்புடைய நண்பர்களே,

சமூக அறிவியல் கல்வியின் வாயிலாகப் பரந்த உலகம் மற்றும் பலதரப்பட்ட சமூக வாழ்க்கையைப் பற்றிய பல விவரங்களை முந்தைய வகுப்புகளிலிருந்து நாம் தெரிந்து கொண்டோம். சமூகத்தின் வரலாற்றையும் மாற்றத்தையும் கூடுதலாகப் புரிந்து கொள்ளவதற்கான வாய்ப்புகள் இங்குக் கிடைக்கும். தாய் நாட்டின் துடிப்பான கடந்த காலத்தைக் குறித்துள்ள புதுமையான அறிவுகள் நமது வரலாற்று உணர்வில் புது வெளிச்சம் தருபவையாகும்.

தேசீய இயக்கம் கேரளாவில் வலிமையடைந்ததும் அந்நிய ஆட்சிக்கு எதிராக நாட்டரசுகள் நடத்திய போராட்டங்களும் சமூக தீமைகளுக்கு எதிராக உருவான சீர்திருத்த இயக்கங்களும் குடியுரிமைகளுக்காக நடந்த போராட்டங்களும் ஐக்கிய கேரளத்தின் உருவாக்கமும் இங்கு பாடப்பகுதிகளாக உள்ளன.

மேலும் உலக கலாச்சாரங்களை அறிந்து கொள்ளவும் ஐரோப்பாவில் இருந்த நிலமானிய முறையின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்ளவும் பல்வேறு உலக நாடுகளின் உருவாக்கத்தைக் குறித்துப் புரிந்து கொள்ளவும் இந்த பாடநூல் உங்களுக்கு உதவும். ஐரோப்பாவின் காலநிலை, சமூக வாழ்க்கை, வேளாண்மை, தொழில் ஆகியவற்றைக் குறித்தும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. உலக வாழ்க்கை முறையைப் பற்றி புரிதலை அடையவும் உலக குடிமகன் என்ற கண்ணோட்டத்தை உருவாக்கவும் உதவும் பல பாடப்பகுதிகள் உள்ளன.

மக்களாட்சியின் சொல் விளக்கம் பரவல் அடிப்படைக் கூறுகள் ஆகியவற்றைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்ள இந்த பாடநூல் பயனுள்ளதாக இருக்கும். மிகப் பெரிய மக்களாட்சி நாடான இந்தியாவில் கட்சி அமைப்பைக் குறித்து இங்கு விவாதிக்கப்படுகிறது.

வேளாண்மை ஒரு கலாச்சாரமாக வளர்வது அவசியமாகும். வேளாண்மைத் துறையில் உண்டான புதுமையான நுட்பங்களையும் அதனுடன் தொடர்புடைய வேளாண்மை முறைகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் வேளாண்மை கலாச்சாரத்தோடு அதிகமாக இணையவும் குடிமை உணர்வை நிலைநிறுத்தவும் முடியும் என்று கருதுகிறேன்.

தேசீய உணர்வை அதிகரிக்கச் செய்யவும், சுயமாகப் புரிந்து கொள்ளவும், சமூகத்தை அடையாளம் கண்டு புதிய கண்ணோட்டங்களை உருவாக்கவும் சமூக அறிவியல் கல்வி உதவும். உலக நடவடிக்கைகளைக் கண்டறிந்து செயல்படும் சிறந்த குடிமக்களாக மாறும் வகையில் சிறந்த கற்றல் அனுபவங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பு சமூக அறிவியல் பாடநூல் பகுதி 2, வரலாற்றை ஆர்வத்துடன் அணுகவும், புதிய அறிவுகளைப் பெறுவதற்கும் உதவியாக அமையும் என்ற உறுதியுடன் உங்களுக்கு இப்பாடநூல் வழங்கப்படுகிறது.

அன்போடு,

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# Textbook Development Team

## Advisor

**Dr. K. N. Ganesh**
*Chairman, Kerala Council for Historical Research*

## Chairperson

**Dr. V. Shaharban**
*Assosciate Professor & Head, Department of Economics, Kannur University*

## Experts

**Dr. Anish V. R.**
*Assistant Professor, Department of Political Science, S.A.R.B.T.M. Govt. College, Koyilandy*

**Bino P. Jose**
*Assistant Professor, Department of History, St. Dominic's College, Kanjirapally*

**Dr. Jayarajan K.**
*Associate Professor & Head Department of Geography, Govt. College Chittur, Palakkad*

## Members

**Dr. Anjana V. R. Chandran**
*Research Officer, SCERT Kerala*

**Dr. Akhil S.**
*H.S.S.T. Geography, G.H.S.S., Thazhathuvadakara, Kottayam*

**Ashraf M.**
*Principal (Rtd.), G.G.H.S.S., Adoor, Pathanamthitta*

**V. Kripalaj**
*H.S.T. Social Science, V.M.H.S. Vadavannur, Palakkad*

**Leena P. S.**
*H.S.T., Social Science, S.N.H.S.S. Uzhamalakkal, Nedumangad, Tvpm.*

**Dr. Priyanka P. U.**
*H.S.T. Social Science, G.H.S.S. Nayyardam, Tvpm.*

**Pradeepkumar L.**
*H.S.S.T. Political Science, G.H.S.S. Pattazhy, Kollam*

**P. C. Radhakrishnan**
*H.S.S.T. Sociology, G.H.S.S., Munnoorcode, Palakkad*

**Renjith Vellalloor**
*H.S.T. Social Science, G.H.S.S., Kilimanoor, Thiruvananthapuram*

**Rijukumar K. C.**
*H.S.S.T. History, G.H.S.S., Avitanallur, Kozhikode*

**Shareena K.**
*H.S.T. Social Science, G.H.S.S., Perinthalmanna, Malappuram*

**Sreejith M. Muthadath**
*H.S.T. Social Science, C.N.N.G.H.S. Cherpu, Thrissur*

**Dr. Usha Rani K.**
*Assistant Professor, Govt. College of Teacher Education, Thiruvananthapuram*

## Tamil Translation

## Experts

**Dr. Santhi P**
*Professor of Tamil University College, Thiruvananthapuram.*

**Dr. Rema Devi R**
*Associate Professor (Rtd), University College, Thiruvananthapuram.*

## Members

**Ramar P,**
*HST, GVHSS & TTI, Kumily.*

**Mary Stella Rosaline K,**
*HST (Rtd.), GGHSS Karamana, Thiruvananthapuram.*

**Nirmala Princy Bell J,**
*HST (Rtd.), GV&HSS, Chalai, Thiruvananthapuram.*

**Geetha A**
*HST Social Science, GHS Pambanar.*

**Vijaya A**
*Headmistress, GHS Pambanar.*

**Justin Raj D,**
*HST, PHSS Vandiperiyar, Idukki.*

## Academic Coordinator

**Dr. Anil D.**
*Research Officer, SCERT Kerala*


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 8. | தேசிய இயக்கமும் கேரளமும் | 127-146 |
| 9. | மக்களாட்சி : சொல்விளக்கமும் பரவலும் | 147-164 |
| 10. | உலக நிலப்படத்தில் ஐரோப்பா | 165-184 |
| 11. | நிலமானிய முறையும் இடைக்கால உலகமும் | 185-194 |
| 12. | வேளாண்துறையும் புதுமையான தொழில் நுட்பங்களும் | 195-210 |
| 13. | புதிய நாடுகளைக் கட்டமைத்தல் | 211-228 |


இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்க சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


அதிக வாசித்தலுக்கு மதிப்பீடு செய்ய தேவையில்லை.


கற்றல் செயல்பாடுகள்


தொடர் செயல்பாடுகள்


நாம் வாசிக்கலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 8

# தேசிய இயக்கமும் கேரளமும்





பூடம் 8.1

திருவனந்தபுரத்தில் உள்ள பாங்கோடு ராணுவ முகாமில் நிறுவப்பட்டுள்ள ஒரு துணிச்சலான போர் வீரர் சிலையின் படம் 8.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது. 1741 இல் குளச்சலில் திருவிதாங்கூர் ராணுவம் டச்சுக்காரர்களைத் தோற்கடித்ததை நினைவு கூறும் வகையில் இது நிறுவப்பட்டுள்ளது

ஐரோப்பியர்களின் இந்திய வருகையும் பூர்வீக மக்களுடனான ஆரம்பகால போராட்டங்களும் குறித்து முன் அத்தியாயத்தில் நாம் விவாதித்தோம் அல்லவா?

பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வணிகம் செய்வதற்காக கேரளாவிற்கு வந்தவர்கள் சுதேச அரசுகளைக் கைப்பற்றி அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட முயன்றனர். கேரளாவில் ஆதிக்கத்தை நிலை நாட்ட ஐரோப்பியர்களுக்கு இடையே நடந்த போட்டியில் ஆங்கிலேயர்களுக்கு ஆதிக்கம் கிடைத்தது.

ஐரோப்பியர்களின் வருகையின் போது கேரளாவில் பல்வேறு சுதேச அரசுகள் இருந்தன. பின்னர் மலபார் பகுதி ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நேரடி ஆட்சியின் கீழும் கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்கள் பிரிட்டீஷ் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட சமஸ்தானங்களின் ஆட்சியின் கீழும் வந்தன. கேரளாவில் ஆங்கிலேயர்களை முதலில் எதிர்த்து போராடியவர்கள் யார்? காரணங்கள் என்ன? அதன் விளைவுகள் யாவை? நாம் ஆராய்வோம்.

## போருக்குத் தயாராக எக்காளம் முழங்குகிறது

*"கொஞ்சம் கூட மறக்கவில்லை நாங்கள் என்றும் உயர்ந்த கோட்டயம் தாயகத்தின் கேசரி வீரனை! அன்பு நிறைந்த இதயத்துடன் சுதந்திர விதையை விதைத்த வேளாண் வீரனை, சுதந்திரப் போராட்ட வீரர் மலையாளி ஆனாலும் சுதந்திர போதையில் தன் உணவையே மறந்தார்"*

*பி. குஞ்ஞிராமன் நாயர்*
*'புரளிமலையிலே பூ மரங்கள்'*

**மலபார்**




*படம் 8.2 ● மலபார் மாவட்டம் 1800 CE*

கேரளாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய கேரளவர்மா பழசிராஜாவைப் பற்றிய கவிதையின் பொருளே மேலே கூறப்பட்டுள்ளது.

வடக்கு மலபாரில் உள்ள கோட்டயம் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர் கேரளவர்மா பழசிராஜா. ஆரம்ப காலத்தில் மைசூர் ஆட்சியாளர்களுக்கெதிராக மலபாரில் அவர் ஆங்கிலேயர்களுக்கு உதவியிருந்தார். அதற்கு ஈடாக கோட்டயம் பகுதியில் வரி வசூலிக்கும் அதிகாரம் பழசிக்கு வழங்கப்பட்டது. ஆனால் ஸ்ரீ ரங்கப்பட்டினம் ஒப்பந்தத்தின் படி மலபார் ஆங்கில கிழக்கிந்திய கம்பனி கட்டுப்பாட்டின் கீழ் வந்தபோது நிலைமை மாறியது. கோட்டயத்தில் வரி பிரிக்கும் அதிகாரத்தை ஆங்கிலேயர்கள் அவர்களோடு விசுவாசமாக இருந்த பழசிராஜாவின் மாமா, குறும்ப நாட்டு ராஜாவான வீரவர்மாவிடம் ஒப்படைத்தனர். இந்த புறக்கணிப்பை எதிர்த்து பழசிராஜா புதிய ஆட்சியாளர்களுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இது பழசிக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே மோதலுக்கு வழி வகுத்தது.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரே பழசி கைக்கொண்ட தற்காப்பு உத்திகள் எவை என்பதைப் பார்ப்போம்.

- இராணுவத்தளம் வயநாட்டிற்கு மாற்றப்பட்டது.
- வட்டார மக்கள் பிரிவினரை ஒன்று சேர்த்தார்.
- கொரில்லா போர்முறை நடத்தப்பட்டது. (Guerilla warfare)

குறிச்சியத் தலைவன் தலக்கல் சந்து, நாயர் படையை நடத்திய எடச்சேனா குங்கன், கைத்தேரி அம்பு, கண்ணவத்து சங்கரன் பள்ளூர் எம்மன் ஆகியோர் பழசிக்கு பலமான இராணுவ ஆதரவை வழங்கினர்.

காடுகளும் மலையிடுக்குகளும் நிறைந்த வயநாட்டில் மக்களின் ஆதரவுடன் எதிர்ப்பை வெளிப்படுத்திய பழசியைத் தோற்கடிப்பது எளிதல்ல என்பதை ஆங்கிலேயர்கள் புரிந்து கொண்டனர். அவருக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

- முக்கியமான இடங்களில் இராணுவ தளங்கள் அமைக்கப்பட்டன.
- புதிய சாலைகள் அமைக்கப்பட்டன.
- வயநாட்டிற்கு அரிசி விநியோகம் தடை செய்யப்பட்டது.
- கலவரத்தில் பங்கெடுப்பவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நன்கொடை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

### ஸ்ரீ ரங்க பட்டின உடன்படிக்கை

*மூன்றாம் ஆங்கிலோ – மைசூர் போரில் மைசூர் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1792 மார்ச் 18 இல் மைசூரின் ஆட்சியாளராக இருந்த திப்பு சுல்தானுக்கும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே கையெழுத்தான ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் படி திப்புவின் கட்டுப்பாட்டில் இருந்த மலபார், கூர்க் ஆகிய பகுதிகள் ஆங்கிலேயர்களுக்கு கிடைத்தன.*

*பழசிக்கும் அவரது குழுவிற்கும் கம்பெனி நிர்ணயித்த விலையைப் பார்க்கவும். பிடித்துக் கொடுத்தால் முழு பகோடாவும் கிடைக்கும் தகவல் தெரிவித்தால் பகுதி கிடைக்கும்.*

| | | |
|---|---|---|
| 1. | கேரளவர்மா பழசிராஜா | 3000 |
| 2. | வீரவர்மா ராஜா | 1000 |
| 3. | ரவிவர்மா ராஜா | 1000 |
| 4. | பள்ளூர் எம்மன் | 1000 |
| 5. | பள்ளூர் இரயரப்பன் | 300 |
| 6. | எடசேனா குங்கன் | 1000 |

*(பகோடா என்பது அக்கால நாணயம்)*
*ஆதாரம்: டாக்டர். கே. கே. என். குறுப்பு, 'பழசி சமரங்கள்'*

கம்பெனி நிர்வாகத்திற்கு நெருக்கடியை உண்டாக்கிய பழசியை எதிர்கொள்ள திறமையான இராணுவ அதிகாரிகளை நியமித்திருந்தாலும் எவ்விதபயனும் இல்லை. தலசேரியின் துணை ஆட்சியாளராக வந்த தாமஸ் ஹார்வே பாபர் பழசியின் சக்தி வாய்ந்த இராணுவத் தலைவர்களைக் கொன்று இராணுவத்தளங்களைக் கண்டு பிடித்து பழசியைக் கூடுதல் நெருக்கடிக்குள்ளாக்கினார். 1805 நவம்பர் 30 அன்று வயநாட்டிலே மாவிலாம் தோடு என்ற இடத்தில் கம்பெனியின் இராணுவத்தோடு நடந்த மோதலில் அவர் வீர மரணமடைந்தார்.



படம் 8.3 ● பழசியின் மாவிலாம் தோட்டிலுள்ள சிலை

*“அவர் ஒரு கிளர்ச்சியாளராக இருந்தாலும் இந்த நாட்டை இயற்கையான முறையில் ஆட்சிபுரிந்தவர்களில் ஒருவர் என்ற நிலையில், வீழ்ந்த எதிரியோடு காண்பிப்பதிலிருந்து வித்தியாசமாக அவர் நடத்தப்பட வேண்டும் என்று எனக்கு தோன்றியது.”*

இது பழசியின் உடல் அதிகாரப்பூர்வ மரியாதைகளுடன் மானந்தவாடியில் அடக்கம் செய்வது குறித்து மலபார் முதன்மை ஆட்சியர் தாமஸ் வார்டனுக்கு பாபர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும். (1805 டிசம்பர் 31).

*வட்டாரவாசிகளைக் இணைத்துக்கொண்டு ஆங்கிலேயர்களுக்கெதிராகப் பழசி கைக்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகளும் ஆங்கிலேயர்கள் பழசிக்கெதிராக எடுத்த நடவடிக்கைகளையும் வகுப்பில் விவாதித்து ஒரு குறிப்பு தயாரிக்கவும்.*



படம் 8.4 ● வேலுத்தம்பிதளவாய்

## விளம்பர அறிக்கை முழக்கிய தளவாய்

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆற்றிங்கலில் நடந்த ஆங்கிலேயர் எதிர்ப்பு போராட்டமும் குளச்சல் துறைமுகத்தில் டச்சுக்காரர்கள் தோல்வியடைந்ததும் பற்றி முன் பாடப்பகுதியில் விவாதித்தோம் அல்லவா? திருவிதாங்கூர் வரலாற்றில் இந்த இரண்டு நிகழ்வுகளுக்குப் பிறகு ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடந்த மற்றொரு எதிர்ப்பைப் பற்றி நாம் அறிந்துகொள்வோம்

திருவிதாங்கூரை ஆண்ட பாலராமவர்மா மகாராஜாவின் தளவாய் அதாவது பிரதம மந்திரியாக இருந்தவர் வேலுத்தம்பி. 1805 இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும் திருவிதாங்கூர் ராஜாவுக்கும் இடையே கையெழுத்தான ஒரு உடன்படிக்கையின் மூலம் திருவிதாங்கூரின் அரசியல் சுதந்திரம் முடிவுக்கு வரவும் ஆட்சி பிரிட்டீஷ் ரெசிடென்ட் மெக்காலேயின் கட்டுப்பாட்டிற்குள் ஆனது. அதே நேரத்தில் தளவாயாயிருந்த வேலுத்தம்பியின் உத்தரவுகளை மெக்காலே இரத்து செய்து, கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய வரிபாக்கியை உடனடியாகச் செலுத்துமாறு வலியுறுத்தியது வேலுத்தம்பிக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே மோதலுக்குக் காரணமானது.

கொச்சியின் பிரதான மந்திரியான பாலியத்தச்சனும் மெக்காலேயிடமிருந்து இதுபோன்ற அனுபவத்தை சந்தித்தார். வேலுத்தம்பி பாலியத்தச்சனுடன் ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து திருவிதாங்கூர் மற்றும் கொச்சியின் கூட்டுப்படைகள் கொச்சியிலுள்ள மெக்காலேயின் முகாமை ஆக்கிரமித்தன. இருப்பினும் இந்தத் தாக்குதலிலிருந்து மெக்காலே தப்பிவிட்டார்.

1809 ஆம் ஆண்டு ஜனவரி 11-ஆம் நாள் திருவிதாங்கூரிலுள்ள குண்டறையில் ஒரு பிரகடனத்தின் வாயிலாக ஆங்கில ஆதிக்கத்திற்கெதிரே ஆயுதப் போராட்டத்திற்குத் தயாராகுமாறு வேலுத்தம்பி மக்களை அழைத்தார். இந்தப் பிரகடனம் 'குண்டறை விளம்பரம்' என்று அறியப்படுகிறது.

திருவிதாங்கூர் அரசருக்குத் தளவாயின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லையென்றாலும் நாட்டு மக்களைத் தன் பக்கம் வைத்துக்கொண்டு வேலுத்தம்பி ஆங்கிலேயர்களோடு போராட்டத்தைத் தொடர்ந்தார். கம்பெனி இராணுவத்தால் தோற்கடிக்கப்பட்ட கூட்டாளியான பாலியத்தச்சன் கூட்டணியிலிருந்து விலகியது தளவாய்க்கு பின்னடைவை ஏற்படுத்தியது. அவரை தளவாய் பதவியிலிருந்து மன்னர் நீக்கினார். திருவிதாங்கூர் கம்பெனியின் கூட்டுப்படை வேலுத்தம்பி தஞ்சம் புகுந்த மண்ணடியிலுள்ள வீட்டைமுற்றுகையிட்டபோது அந்நிய சக்தியிடம் பிடி கொடுக்காமல் அவர் தற்கொலைச் செய்து கொண்டார்.

### குண்டறை விளம்பரம்

*(கொல்ல வருடம் 948, தை (மகரம் 1)*

*திருவிதாங்கூரைப் பாதுகாப்பதாகக் கூறும் ஆங்கிலேயர்கள் நாட்டைக் கொள்ளையடிக்கின்றனர் எனவும் இது தொடர்ந்தால் நாடு அழிந்து விடும் என்றும் இவர்களுக்கெதிரே ராஜகுடும்பத்தினரும் தேசபக்தர்களும் ஆயுதம் எடுத்து போராட்டத்திற்குத் தயாராக வேண்டும் என்று இந்த விளம்பரம் வாயிலாக திருவிதாங்கூரின் தளவாயான வேலுத்தம்பி அழைப்பு விடுத்தார்.*

## கொச்சியும் பாலியத்தச்சனும்

கொச்சியில் பிரதான மந்திரியாயிருந்த பாலியத்தச்சன் திருவிதாங்கூருடன் ஏற்படுத்திய கூட்டணியைக் குறித்து நாம் விவாதித்தோம். அவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடுவதற்கான சூழ்நிலைகள் எவை என்பதை ஆராய்வோம்.

பிரிட்டீஷ் ரெசிடென்டான மெக்காலே கொச்சியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை பாலியத்தச்சன் எதிர்த்தார். அத்துடன் பாலியத்தச்சனின் எதிரிக்கு மெக்காலே அடைக்கலம் நல்கியது பிரச்சனையை அதிகரிக்க வைத்தது. தொடர்ந்து திருவிதாங்கூரின் தளவாயான வேலுத்தம்பியுடன் இணைந்து பாலியத்தச்சன் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆங்கிலேயர்களுடன் கடுமையாக எதிர்த்து நின்றாலும் இறுதியில் அவரை ஆங்கிலேயர்கள் சென்னைக்கு நாடு கடத்தினர்.



*படம் 8.5 • பாலியத்தச்சன்*

### பாலியத்தச்சன்

*கொச்சி ராஜ்ஜியத்தில் பாலியம் என்ற நாயர் குடும்பத்தின் தலைவர்கள் பாலியத்தச்சன் என்று அழைக்கப்பட்டனர். பாலியத்தச்சன்கள் கொச்சி ராஜ்ஜியத்தில் முதலமைச்சர் அதாவது பிரதான மந்திரி என்ற பதவியை வகித்தனர்.*

*பாலியத்தச்சனும் வேலுத்தம்பி தளவாயும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடத்தூண்டிய சூழ்நிலை என்ன? விவாதம் செய்து வகுப்பில் வெளிப்படுத்துங்கள்.*

## குறிச்சியர் கலகம் – எதிர்ப்பின் வீரக்கதை

பாரம்பரிய ஆயுதங்களுடன் ஆங்கிலேயர்களுக்கெதிராக போராடுகின்ற பழங்குடி மக்களையே படம் 8.6 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் ஆங்கிலேயர்களுக்கெதிராகப் போராடக் காரணம் என்ன? நாம் ஆய்வு செய்வோம்.



படம் 8.6 ● குறிச்சியர் கலகம் ஓவியம்

வயநாட்டில் உள்ள பழங்குடியினர் குறிச்சியர்களும் குறும்பியர்களும் ஆவர். கிளர்ச்சியில் பழசிக்கு உதவியதால் இவர்களைப் பின்னர் ஆங்கிலேயர்கள் எதிரிகளாகக் கண்டனர். குறிச்சியர் மற்றும் குறும்பியர்களோடு ஆங்கிலேயர்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பாருங்கள்.

- பழங்குடியினரின் துண்டு நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.
- பாரம்பரிய விவசாய முறைகள் தொடர அனுமதிக்கப்படவில்லை.
- வரியாகப் பொருட்களுக்குப் பதிலாகப் பணம் கேட்கப்பட்டது.

1812 இல் குறிச்சியர் கலகம் தொடங்கியது. வயநாட்டிற்குள்ள பாதைகளைக் கைப்பற்றி வட்டாரத்தின் ஆதரவைப் பெற்று ஆங்கிலேயர்களுக்கெதிராகப் பழங்குடியினர் போராடினர். ராம நம்பி என்ற ராம மூப்பன் அவர்களின் தலைவராக இருந்தார். சுல்தான் பத்தேரியிலும் மானந்தவாடியிலும் இருந்த ஆங்கிலேய இராணுவத்தை அவர்கள் நேரடியாகத் தாக்கினர். ஆனால், அதிக வீரர்களைப் பிற இடங்களிலிருந்து கொண்டு வந்து குறிச்சியர் கலகத்தை ஆங்கிலேயர்கள் அடக்கினர்.

**வயநாட்டில் பழங்குடியினர் மக்களைக் கலகத்திற்கு கொண்டு சென்ற சூழ்நிலைகளை ஆராய்ந்து குறிப்பு தயாரிக்கவும்.**

## வேளாண் அதிருப்தியும் கலகங்களுக்கு வழி வகுத்தது.

*“1836 ஆம் ஆண்டு முதல் 1853 ஆம் ஆண்டு வரையுள்ள பதினெட்டு வருடங்களுக்கிடையில் மலபாரில் சுமார் இருபத்திரண்டு வலிமையானக் கலகங்கள் நடைபெற்றன”*

*சி. ஏ. இன்னஸ், 'மலபார் கெசட்டியர்' தொகுதி II, 1951.*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலபாரின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியான கலகங்கள் உண்டானது. பிரிட்டீஷ் அரசாங்கத்தின் வரிக்கொள்கைகளும் நில உடைமையாளர்களின் சுரண்டலும் குடிஒழித்தல்களும் கலவரங்களுக்கு காரணமாகும் என்று மலபார் மாவட்ட ஆட்சியர் வில்லியம் லோகன் தன்னுடைய

விசாரணை அறிக்கையில் பதிவு செய்துள்ளார். சுரண்டும் நில உடைமையாளர்களுக்கும் பிரிட்டீஷ் அரசுக்கும் எதிரே வேளாண்மை செய்பவர்களின் எதிர்ப்பும் வன்முறைகளும் நடந்தன. இதில் பங்கேற்றவர்களில் அதிகமானோரும் தென் மலபாரில் முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த மாப்பிள்ளைகள் விவசாயிகளானதால் ஆங்கிலேய அதிகாரிகளும் ஏகாதிபத்திய வரலாற்றாளர்களும் இந்தக் கலவரங்களை "மாப்பிள்ளைக்கலகம்" என்று அழைத்தனர்.




படம் 8.7 • மலபார் கையேடு

*நில உடைமையாளர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எதிராக விவசாயிகள் போராடக் காரணம் என்ன? ஒரு குறிப்பு தயார் செய்து வகுப்பில் வழங்கவும்.*

*கீழே உள்ள அட்டவணையை நிரப்புக.*

| எதிர்த்து நிற்றல்கள் | நடந்த இடம் | சூழ்நிலை |
|---|---|---|
| | கோட்டயம், வயநாடு | |
| | | உள்நாட்டுக் காரியங்களில் பிரிட்டீஷ் தலையிடல் |
| | கொச்சி | |
| குறிச்சியர் கலகம் | | |
| | | வரி உயர்வும் குடி ஒழித்தலும் |

## சமூக சீர்த்திருத்த இயக்கங்கள்

*“நான்கு கால் விலங்குகளை விட கீழானவர்களா*
*இந்த மானிட சகோதரர்கள்? இந்த இருபதாம்*
*நூற்றாண்டிலும் இதை நீக்க உன்னால்*
*முடியவில்லையே யோகப் பெண்ணே!*
*எப்படிப்பட்டவர்கள் நீங்கள் ஞானப் பெண்ணே!”*

*பண்டிட்டு கே. பி. கருப்பன் 'ஜாதி கும்மி'*

மேலே உள்ள பாடலின் பொருளைக் கவனித்தீர்களா?

இவற்றிலிருந்து என்னென்ன கருத்துகளை உங்களால் புரிந்து கொள்ள முடியும்? கேரளத்தில் இருந்த சமூக நிலைமைகளை விவரிக்கின்ற வரிகள் தான் இவை.

பத்தொன்பது அல்லது இருபதாம் நூற்றாண்டுகளின் சமூக நிலைகளைக் குறித்து நாம் ஆராய்வோம்.

நாம் இன்று காணும் சமமான நிலையும் சமத்துவமும் அன்றைய சமூக வாழ்க்கையில் காணப்படவில்லை. அன்று மூட நம்பிக்கைகளும் ஒழுக்கக் கேடுகளும் நிலவியிருந்த சமூகமாக இருந்தது. ஒரு நபரின் சமூக அந்தஸ்து பிறந்த ஜாதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. ஜாதிப் பாகுபாட்டின் பொருட்டு தீண்டாமை, தொடுதல் கூடாமை, பொதுவழியில் நடப்பதற்கான கட்டுப்பாடுகள் போன்ற பல சமூகத் தீமைகள் கேரளத்தில் நிலவி இருந்தன.

*வேறு என்ன சமூகத் தீமைகளைக் குறித்து நீங்கள் கேள்விபட்டிருக்கிறீர்கள்?*

- *சமபந்தி விலக்கு*
- 
- 

சமூகத்தில் இருந்த இத்தகைய பகுத்தறிவற்ற பழக்கவழக்கங்களை எதிர்த்துப் போராடியவர்களே சமூக சீர்த்திருத்தவாதிகள். நவீன கல்வியின் பரவலும் மறுமலர்ச்சி சிந்தனையும் இவர்கள் செயல்பாடுகளை ஆதரித்தன. நமது நாட்டில் பல சமூக சீர்த்திருத்தவாதிகள் தோன்றியுள்ளார்கள்.

## சமூக சீர்த்திருத்தவாதிகளும் அவர்களின் முக்கியச் செயல்பாடுகளும்



*படம் 8.8 • வைகுண்ட சுவாமிகள்*

### வைகுண்ட சுவாமிகள்

கேரளத்தின் ஆரம்பகால சமூக சீர்த்திருத்தவாதிகளில் ஒருவராவார். இவர் சிலை வழிபாட்டின் பகுத்தறிவற்ற தன்மையை வெளிப்படுத்திக்கொண்டு தென்னிந்தியாவில் முதன்முதலில் 'கண்ணாடி பிரதிஷ்டை' நடத்தினார்.

*இயக்கம்: சமத்துவ சமாஜம்*



*படம் 8.10 • குரியாகோஸ் எலியாஸ் சாவற*

### குரியாகோஸ் எலியாஸ் சாவற

சமூக சீர்திருத்தவாதியும் கல்வியாளருமாவார். ஏழை மக்களுக்கு வேண்டி அனாதை இல்லங்களும் பள்ளிக்கூடங்களையும் நிறுவினார்.



*படம் 8.9 • ஸ்ரீ நாராயண குரு*

### ஸ்ரீ நாராயண குரு

கேரளத்தில் சமூக மாற்றத்திற்காகப் பாடுபட்ட சீர்த்திருத்தவாதிகளில் முக்கியமானவர். மூட நம்பிக்கைகளுக்கும் ஜாதி பாகுபாட்டிற்கும் எதிராகப் போராடினார். 'கல்வி மூலம் ஞானம் பெறுங்கள்' என்று உபதேசித்தார். அருவிப்புறத்தில் சிவன் பிரதிஷ்டை செய்து ஜாதி பேதமின்றி, மதவெறுப்பின்றி அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழக் கூடிய ஒரு மாதிரி இடமே அந்தக் கோயில் எனச் சிறப்பிக்கவும் செய்தார். சகோதரன் அய்யப்பன், மகாகவி குமாரனாசான், டாக்டர் பி. பல்பு, டி. கே. மாதவன் போன்ற சீர்திருத்தவாதிகளில் இவரின் கருத்துகள் செல்வாக்குச் செலுத்தின.

*இயக்கம்: ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம்*



படம் 8.11 • சட்டம்பி சுவாமிகள்

### சட்டம்பி சுவாமிகள்

ஜாதி அமைப்பையும் பகுத்தறிவற்ற சடங்கு சம்பிரதாயங்களையும் எதிர்த்தார். அவரது எழுத்துகள் மலையாள மொழிக்கும் இலக்கியத்திற்கும் மதிப்புமிக்க பங்களிப்பாகும்.



படம் 8.13 • வக்கம் அப்துல் காதர் மௌலவி

### வக்கம் அப்துல் காதர் மௌலவி

முஸ்லீம் சமுதாயத்தின் கலாச்சார மறுமலர்ச்சிக்காகச் செயல்பட்டார். அரசாட்சியின் பொய்மைகளை அம்பலப்படுத்துவதற்காகச் சுதேசபிமானி என்ற செய்தித்தாளைத் தொடங்கினார்.

*இயக்கம்: திருவிதாங்கூர் முஸ்லீம் மகாஜன சபை*



படம் 8.15 • பொய்கையில் யோகன்னான்

### பொய்கையில் யோகன்னான்

அடிமைத்தனம் போன்ற சமூகத் தீமைகளுக்கு எதிரே போராடினார்.

*இயக்கம்: பிரத்தியட்சா ரக்ஷா தெய்வ சபா*



படம் 8.17 • வி. டி. பட்டதிரி பாடு

### வி. டி. பட்டதிரிப் பாடு

நம்பூதிரி சமுதாயத்தினரின் சீர்த்திருத்தவாதி, சமூக ஆர்வலர், எழுத்தாளர் என்று அறியப்பட்டார். "அடுக்களையிலிருந்து அரங்கத்திற்கு" என்ற புகழ்பெற்ற நாடகத்தை எழுதினார்.

*இயக்கம்: யோக சேமசபை*



படம் 8.12 • அய்யங்காளி

### அய்யங்காளி

தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்கும் பொது வழியில் சுதந்திரமாக நடப்பதற்காகவும் கல்விக்காகவும் போராடினார். வில்லுவண்டி போராட்டம் கல்லுமாலா போராட்டம் ஆகியவை அவர் தலைமை வகித்த முக்கியமான போராட்டங்களாகும்.

*இயக்கம்: சாது ஜன பரிபாலனச் சங்கம்*



படம் 8.14 • மன்னத்து பத்மநாபன்

### மன்னத்து பத்மநாபன்

மன்னத்து பத்மநாபன் நாயர் சமுதாயத்தின் சமூக முன்னேற்றத்திற்காகவும் கல்வி முன்னேற்றத்திற்காகவும் செயல்பட்டார். கேரளத்தில் குடி உரிமைகள் கிடைப்பதற்காக போராட்டங்களை நடத்தினார்.

*இயக்கம்: நாயர் சர்வீஸ் சொசைட்டி*



படம் 8.16 • பண்டிட் கே. பி. கறுப்பன்

### பண்டிட் கே. பி. கறுப்பன்

கவிஞரும் நாடக ஆசிரியருமான இவர் பின் தங்கிய வகுப்பினரின் மேம்பாட்டிற்காகச் செயல்பட்டார்.

*இயக்கம்: அரய சமாஜம்*



படம் 8.18 • வாக்படானந்தன்

### வாக்படானந்தன்

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட விமர்சன சிந்தனைகளை ஊக்குவித்தார். சடங்கு சம்பிரதாயங்களை காலத்திற்கேற்றவாறு சீர்திருத்த முயன்றார்.

*இயக்கம்: ஆத்ம வித்யா சங்கம்*

இவர்களைத் தவிர பல சமூக சீர்திருத்தவாதிகள் கேரளத்தில் தோன்றியுள்ளனர். தாக்ஷாயணி வேலாயுதன், பார்வதி நென்மேனி மங்கலம், ஆர்யா பள்ளம், காளிக்குட்டி ஆசாத்தி போன்றோர் பெண்களின் சமூக மேம்பாட்டிற்காகச் செயல்பட்டவராவர்.

சமூக சீர்த்திருத்தவாதிகளின் செயல்பாடுகள் சமூக ரீதியாக பின்தங்கியவர்கள், பெண்கள் ஆகியோரின் உரிமைகளுக்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் வழிவகுத்தது. சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூகத்தை உருவாக்கவும் கேரளத்தின் மறுமலர்ச்சிக் காலகட்டத்தை அடையாளப்படுத்தவும் சமூக சீர்த்திருத்தவாதிகளால் முடிந்தது.

*சமூக சீர்த்திருத்தவாதிகளின் கருத்துக்கள் கேரள மறுமலர்ச்சியில் வகித்தப் பங்கு என்ற தலைப்பில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யவும்.*

## குடிமக்கள் சுதந்திரத்திற்கான போராட்டங்கள்

### தோள்சீலைப் போராட்டம் (மேலாடைக் கலகம்)

*“அனைத்து மதத்திலுள்ள சாணார் பெண்கள் கட்டியான சீலையை அணியவோ கட்டிக் கொள்ளவோ உயர்ஜாதி பெண்களைப் போல் அல்லாமல் வேறு எந்த விதத்திலும் மார்பை மறைத்துக் கொள்ளவோ செய்வதற்கு எதிர்ப்பு இல்லை என்பதால் – விபரம் அனைவரும் அறிந்து நடந்து கொள்ளவும் வேண்டும்”*

பெண்களுக்கு மேலாடைகள் அணியும் உரிமையை வழங்கி திருவிதாங்கூர் மகாராஜாவான உத்திரம் திருநாள் மார்த்தாண்ட வர்மா வெளியிட்ட பிரகடனத்தின் ஒரு பகுதியே மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த விளம்பரத்திற்குக் காரணமான 'மேலாடைக் கலகம்' குறித்து முன் வகுப்புகளில் நீங்கள் விவாதம் செய்திருப்பீர்கள்.

தென்திருவிதாங்கூரில் சாணார் சமுதாய பெண்களுக்கு உயர்ந்த பிரிவு என்ற கருதப்பட்டிருந்த பெண்களைப் போல மேலாடை அணியும் உரிமை இல்லாமல் இருந்தது. கிறிஸ்துவ மிஷனரிகளின் ஆதரவுடன் பொது இடங்களில் மேலாடை அணிந்து தோன்றிய சாணார் பெண்களை உயர்ந்த பிரிவினர் என்று கருதியிருந்தவர்கள் தாக்குதல் நடத்தியும் அவர்களுடைய மேலாடைகளைப் பிடித்து கிழிக்கவும் செய்தனர். தொடர்ந்து தென் திருவிதாங்கூரில் பல இடங்களிலும் கலவரங்கள் ஏற்பட்டன. 1859 ஜூலை 26 அன்று சாணார் பெண்கள் மார்பை மறைப்பதற்கான கட்டுப்பாடுகளை நீக்கிக் கொண்டு திருவிதாங்கூர் மகாராஜா உத்தரவு பிறப்பித்தார்.

*மேலாடை அணிவதற்குள்ள உரிமைக்கான போராட்டத்திற்கு வழிவகுத்த சமூக சூழ்நிலையை விவாதம் செய்து குறிப்பு தயாரிக்கவும்.*

## வைக்கம் சத்தியாகிரகம்




வைக்கம் கோவிலிலிருந்து 100 மீட்டர் தொலைவில் வைக்கப்பட்டிருந்த ஒரு பலகையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

தேசிய இயக்கம் வலுவான வேளையில் பொதுவழியில் சுதந்திரமாக நடப்பதற்காகக் கேரளாவில் நடைபெற்ற முக்கியமான போராட்டமே வைக்கம் சத்தியாகிரகம். வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள சாலையை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்டிருந்த மக்கள் பிரிவினர் நடப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பாகுபாட்டை எதிர்த்து 1924 மார்ச் 30 அன்று சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது.

டி. கே. மாதவன், கே. கேளப்பன். கே. பி. கேசவ மேனோன் போன்றோர் இந்த சத்தியாகிரகத்தை நடத்தினர். தேசியக் கவனத்தை ஈர்த்த வைக்கம் சத்தியாகிரகம் மகாத்துமா காந்தியின் நடுநிலைமைக்குப் பின் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 23 அன்று கோவிலின் மூன்று பக்கங்களிலும் உள்ள சாலைகள் (கிழக்கு வாசலுக்குச் செல்லும் இரண்டு பாதைகள் தவிர) இந்து மதத்தினரின் அனைத்துப் பிரிவினருக்கும் திறந்து கொடுக்கப்பட்டது.

*வைக்கம் சத்தியாகிரகம் தொடர்பாக நாளிதழ் செய்தி தயாரிக்கவும்.*

## குருவாயூர் சத்தியாகிரகம்

இந்து மதத்திலுள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் குருவாயூர் கோவிலுக்குள் நுழைய அனுமதி வேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட போராட்டமே குருவாயூர் சத்தியாகிரகம்.

கே. கேளப்பன், மன்னத்து பத்மநாபன் ஆகியோரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து 1931 நவம்பர் 1 ஆம் தேதி சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. போராட்ட நிகழ்வுகள் வலுப்பெற்ற போது அதிகாரிகளுக்கு சுமார் ஒரு மாதகால அளவு கோவிலை அடைக்கப்பட வேண்டிய நிலை வந்தது. போராட்டத்தில் தன்னார்வ தலைவர்களான ஏ. கே. கோபாலனையும் பி. கிருஷ்ண பிள்ளையையும் சத்தியாகிரகத்தை எதிர்த்தவர்கள் கொடூரமாகத் தாக்கினர். கே. கேளப்பன் கோயிலின் முன் சாகும் வரை உண்ணவிரதம் தொடங்கியதோடு அநேகம் பேர் இதற்கு ஆதரவாகப் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தனர். இறுதியாக காந்திஜியின் அறிவுறுத்தலின் படி உண்ணாவிரதத்திற்கு முடிவு ஏற்பட்டது. கோவில் நுழைவு குறித்து பொதுமக்களின் கருத்தை அறிய பொன்னானி தாலுக்காவில் காங்கிரஸ் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்தியபோது பெரும்பான்மையான மக்களும் இதை ஆதரித்தனர். இவ்வாறு அனைத்து இந்துக்களுக்கும் கோவில் நுழைவுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகக் குருவாயூர் சத்தியாகிரகத்தால் முடிந்தது.

### சவர்ண ஜாதா

*வைக்கம் சத்தியாகிரகத்திற்கு ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் மன்னத்து பத்மநாபன் தலைமையில் வைக்கம் முதல் திருவனந்தபுரம் வரை ஊர்வலம் நடத்தப்பட்டது. இது 'சவர்ண ஜாதா' என்று அழைக்கப்படுகிறது.*


படம் 8.19 • டி. கே. மாதவன்


படம் 8.20 • கே. கேளப்பன்



படம் 8.21 ● ஏ. கே. கோபாலன்



படம் 8.22 ● பி. கிருஷ்ண பிள்ளை



படம் 8.24 ● சி. கேசவன்

## நவீன காலத்தின் மாபெரும் அதிசயம்

*[Miracle of modern times]*



படம் 8.23 ● சித்திரை திருநாள் பாலராம வர்மா

*1936 நவம்பர் 12 அன்று திருவிதாங்கூர் மன்னராகயிருந்த சித்திரை திருநாள் பாலராம வர்மா ஆலயப் பிரவேசன விளம்பரத்தை வெளியிட்டார். இதன் மூலம் திருவிதாங்கூரில் உள்ள கோவில்கள் அனைத்து பிரிவினருக்கும் திறந்து கொடுக்கப்பட்டது. காந்திஜி இந்த அறிக்கையை நவீன காலத்தின் மிகப்பெரிய அதிசயம் என்று வர்ணித்தார்.*

## பாலியம் சத்தியாகிரகம்

தீண்டாமைக்கு எதிராக கேரளத்தில் நடந்த மற்றொரு போராட்டமே 1947-48 இல் நடந்த பாலியம் சத்தியாகிரகம். கொச்சியில் உள்ள சேந்தமங்கலத்தில் பாலியத்தச்சனின் வீட்டிற்கு முன் உள்ள சாலை வழியாக நடந்து செல்ல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சனைக்காக அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் இணைந்து நடத்திய போராட்டமே பாலியம் சத்தியாக்கிரகம். சி. கேசவன் போன்றவர்கள் தலைமை தாங்கிய சத்தியாகிரகத்தை எதிர்கொள்ள அரசு கைது செய்தலையும் தடியடி நடத்துவதையும் பயன்படுத்தியது. 1948 இல் கொச்சியில் அனைத்து கோவில்களும் ஜாதி பேதமின்றி அனைவருக்கும் திறந்து கொடுத்தபோது பாலியம் சாலையில் செல்லுவதற்கான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

*'குடி உரிமைகளுக்கு வேண்டியுள்ள போராட்டங்களும் சாதனைகளும்' என்ற தலைப்பில் குழு விவாதம் ஏற்பாடு செய்யவும்.*

*கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையை நிரப்பவும்.*

| குடி உரிமைகளுக்காக நடந்த போராட்டங்கள் | சூழ்நிலை |
|---|---|
| மேலாடைக் கலகம் | மேலாடை அணிய மறுப்பு |
| வைக்கம் சத்தியாக்கிரகம் | |
| குருவாயூர் சத்தியாக்கிரகம் | |
| பாலியம் சத்தியாக்கிரகம் | |

## தேசிய உணர்வின் போராட்டத் தீ



*"வருக வருக சகோதரரே இது ஒரு போராட்டத்திற்கான நேரம் ஒன்றாய் கைகோர்த்து கால் நடையாக செல்வோம். பிரிட்டனை விரட்டுவோம் சட்டங்களை மாற்றுவோம். தீய நீதிக்கு துணை நிற்க வேண்டாம். உப்பை நாம் தயாரிக்க வேண்டும். யார் வந்து எதிர்த்தாலும் கொஞ்சம் கூட விட்டுக்கொடுக்காமல் கோபப்படாமல் நிற்க வேண்டும்."*

1930 இல் உப்பு சத்தியாக்கிரகத்தின் பகுதியாக நடந்த ஊர்வலத்தில் பாடுவதற்காக அம்சி நாராயணப் பிள்ளை எழுதிய பாடல் வரிகளின் பொருளாகும் இவை. சத்தியாக்கிரக போராட்டத்தின் முறைகள் என்ன என்பதை இந்த வரிகளில் இருந்து கண்டுபிடிக்கலாமா?

சத்தியாக்கிரகிகள் பாடல்கள் பாடியும் கோஷங்களை முழக்கியும் பையனூர் கடற்கரைக்கு ஊர்வலமாகச் சென்றனர். வழியில் ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர். கேரளத்தில் தேசிய இயக்கம் எவ்வளவு துடிப்பாக இருந்தது என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

கேரளத்தில் தேசிய இயக்கத்தின் வளர்ச்சி மலபாரிலும் கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வோம்.



*படம் 8.25 • சி. சங்கரன் நாயர்*



*படம் 8.26 • வழக்கறிஞர் ஜி. பி. பிள்ளை*

*கேரளத்தைப் போலவே தேசிய அளவிலும் காங்கிரசில் குறிப்பிடத்தக்க மலையாளிகள் இருந்தனர். சி. சங்கரன் நாயரும், பாரிஸ்டர் ஜி. வி. பிள்ளையும் இவர்களில் முக்கியமானவர்கள்.*

### மலபார்

கேரளத்தின் பிற பகுதிகளை விட மலபாரில் தேசிய இயக்கம் அதிக வலுவாக இருந்தது. மலபார் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் உருவாக்கமும் ஹோம் ரூல் லீக்கின் செயல்பாடுகளும் தேசிய இயக்கத்தைத் தூண்டின. கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்களுக்கு மலபார் முழுவதும் பெரும் ஆதரவு கிடைத்தது. போராட்டத்தின் தொடர்பாக மக்கள் வெளிநாட்டு பொருட்கள், நீதிமன்றங்கள், கல்விக்கூடங்கள் போன்ற அரசு நிறுவனங்களைப் புறக்கணித்தனர். போராட்டத்திற்கு பெண்களும் மாணவர்களும் சிறந்த பங்காற்றினர்.

சி. குஞ்சி ராம மேனோன், கே. கேளப்பன், யு. கோபாலமேனோன், கே. பி. கேசவமேனோன், முகம்மது அப்துர் ரஹிமான் சாஹிப், இ. மொய்து மௌலவி, மொய்யாரத் சங்கரன் போன்றோர் முக்கிய தலைவர்களாக இருந்தனர்.



*படம் 8.27 • கே. பி. கேசவ மேனோன்*

சட்ட மறுப்பு இயக்கத்தின் சார்பாக காந்திஜியின் தலைமையில் அகில இந்திய அளவில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்த போது அதன் அதிர்வலைகள் கேரளத்திலும் உண்டானது. கேரளத்தில் உப்பு சத்தியாக்கிரகத்தின் மையமாக மலபாரில் பையனூர் இருந்தது. கே. கேளப்பன் சத்தியாக்கிரகத்தை நடத்தினார். கேரளாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சத்தியாக்கிரகிகள் பையனூர் கடற்கரைப்



படம் 8.28 ● முகம்மது அப்துல் ரஹ்மான் ஸாகிப்

பகுதியில் வந்து சேரவும் அதில் பங்கு பெறவும் செய்தனர். மேலும் முகம்மது அப்துல் ரஹ்மானின் தலைமையில் சத்தியாக்கிரகிகள் கோழிக்கோட்டின் கடற்கரையில் சட்டத்தை மீறி உப்பு தயாரித்தனர். அங்கே கூடியிருந்த மக்கள் காவல் துறையினரின் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளாயினர். வெளிநாட்டுப் பொருட்களை புறக்கணித்தலும் மதுபானக் கடை மறியலும் காதி பிரச்சாரமும் போராட்டத்தின் பகுதியாக இருந்தன.

### கேரளத்தில் காந்திஜி

*1920* இல் காந்திஜியும் மௌலான சௌகத் அலியும் ஒத்துழையாமை – கிலாபத் போராட்டத்தின் விளம்பரத்திற்காக கோழிக்கோடு வந்தனர். இது காந்திஜியின் முதல் கேரள வருகையாகும். இந்தியர்கள் வெவ்வேறு மதத்தினர் என்றாலும் நமது தாய்நாட்டின் குழந்தைகள் என்றும் நம்முடைய இன்ப, துன்பங்கள் ஒன்றுதான் என்றும் தலைவர்கள் வலியுறுத்திய போது உற்சாகத்துடன் மக்கள் அதை ஏற்றுக்கொண்டனர்.

*மலபாரில் நடந்த சட்ட மறுப்பு போராட்டத்தின் செயல் திட்டங்கள் எவை? விவாதித்து குறிப்பு ஒன்று தயாரிக்கவும்.*

## மலபார் கலகம்

மலபாரில் பிரிட்டிஷ் எதிர்ப்பு – நில உடமை எதிர்ப்பு இயக்கமாக இருந்தது மலபார் கலகம். ஒத்துழையாமை – கிலாபத் போராட்டத்தோடு முன்னரே மலபாரில் தீவிரமாகயிருந்த குத்தகைதாரர் இயக்கம் சேர்ந்த போது அது மலபார் கலகமாக மாறியது. 1921 –இல் ஏறநாடு, வள்ளுவநாடு, பொன்னானி தாலுகாக்களில் கலகம் பரவியது. நில உடமையாளர்களும் அரசு அதிகாரிகளும் போராட்டத்தில் இருந்த வேளாண்மை செய்பவர்கள் உட்பட பலருக்கு மரணம் சம்பவித்தது. மலபார் சிறப்பு காவல் துறையையும் ராணுவத்தையும் பயன்படுத்தி பிரிட்டிஷ் அரசு கலகத்தை அடக்கியது. மலபார் கலகத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் முக்கியமானவர்கள் ஆலிமுசலியார், வாரியன்குன்னத்து குஞ்ஞுகம்மது ஹாஜி, எம்.பி. நாராயண மேனோன் ஆவர்.



படம் 8.29 ● மலபார் கலகத்தோடு தொடர்புடைய படம்

### சரக்கு வண்டி படுகொலை

*இது மலபார் கலகத்தின் போது உண்டான நிகழ்வாகும். பிரிட்டீஷ் காவல் அதிகாரி ஹிட்ச்காக்கின் மேற்பார்வையில் சுமார் நூறு கைதிகளைத் திரூரிலிருந்து மலபாரின் வெளியே உள்ள சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்ல காற்றும் வெளிச்சமும் புகாத சரக்கு இரயிலில் ஏற்றினர். பயணத்தினிடையே சுவாசிப்பதற்குக் காற்றோ குடிப்பதற்குத் தண்ணீரோ கிடைக்காமல் வண்டியிலேயே பாதிக்கும் மேலானோர் மரணமடைந்தனர்.*




படம் 8.30 ● பூக்கோட்டூர் போர் நினைவுகள்

### திரூரங்காடி, பூக்கோட்டூர், பாண்டிக்காடு கலவரங்கள்

*பூக்கோட்டூரில் கிலாபத் கமிட்டி செயலாளர் வடக்கே வீட்டில் முகமதுவை திருட்டுக் குற்றம் சுமத்தி கைது செய்ய பிரிட்டிஷ் காவல் துறை முயற்சித்தது. இதனைத் தொடர்ந்து முதலில் திரூரங்காடியிலும் பின்னர் பூக்கோட்டூரிலும் பாண்டிக்காட்டிலும் பிரிட்டிஷ் காவல் துறைக்கும் மக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.இது மலபார் கலகத்தின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வாகும்.*

மலபார் கலகம் இந்திய சுதந்திர போராட்டத்திலேயே முக்கிய நிகழ்வாக மாறியது எவ்வாறு என்பதை விவாதம் செய்து குறிப்பு தயாரிக்கவும்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் (Quit India Movement)

1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அகில இந்திய அளவில் பரவலாக ஆரம்பிக்கப்பட்ட வெள்ளையனே வெளியேறு போராட்டத்தைத் தொடர்ந்து காந்திஜி உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அதனால் பிற காந்தியன் போராட்டங்களில் இருந்து மாறுபட்டு இது வன்முறை போராட்டமாக மாறியது. கேரளத்தில் மலபார், கொச்சி, திருவிதாங்கூர் போன்ற பகுதிகளில் உள்ள பெண்கள், மாணவர்கள் உட்பட்ட மக்கள் பிரிவினர் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றனர். இதன் பகுதியாக நடந்த முக்கியமான நிகழ்வு கீழரியூர் குண்டு வெடிப்பு வழக்கு ஆகும்.

### கீழரியூர் வெடிகுண்டு வழக்கு

*வெள்ளையனே வெளியேறு போராட்டக்காலத்தில் கோழிக்கோடு மாவட்டத்தில் கொயிலாண்டிக்கு அருகே உள்ள கீழரியூரில் வைத்து ஒரு பிரிவு போராட்டக்காரர்கள் வெடிகுண்டு தயாரித்தனர். பல இடங்களில் ஆள் அபாயம் இல்லாத குண்டுவெடிப்பு நடத்தி பிரிட்டிஷ்காரர்களைப் பயமுறுத்துவதே இதன் நோக்கமாகும். 1942 நவம்பர் 17 அன்று ஆங்கிலேயர்களை அதிரச் செய்த வெடிவைப்புகள் நடந்தன. இதற்கு பின்னணியில் செயல்பட்டவர்கள் டாக்டர் கே. பி. மேனோன் உட்பட உள்ளவர்களை பிரிட்டீஷ் காவல் துறை கைது செய்து கடுமையான சிறை தண்டனையும் விதித்தது.*

## கொச்சி

மன்னர் ஆட்சி நிலவி இருந்த கொச்சியில் பிரிட்டிஷ் அதிகாரம் நிறுவப்பட்டது முதல் அதற்கு எதிராக மக்கள் எழுச்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. நல்லாட்சி நிறுவுக என்பதே ஆரம்ப கால எழுச்சிகளின் நோக்கமாகயிருந்தது.பின்னர் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டங்கள் தொடங்கின.

## மின்சார வேலை நிறுத்தம்

திருச்சூரில் மின்சார விநியோகப் பொறுப்பை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க கொச்சியின் திவானான ஆர். கே.

சண்முகம் செட்டி தீர்மானித்தார். இதற்கு எதிராக 1936 இல் மக்கள் போராட்டங்கள் எழுந்தன. போராட்டத்தை அரசாங்கம் அடக்கினாலும் மக்களை அணிதிரட்ட இந்தப் போராட்டம் உதவியது.



படம் 8.31 ● இக்கண்ட வாரியர்



படம் 8.32 ● பனம்பிள்ளி கோவிந்த மேனோன்

## கொச்சி ராஜ்ய பிரஜா மண்டலம்

பொறுப்பான நிர்வாகத்தை அடைவது என்ற லட்சியத்தோடு 1941–இல் கொச்சி ராஜ்ய பிரஜா மண்டலம் என்ற பெயரில் ஒரு சங்கம் உருவானது. இக்கண்ட வாரியார், பனம்பிள்ளி கோவிந்த மேனோன், வி. ஆர். கிருஷ்ணன், எழுத்தச்சன் ஆகியோர் பிரஜா மண்டலத்தின் செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்கினர். பொறுப்பான ஆட்சி கிடைப்பதற்காக நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு 1946 ஜூலை 29 'பொறுப்பான ஆட்சி தினமாக' கொண்டாடப்படுகிறது. பின்னர் பிரஜா மண்டலம் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்தது. இக்கண்ட வாரியர் பிரதமராக கொச்சியில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை அதிகாரத்தில் வந்தது.

## திருவிதாங்கூர்

திருவிதாங்கூர் மக்களின் அரசியல் உணர்வைத் தட்டி எழுப்பிய ஆரம்பகால போராட்டங்களாக மலையாளி மெமோரியலும் ஈழவ மெமோரியலும் இருந்தன.

**'நிவர்த்தனம்'**

சட்ட மறுப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகிவற்றிலிருந்து வேறுபடுத்தி காட்டுவதற்காக போராட்டத்தை 'நிவர்த்தனம்' என்று அழைத்தனர். இந்தப் பெயரை ஐ.சி. சாக்கோஎன்ற மொழிப் பண்டிதர் வழங்கினார்.

| மலையாளி மெமோரியல் | ஈழவ மெமோரியல் |
|---|---|
| • திருவிதாங்கூரில் அரசு பணிகளில் திருவிதாங்கூர் மக்களுக்கு போதிய முக்கியத்துவம் வேண்டும் என்ற கோரிக்கை. | • அரசு பணிகளில் ஈழவர்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கை |
| • 1891 ஜனவரி 1இல் இந்த கோரிக்கையை முன்வைத்து மக்கள் கையொப்பமிட்ட மனு மகாராஜாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | • 1896 செப்டம்பர் 3 இல் ஈழவ சமுதாய அங்கத்தினர்கள் கையொப்பமிட்ட மனுவை மகாராஜாவிடம் சமர்ப்பித்தனர் |
| • தலைமை: ஜி.பி. பிள்ளை | • தலைமை: டாக்டர் பி. பல்பு |



படம் 8.33 ● பட்டம் தாணு பிள்ளை

## நிவர்த்தனா இயக்கம் (Abstention Movement)

திருவிதாங்கூரில் நடந்த ஒரு சக்தி வாய்ந்த அரசியல் போராட்டமே 1932 இல் நடைபெற்ற நிவர்த்தனா போராட்டம். கிறிஸ்தவ, முஸ்லிம், ஈழவ சமுதாயத்தினர் அரசியல் சமிதியை உருவாக்கி கூட்டாக போராட்டம் நடத்தினர். இடஒதுக்கீடு வேண்டும் என்பதே கோரிக்கையாக இருந்தது. சி கேசவன், என். வி. ஜோசப், பி.கே. குஞ்சு ஆகியோர் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

திருவிதாங்கூரில் பொறுப்பான ஆட்சிக்காக திருவிதாங்கூர் மாநில காங்கிரஸின் மேற்பார்வையில் செயல்பாடுகள் நடைபெற்றன. பட்டம் தாணு பிள்ளை திருவிதாங்கூர் மாநில காங்கிரசின் முதல் தலைவராக இருந்தார். மனுக்கள் மூலமாகவும் நேரடி போராட்ட நடவடிக்கைகள் வழியாகவும் இவர்கள் போராட்டச் செயல்பாடுகளைத் திட்டமிட்டனர்.



*படம் 8.34 ● கே. ராமகிருஷ்ண பிள்ளை*

### சுதேசாபிமான நாளிதழ்

*வக்கம் அப்துல் காதர் மௌலவிக்குச் சொந்தமான சுதேசாபிமானி செய்தித்தாளின் ஆசிரியராக கே. ராமகிருஷ்ண பிள்ளை இருந்தார். அரசின் தவறான கொள்கைகளையும் ஊழலையும் செய்தித்தாளின் வாயிலாக அவர் வெளிப்படையாக எதிர்த்தார். திருவிதாங்கூர் திவானாக இருந்த பி. ராஜ கோபாலச்சாரியை கடுமையாக விமர்சித்து ஒரு கட்டுரைத் தொடரை வெளியிட்டார். இதைத்தொடர்ந்து ராமகிருஷ்ண பிள்ளை திருவிதாங்கூரிலிருந்து நாடு கடத்தப்பட்டதோடு சுதேசாபிமானி செய்தித்தாளும் தடை செய்யப்பட்டது.*

## காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சி

சோசியலிசக் கருத்துக்களில் ஆர்வமுள்ள காங்கிரஸ் ஆர்வலர்கள் 1934 இல் கே. கேளப்பன் தலைமையில் கோழிக்கோட்டில் ஒரு கூட்டம் நடத்தினர். இந்திய தேசிய காங்கிரஸுக்குள் ஒரு 'காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சி' யை உருவாக்க தீர்மானித்தனர். பி. கிருஷ்ணபிள்ளை, ஈ. எம். சங்கரன் நம்பூதிரிப் பாடு, ஏ. கே. கோபாலன் ஆகியோர் இதனை நடத்தினர். காங்கிரஸ் சோசியலிஸ்ட் கட்சியின் தலைமையில் கேரளாவில் பல வேளாண் போராட்டங்கள் நடைபெற்றன.

### புன்னப்புரை – வயலார் போராட்டம்

*திருவிதாங்கூரின் திவானாகயிருந்த சி. பி. ராமசுவாமி ஐயரின் கொடுங்கோன்மைக்கு எதிராகவும் பொறுப்பான ஆட்சி நிறுவுவதற்காகவும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது, ஆலப்புழையின் புன்னப்புரையிலும் வயலாரிலும் நடந்த போராட்டமானதால் இது புன்னப்புரை – வயலார் போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. 1946 இல் வேளாண் தொழில் செய்பவர்களும் தொழிலாளிகளும் சேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.*

*தேசிய இயக்கத்தின் சார்பாக மலபார், கொச்சி, திருவிதாங்கூர் ஆகிய இடங்களில் நடந்த மக்கள் போராட்டங்களும் முக்கிய நிகழ்வுகளும் உள்ள ஒரு ஆல்பம் தயாரிக்கவும்.*

| மலபார் | கொச்சி | திருவிதாங்கூர் |
|---|---|---|
| | | |

## சுதந்திரத்திற்காக பெண்கள் முன்னேற்றம்



படம் 8.35 ● காந்திஜி

*"உலகின் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும் நம்முடைய தாய் நாடு. இங்கு நூறு பேர்களில் மூன்றோ, நான்கோ பேருக்கு மட்டுமே வயறு நிறைய உணவு உண்ணவும் உடை உடுத்தவும் முடிகிறது. ஆழமாக சிந்தித்தால் அதற்கு கூட நமக்கு வழியில்லை. இதைப் புரிந்து கொள்பவர்கள் நீங்களானால் பசித்தவர்களுக்கும் முழு பட்டினியால் வாடுபவர்களுக்கும் உதவி செய்ய கூடுதல் என்று நினைப்பதில் ஒரு பங்கை என்னிடம் தரவும். அதை நான் ஆடைகளாகவும் உணவாகவும் மாற்றி கிடைக்க வேண்டிய கைகளுக்கும் வாய்களுக்கும் வழங்குவேன். உங்களது கருணை கொண்டு ஒரு வயறு நிறையவும் ஒரு உடல் நிர்வாணம் மறைக்கவும் முடியுமானால் இந்த தருணத்தில் செய்யக்கூடிய வேறு எந்த நற்செயலுமில்லை" பெண்கள் திரளாகக் கூடியிருந்த வடகரை பொதுக் கூட்டத்தில் மகாத்மா காந்தி இவ்வாறு பேசி முடித்த போது பலரும் குற்ற உணர்ச்சியுடன் தலை தாழ்த்தினார். ஒரு சிறுமி காந்திஜியின் அருகில் ஓடி வந்தாள் ....... தங்க வளையல்களையும் காதணிகளையும் கழற்றி நீட்டினாள். திடீரென்று திகைத்துப் போன காந்திஜி 'நல் மனதுடனா இந்தத் தீர்மானம் என்று கேட்டார். அவள் 'ஆம்' என தலையசைத்தாள். உன் பெயர் என்ன குழந்தாய்? அவள் கௌமுதி என்று பதில் கூறினாள். உன் பெற்றோரிடம் என்ன சொல்வாய்? ஆபரணமில்லாத பெண்ணை வேண்டாம் என்று வருங்கால கணவன் பிடிவாதம் பிடித்தால் நீ என்ன செய்வாய்? அப்படி பிடிவாதம் பிடிக்கும் ஒரு கணவன் எனக்கும் வேண்டாம் என்று நானும் பிடிவாதமாக அடம் பிடிப்பேன்' என்றாள்.*



படம் 8.36 ● கௌமுதி டீச்சர்

மேலே கூறப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவத்தைப் படித்தீர்களா? வாழ்க்கையில் பின்னர் ஒருபோதும் ஆபரணமணியாமல் காதி மட்டும் உடுத்தி எளிமையான வாழ்க்கை வாழ்ந்திருந்தார் கௌமுதி டீச்சர். இவ்வாறு பல மலையாளப் பெண்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பாகமாக தன்னலமற்றத் தியாக செயல்களைச் செய்துள்ளனர்.



படம் 8.37 ● ஏ. வி. குட்டிமாளு அம்மா



படம் 8.38 ● அம்மு சுவாமிநாதன்



படம் 8.39 ● அக்கம்மா செரியான்



படம் 8.40 ● ஆனி மஸ்கிரீன்.

ஒத்துழையாமை, சட்ட மறுப்பு போன்ற போராட்டங்களின் வாயிலாக இந்தியாவில் தேசிய இயக்கம் வலுப்பெற்ற காலத்தில் கேரளத்திலும் பெண்களின் தீவிர பங்களிப்பு இருந்தது. காந்திஜியின் செய்தியை ஏற்றுக்கொண்டு உப்பு தயாரித்தல், வெளிநாட்டு ஆடைகளை புறக்கணித்தல், காதி ஆடைகளை நெசவு செய்து பயன்படுத்துதல் போன்ற செயல்களில் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டனர். போராட்டக் காலத்தில் தீண்டாமை ஒழிப்பு – ஹரிஜன மேம்பாடு போன்ற நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க பெண் பங்கேற்பு இருந்தது.போராட்டங்களின் ஒரு பகுதியாக அநேக பெண்கள் சிறைவாசம் அனுபவித்தனர். மலபாரில் ஏ. வி. குட்டிமாளு அம்மாவும் அம்மு சுவாமிநாதனும் திருவிதாங்கூரில் அக்கம்மா செரியானும் ஆனி மஸ்கிரீனும் இந்தக் காலகட்டத்தில் தேசிய போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்கள்.



படம் 8.41 • சி. குஞ்ஞிக்காவம்மா

### சி. குஞ்ஞிக்காவம்மா

*காந்திஜி முதன் முதலில் கேரளத்திற்கு வருகை தந்த போது தங்க நூலில் கட்டிய ஒரு துளசி மாலையை மகனைக் கொண்டு காந்திஜியின் கழுத்தில் அணிவித்தார். "பரிசை ஏற்க வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் காதி ஆடைகள் மட்டுமே அணிவேன் என்று உறுதிமொழி தர வேண்டும்" – என்று காந்திஜி வலியுறுத்தினார். அந்த உறுதி மொழியை வாழ்நாள் முழுவதும் கடைபிடித்து போராட்டங்களின் பாகமாக பலமுறை சிறைவாசம் அனுபவித்தார். 1938 இல் கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹரிஜன மேம்பாடு, காதி பிரச்சாரம் போன்றவற்றில் தீவிரமாக இருந்தார்.*

*'தேசிய இயக்கமும், கேரளாவில் பெண்களின் பங்களிப்பும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும்.*

## மாநில உருவாக்கம்

*"புவியியல், மொழியியல், கலாச்சாரம், பொருளாதாரம், நிர்வாகம் ஆகிய கருத்தாய்வுகளின் அடிப்படையில் கேரளாவின் பகுதிகளாக கருதக்கூடிய திருவிதாங்கூர், கொச்சி ஆகிய நாட்டரசுகளும், பிரிட்டிஷ் இந்திய பகுதிகளும் மாகியும் ஒன்றிணைக்கப்பட்டு இந்திய யூனியனில் உட்படும் சுயாட்சி அதிகாரம் உள்ள ஒரு அமைப்பாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும்... இந்த அமைப்பின் ஆட்சியில் அனைத்து அதிகாரங்களும் மக்களிடம்தான் இருக்க வேண்டும்."*

[1947 இல் திருச்சூரில் நடைபெற்ற ஐக்கிய கேரள மாநாட்டின் தீர்மானத்திலிருந்து]

மேலே கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் உள்ள கோரிக்கைகளைப் படித்தீர்களா? பல்வேறு நிர்வாகப் பகுதிகளாய் இருந்த கேரளத்தை ஒன்றிணைத்து கேரளம் உருவாகுவதற்கான தீர்மானம் இது. ஐக்கிய கேரளாவிற்காக நடந்த முக்கிய நிகழ்வுகளை ஆராய்வோம்.

1921 இல் ஒற்றப்பாலத்தில் நடந்த அகில கேரள மாகாணமாநாட்டில் மலபார், கொச்சி, திருவிதாங்கூர் ஆகிய இடங்களில் இருந்து உள்ள பிரதிநிதிகள் பங்கேற்றனர். 1928 இல் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் நடைபெற்ற பையனூர் காங்கிரஸ் மாநாடு எதிர்காலத்தில் சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு உருவாக்கும்போது கேரளத்தை தனிமாநிலமாக உருவாக்க வேண்டும் எனக் கோரியது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய கேரளம் என்ற லட்சியத்தை அடைவதற்காக செயல்படும் கமிட்டி உருவாக்கப்பட்டு பல்வேறுஇடங்களில் அதன் மாநாடுகள் நடத்தப்பட்டன. 1949 ஜூலை 1 அன்று திருவிதாங்கூரும் கொச்சியும் இணைக்கப்பட்டு திரு – கொச்சி உருவாக்கப்பட்டது. இது கேரள மாநிலம் என்ற லட்சியத்திற்கான முக்கிய படிக்கல்லாக அமைந்தது.



മലയാളിക്ലബ്ബ് ഭാരവാഹികളുടെ
ഒരു അപേക്ഷ.

അല്ലയോ കേരളീയമഹാജനങ്ങളേ,

ഇവിടെയുള്ള മലയാളികളായ ചില പൌരപ്രമാണികളുടെയും വിദ്യാൎത്ഥികളുടെയും ഉത്സാഹഫലമായ പ്രസ്തുത സ്ഥാപനം ഉണ്ടായിട്ട് ഇപ്പോൾ ഏകദേശം 20 വൎഷമായി. ഈ പട്ടണത്തിൽ പല ആവശ്യാൎത്ഥം വന്നുചേരുന്ന കേരളീയരുടെ സംഖ്യ വൎദ്ധിച്ചുവന്നതോടുകൂടി, അവൎക്ക് പരസ്പര സമ്മേളനത്തിനുള്ള സൌകൎയ്യവും സ്വജന്മഭൂമിയേയും സമുദായത്തേയും സംബന്ധിച്ച കാൎയ്യങ്ങളിൽ ഏകോപിച്ച വിചാരണയും പ്രവൃത്തിയും അത്യന്താപേക്ഷിതമായിത്തീൎന്നു. വിദ്യാൎത്ഥികളുടെ സംഗതിയിൽ ഇവ ഒഴിച്ചുകൂടാത്തവതന്നെയാണെന്ന് ഏതൊരു നാഗരികനും സമ്മതിക്കുന്നതുമാണ്. ഉയൎന്നതരം വിദ്യാഭ്യാസത്തിന്നുവേണ്ടി ഇവിടെ വരുന്ന മലയാളികളുടെ എണ്ണം കൊല്ലംതോറും പതിന്മടങ്ങു വൎദ്ധിക്കുന്നതുമുണ്ട്. അവർ അവിടവിടെ ഓരോ വിദ്യാമന്ദിരങ്ങളിൽ ചിന്നിച്ചിതറിക്കിടക്കുന്നതുകൊണ്ട്, ഇവിടെയുള്ള കാലത്തോളം അന്യോന്യം കണ്ടു പരിചയപ്പെടുവാനൊ, ഉൽകൃഷ്ടവിദ്യാഭ്യാസത്തിന്റെ പ്രത്യക്ഷചിഹ്നമായ നിത്യസൌഹൃദത്തെ സമ്പാദിപ്പാനൊ ഇടയാകുന്നില്ല. വിദ്യാഭ്യാസശേഷമാകട്ടെ, ഈ ദേശം വിട്ടുപോകുന്നതുകൊണ്ട് അവരുടെ അനന്തരഗാമികളെക്കുറിച്ച് അറിയുവാൻ മാൎഗ്ഗവുമില്ല. ഈ വക ന്യൂനതകൾ എന്നന്നേയ്ക്കും പരിഹരിക്കേണമെന്നായിരുന്നു ക്ലബ്ബിന്റെ കാരണഭൂതന്മാരുടെ ഉദ്ദേശമെന്നു പ്രത്യേകിച്ചു പറയേണ്ടതില്ലല്ലൊ. ജാതിമതവ്യത്യാസം കൂടാതെ മലയാളികളായ എല്ലാവൎക്കും ഇതിലെ അംഗമാവാ

*ஐக்கிய கேரள இயக்கம் தொடர்பாக மதராஸ் மலையாளி கிளப் வெளியிட்ட ஒரு அறிவிப்பு*



படம் 8.43 • கேரளம்


படம் 8.42 • கொதிக்கல்லு

*கொச்சி –திருவிதாங்கூர் நாட்டரசுகளுடைய எல்லையில் நிறுவப்பட்டுள்ள கற்களே கொதிக்கல்லு என்று அழைக்கப்படுகின்றன. 'கொ' என்பது கொச்சி 'தி' என்பது திருவிதாங்கூரையும் குறிக்கிறது.*

சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவில் மொழி அடிப்படையில் மாநிலங்கள் புனரமைக்கப்பட ஃபசல் அலி ஆணையம் உருவாக்கப்பட்டது. ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மலபாரையும் திரு கொச்சியையும் இணைத்து 1956 நவம்பர் 1 அன்று கேரளம் உருவானது. திருவிதாங்கூரின் பகுதியாய் இருந்த தோவாளை, அகத்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுகாக்கள் மதராஸ் மாநிலத்தோடு. (இன்றைய தமிழ்நாடு) சேர்க்கப்பட்டன. தெற்கு கர்நாடகாவின் பகுதியாக இருந்த காசர்கோடு தாலுகா கேரளத்தோடு சேர்க்கப்பட்டது.


படம் 8.44 • ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட்

*மலையாள மொழி பேசுபவர்களுக்காக ஒரு மாநிலம் என்ற நோக்கத்தைக் கொண்ட ஐக்கிய கேரள இயக்கத்தின் செயல்பாடுகளும், கேரள மாநில உருவாக்கமும் உள்ளிட்ட ஒரு டிஜிட்டல் பதிப்பிற்கு தேவையான குறிப்புகளைத் தயாரிக்கவும்.*

1957 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பொதுத் தேர்தல் நடத்தப்படவும் ஏப்ரல் 5 இல் ஈ.எம்.எஸ். நம்பூதிரிப் பாடு தலைமையிலான முதலமைச்சரவை கேரளாவில் அதிகாரத்துக்கு வந்தது.

## தொடர் செயல்பாடுகள்

- 'தேசிய உணர்வை வளர்ப்பதில் வட்டார எதிர்த்து நிற்றல்களின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு செயல் திட்டம் தயாரிக்கவும்.
- 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் கேரளாவில் சமூக மறுமலர்ச்சிக்காகச் செயல்பட்ட சமூக சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறு வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் தயாரிக்கவும். படங்களையும் செய்திகளையும் உட்படுத்தி அதைக் கவர்ச்சிகரமாக்கவும்.
- கேரளாவில் குடி மக்கள் உரிமைக்காக நடத்தப்பட்ட கூடுதல் போராட்டங்களைக் கண்டுபிடித்து ஆய்வுக் குறிப்பு தயாரிக்கவும்.
- ஐக்கிய கேரள இயக்கம், கேரள மாநில உருவாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய டிஜிட்டல் பதிப்பு தயாரிக்கவும்.

அலகு 9

# மக்களாட்சி: சொல்விளக்கமும் பரவலும்






*படம் 9.1*

ஒரு மக்களாட்சி அமைப்பில் தேர்தலின் முக்கியத்துவத்தைக் காட்டும் உரையாடல் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. உரையாடலில் இருந்து என்னென்ன கருத்துகள் தெரிந்து கொள்ள முடிகிறது?

•

•

•

தேர்தலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும் தான் மக்களாட்சி பற்றியுள்ள பொதுவான கருத்து.

ஆனால் இது மட்டும் இருக்கமானால் இந்த அமைப்பை நாம் மக்களாட்சி என்று அழைக்க முடியுமா? இல்லை எனச் சொல்லலாம். ஏனென்றால் தேர்தல்கள் வழியாக ஆட்சிக்கு வந்த சர்வாதிகாரிகளின் வரலாறும் உண்டு.

**மக்களாட்சி என்றால் என்ன?**

மக்களாட்சி என்பது ஒரு அரசாங்க அமைப்பு மட்டுமல்ல, அது ஒரு மதிப்பும் கூட ஆகும். சுதந்திரம், சமத்துவம், நீதி, உரிமைகள் போன்ற கருத்துகளின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டதே மக்களாட்சி. இந்த விழுமியங்களை மதிக்கவும் அவற்றை மீறாமல் ஆட்சி செய்யும் அரசாங்கங்களே மக்களாட்சி முறையில் உள்ளது. அதாவது அரசின் செயல்பாடுகளுக்கு வரையறை உண்டு. இந்த வரையறைகளை நிர்ணயம் செய்வது அரசியலைமைப்புச் சட்டம் ஆகும். எனவே, நவீன மக்களாட்சியை நாம் அரசியலமைப்பின் ஆட்சி எனக் கூறலாம்.

நாம் இன்று காணும் மக்களாட்சி ஒரு நீண்ட செயல்பாட்டு முறையில் உருவாக்கப்பட்டது. மக்களாட்சியின் பரிணாம வளர்ச்சி பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

## கிரீஸ்: மக்களாட்சியின் பிறப்பிடம்

மக்களாட்சி முறையின் தோற்றம் பழங்கால கிரேக்க நாட்டின் நகர நாடுகளிலிருந்து உருவானது. நகர நாடுகளில் மிகவும் முக்கியமானது ஏதென்ஸ். மக்கள் என்ற பொருள் தரும் டெமோஸ் (Demos), அதிகாரம் என்ற பொருள் தரும் க்ரேட்டோஸ் '(Kratos) என்னும் கிரேக்க சொற்களிலிருந்து மக்களின் அதிகாரம் என்ற பொருள் தரும் 'டெமாக்கிரசி' (Democracy) என்ற சொல் உருவானது. தனிநபர் சுதந்திரமும் தனிநபர் திறன்களை மதிக்கும் கலாச்சாரமும் ஏதென்சில் காணப்பட்டது. நாட்டுடன் தொடர்புடைய அனைத்து தீர்மானங்களையும் குடிமக்கள் நேரடியாக முடிவு செய்தனர். அதேபோல இராணுவ அதிகாரிகளையும் நீதிபதிகளையும் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு ஆட்சியிலும் சட்டம் இயற்றுதலிலும் குடிமக்கள் நேரடியாகப் பங்கெடுக்கும் மக்களாட்சி அமைப்பை "நேரடி மக்களாட்சி" (Direct Democracy) என்கிறோம். ஆனால், ஏதென்ஸில் நிலைபெற்றிருந்த மக்களாட்சி அமைப்பில் அடிமைகளுக்கும் பெண்களுக்கும் பங்களிப்பு வழங்கப்படவில்லை என்பது அம்மக்களாட்சியின் மிகப்பெரிய குறைபாடு ஆகும்.



படம் 9.2 ● பண்டையக்கால ஏதென்ஸ்

## நேரடி மக்களாட்சி: சமகால உலகில்

நேரடி மக்களாட்சியை அதன் முழு பொருளில் இப்போது உலகில் எங்கும் காணமுடியவில்லை. ஆனால் அதன் வழிமுறைகள் பல மக்களாட்சி அமைப்புகளில் இன்றும் நிலைத்து நிற்கின்றன. அவை எவையென காண்போம்.

**நேரடி மக்களாட்சியின் வழிமுறைகள்**

**மக்கள் வாக்கெடுப்பு (Referendum)**
சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை மக்களிடம் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்து வாக்கெடுப்பு நடத்தும் செயல்முறை.

**திரும்ப அழைத்தல் (Recall)**
மக்கள் பிரதிநிதிகளின் செயல்கள் தவறாக இருக்கும்போது அவர்களைப் பதவியிலிருந்து நீக்கம் செய்யும்முறை. ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாக்காளர்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் வழியாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**பொதுவாக்கெடுப்பு (Plebiscite)**
மிகவும் தீவிரமான பொதுப்பிரச்சனைகளில் மக்களின் முடிவுகளைக் கண்டறியும் வழிமுறை.

**முன்முயற்சி (Initiative)**
சட்டம் உருவாக்குவதில் மக்கள் நேரடியாகப் பங்கேற்க ஒரு வழி. அவர்கள் விரும்பும் சட்டத்தின் வரைவு அல்லது முழு மசோதாவை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர்.

நேரடி மக்களாட்சியின் வழிமுறைகள் நிலைநிற்கும் நாடு சுவிட்சர்லாந்து ஆகும்.

நாட்டின் பரப்பளவும் மக்கள் தொகையும் அதிகரித்ததால் கிரேக்க மாதிரியான நேரடி மக்களாட்சிமுறை அங்கு உகந்ததாக இல்லை. எனவே, ஆட்சி நடத்துவதற்காக மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் மறைமுக மக்களாட்சி அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. இம்முறையின் சிறப்புத் தன்மைகளைக் காண்போம்.

*நவீன உலகில் நேரடி மக்களாட்சி முறைக்கு இடையூறாகக் காணப்படும் காரணிகளைப் பற்றி குழு விவாதம் நடத்தவும்.*

## மறைமுக மக்களாட்சி அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி

## (Indirect Democracy or Representative Democracy)

ஆட்சி நடத்த மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை பிரதிநிதித்துவ மக்களாட்சி அல்லது மறைமுக மக்களாட்சி எனப்படுகிறது. நமக்கு பழக்கமான பிரதிநிதித்துவ மக்களாட்சியின் தொடக்கம் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் காணப்பட்டது. பிரிட்டனில் பாராளுமன்றத்தின் வளர்ச்சி பிரதிநிதித்துவ மக்களாட்சி முறைக்கு வழிவகுத்தது. மன்னராட்சியில் காணப்பட்ட தொடர்ச்சியான அதிகாரப் போராட்டத்தின் விளைவாகப் பிரிட்டனில் பாராளுமன்ற மக்களாட்சி வலுவடைந்தது. பாராளுமன்றத்தின் கூட்டுப் பொறுப்புள்ள அமைச்சரவை பாராளுமன்ற மக்களாட்சி முறையில் ஆட்சி நடத்துகிறது. பிரிட்டன் பாராளுமன்ற மக்களாட்சி வரலாற்றில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமையும் குடிமக்களின் உரிமைகளும் புதிய மைல்கற்கள் ஆகும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பிரஞ்சு புரட்சியின் கருத்துகள் பிரதிநிதித்துவ மக்களாட்சியின் மதிப்பீடுகளுக்குப் பெருமளவிலான நன்கொடைகளை வழங்கியுள்ளது.

*நேரடி – மறைமுக மக்களாட்சியை ஒப்பிட்டு அட்டவணையை நிரப்புக:*

| நேரடி மக்களாட்சி | மறைமுக மக்களாட்சி |
|---|---|
| • *மக்கள் நேரடியாக ஆட்சி செய்கிறார்கள்* | • *மக்கள் பிரதிநிதிகள் வழியாக ஆட்சி செய்கிறார்கள்* |
| • | • |

## பாராளுமன்ற முறையும் குடியரசுத் தலைவர் ஆட்சிமுறையும்

ஜனநாயக ஆட்சி முறையில் இரண்டு வகையான மாதிரி ஆட்சி முறைகள் நடைமுறையில் உள்ளன. அவை பாராளுமன்ற ஆட்சி முறையும் குடியரசுத் தலைவர் ஆட்சி முறையும் ஆகும். செயல் நிர்வாகத் துறைக்கும் சட்டமியற்றும் சபைக்கும் உள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டு மக்களாட்சி முறை இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் சிறப்புத் தன்மைகளை ஆராய்வோம்.

## பாராளுமன்ற ஆட்சி முறையின் சிறப்புத் தன்மைகள்

- செயல் நிர்வாகப் பிரிவை பாராளுமன்றம் கட்டுப்படுத்துகிறது.
- குடியரசுத் தலைவரின் அதிகாரம் பெயரளவில் மட்டுமே.
- நாட்டின் தலைவர் மன்னர் / ராணி / குடியரசுத் தலைவராக இருப்பார்.
- ஆட்சி நிர்வாகத்தின் தலைவர் பிரதமராக இருப்பார்
- பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் சபைக்குப் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- பிரதமர் தலைமையிலான அமைச்சரவை சட்டமியற்றும் சபைக்கு கூட்டுப்பொறுப்பு உடையதாகயிருக்கும்.

### அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு

*பாராளுமன்ற ஆட்சி முறையில் பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு சட்டமியற்றும் சபையோடு கூட்டுப் பொறுப்பு இருக்கும். ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் துறை தொடர்பாக எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடையதாக இருக்கும்.*

## குடியரசுத் தலைவர் ஆட்சிமுறையின் சிறப்புத் தன்மைகள்

- செயல் நிர்வாகத் துறையும் சட்டமியற்றும் துறையும் தனித்தனியாகச் செயல்படும்
- குடியரசுத் தலைவரே நாட்டுக்கும் ஆட்சிக்கும் தலைவராக இருப்பார்.
- அனைத்து நிர்வாக அதிகாரங்களும் குடியரசுத் தலைவரிடமே உள்ளது.
- குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேந்தெடுக்கப்படுகிறார்.
- பாராளுமன்றத்துக்குக் குடியரசுத் தலைவர் பொறுப்புடையவர் அல்ல.

*பாராளுமன்றம் மற்றும் குடியரசுத் தலைவர் ஆட்சிகளின் நன்மை தீமைகளை விவாதித்து குறிப்பு தயார் செய்க.*

மக்களாட்சி முறையின் நிலைநிற்றலுக்குப் பல காரணிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அவற்றில் சிலவற்றைப் பரிசோதிப்போம்.

## மக்களாட்சி முறையின் அடிப்படைக் காரணிகள்

### சுதந்திரம் (Liberty)

மக்களாட்சி ஒரு அரசியல் சமூக அமைப்பாக நிலைநிற்கத் தேவையான காரணிகளுள் ஒன்று சுதந்திரம். கட்டுப்பாடுகள் இல்லாத நிலை என்பதுதான் சுதந்திரத்தின் வரையறை. தனிநபர்கள் மீது வெளிப்படையான கட்டுப்பாடுகள் இல்லாத நிலை. சுதந்திரம் என்பது தனிநபர்களின் திறன் வெளிப்படும் களமாகும். இந்த முறையில் தனிநபர்களின் திறன்களை வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்கச் செய்வதற்கான நிலையையும் சுதந்திரம் என அழைக்கிறோம்.

பயணம் செய்யும் சுதந்திரம் சங்கங்களை உருவாக்கும் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் போன்றவை முக்கியமானவையாகும். இதில் மக்களாட்சியின் அடிப்படையாக செயல்படுவது கருத்து சுதந்திரம் ஆகும்.

## கருத்து சுதந்திரம்



படம் 9.3 ● வால்ட்டயர்

*"நீங்கள் கூறியதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் அதைச் சொல்லும் உங்கள் உரிமைக்காக நான் எனது மரணம் வரை போராடுவேன்". -வால்ட்டையர்*

*பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கும்சொற்கள் மேலே தரப்பட்டுள்ளன. மக்கள் பல்வேறு முறையில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். கருத்துகளை வெளிப்படுத்த மக்கள் பயன்படுத்தும் அடிப்படையான வழிமுறை உரையாடல் அல்லவா? ஒரு இயக்குநர் தன் கருத்தைத் திரைப்படத்தின் வழியாக வெளிப்படுத்துகிறார். ஒரு எழுத்தாளர் புத்தகத்தின் வழியாக தன் கருத்துகளை வெளிப்படுத்துகிறார். அவை தடை செய்யப்பட்டால் மக்களின் தெரிந்துகொள்ளும் உரிமை மறுக்கப்படுகிறது. கருத்துகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதும் அவற்றை மதிப்பீடு செய்வதும் மக்களாட்சியின் முக்கிய அடிப்படைகளாகும்.*



படம் 9.4 ● ஜே. எஸ். மில்

*ஜே. எஸ். மில்லின் கூற்றுப்படி எந்தவொரு கருத்தும் முற்றிலும் தவறானதல்ல. நமக்கு தவறு என்று தோன்றுவதிலும் உண்மையின் அம்சங்கள் காணப்படும். நமக்குத் தவறாகத் தோன்றுவதை நிராகரிக்கும் போது அந்தக் கருத்தில் உள்ள உண்மையும் நமக்கு நஷ்டமாகிறது.*

### சுதந்திரமும் கட்டுப்பாடுகளும்

கட்டுப்பாடுகள் இல்லாத போது சுதந்திரம் முழுமை பெறாது. எனவே தனி நபர்கள் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை என சில அறிவுரைகளும் சட்டங்களும் சமூக வாழ்க்கைக்கு மிகவும் தேவையாகும். இது இன்னொருவரின் சுதந்திரத்தின் மீதான அத்துமீறல்களைத் கட்டுப்படுத்துகிறது. ஒவ்வொரு தனிநபரும் மற்றவர்களின் சுதந்திரத்தை மதிக்கும் சூழலால் மட்டுமே சுதந்திரம் என்னும் விழுமியம் பொருள் நிறைந்ததாகிறது. சொந்த கருத்துகளும் நம்பிக்கைகளும் பிறரை விட உயர்வானவை என்ற எண்ணம்

மோதல்களுக்கு வழி வகுக்கிறது. இத்தகையச் சூழல்களில் சட்டம் மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன.

*கருத்துகளை வெளிப்படுத்த தனி நபர்கள் பின்பற்ற வேண்டிய பல வகையான வழிமுறைகள் எவை?*

- *உரையாடல்கள்*
- *படங்கள்*
-
-

## சமத்துவம் (Equality)

மக்களாட்சியில் மிக முக்கியமான விழுமியம் சமத்துவமாகும். மதம், நிறம், பாலினம், இனம், மொழி மற்றும் தேசியம் போன்ற அடிப்படையான பாகுபாடுகளைப் பொருட்படுத்தாமல் உலகில் உள்ள அனைத்து மக்களும் தனித்துவமானவர்கள் மற்றும் மதிப்பு மிக்கவர்கள் என்ற கண்ணோட்டம் சமத்துவம் எனப்படும். உலகளாவிய மனித உரிமைகள் என்ற கருத்திற்கும் அடிப்படையானது சமத்துவமேயாகும்.



*படம் 9.5*

ஆனால் சமத்துவம் என்பது எல்லா சூழ்நிலைகளிலும் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்த வேண்டும் என்று பொருள் அல்ல. ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் திறன்களுக்கு ஏற்ப வெவ்வேறு பரிசீலனைகளை வழங்குவது சமத்துவம் என்ற கருத்தை மீறுவதாகக் கூற முடியாது. எடுத்துக்காட்டாக இலக்கியத்திற்காக வழங்கும் விருதோ, விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைக்காக வழங்கும் பதக்கமோ சமமற்றதாக கருத முடியாது. பல்வேறுபட்ட சலுகைகள் வழங்குவதன் மூலம் சமத்துவம் என்பதற்கு பரந்த அளவில் பொருள் கிடைக்கிறது.

### சமத்துவத்தின் முப்பரிணாமங்கள் (Three Dimensions of Equality)

| அரசியல் சமத்துவம் | சமூக சமத்துவம் | பொருளாதார சமத்துவம் |
|---|---|---|
| • வாக்குரிமை<br>• தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை<br>• பொது நிறுவனங்களில் நிர்வகிக்கும் உரிமை | • பாகுபாடற்ற நிலை<br>• சம பதவி<br>• சம வாய்ப்புகள் | • தொழில் உரிமை<br>• சம வேலைக்கு சம ஊதியம்<br>• ஓய்வெடுக்கும் உரிமை |

*'முழுமையான சமத்துவம் திறன்களுக்கு ஏற்ற அங்கீகாரம் என்ற தலைப்பில் விவாதித்து குறிப்பு தயார் செய்யவும்'.*

## நீதி (Justice)

மக்களாட்சியின் அடிப்படை விழுமியங்களுள் ஒன்று நீதி. காலத்திற்கு ஏற்ப நீதி மாறிக் கொண்டிருக்கும். மனிதர்கள் என்ற நிலையில் எல்லா தனி நபர்களுக்கும் சமமான மற்றும் தகுதிக்கு ஏற்ற முன்னுரிமை வழங்குதல் நவீன கால பார்வையில் நீதியின் பொருளாகும்.

### நீதியின் மூன்று தத்துவங்கள் (Three Principles of Justice)

| சம நிலையில் உள்ளவர்க்கு சமநீதி (Equal treatment for equals) | விகிதாச்சார நீதி (Proportionate justice) | சிறப்புத் தேவைகளை அங்கீகரித்தல் (Recognition of special needs) |
|---|---|---|
| • மனிதர் என்ற நிலையில் எல்லாத் தனி நபர்களும் சம உரிமையும் சமமான முன்னுரிமையும் பெற தகுதியுடையவர்கள்.<br>• இனம், ஜாதி, மதம், பாலினம், பாரம்பரியம் போன்றவற்றின் அடிப்படையில் எந்த வித பாகுபாடும் கூடாது | • ஒவ்வொரு நபரின் திறனுக்கும் பங்களிப்புக்கும் விகிதாச்சாரமாக நீதி வழங்கப்பட வேண்டும்<br>• ஒவ்வொருவரையும் அவரவர் திறன்களுக்கு ஏற்ப தனித்தனியாக நடத்துவதில் எந்தவித அநீதியும் இல்லை. | • சமத்துவமின்மை நிலை நிற்கும் ஒரு சமூகத்தில் பின்தங்கிய மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டால் மட்டுமே அவர்களுக்கு சமத்துவத்தை அனுபவிக்க முடியும்.<br>• சமத்துவத்தை உறுதி செய்ய இட ஒதுக்கீடு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். |

*சம நீதியை உறுதி செய்ய கடைபிடிக்கப்படும் சிறப்பு முன்னுரிமைகள் எவையென சுற்றுப்புறத்திலிருந்து கண்டறிந்து எழுதவும்.*

- *மாற்றுத்திறனாளிகளுக்குப் பேருந்தில் தனிப்பட்ட இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*
- 

## உரிமைகள் (Rights)

மக்களாட்சியின் நிலை நிற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உரிமைகள் மிகவும் அவசியமாகும். மனிதர்கள் என்ற நிலைக்கு மதிப்பு வாய்ந்த மற்றும் பொருள் நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலைகள் தான் உரிமைகளாகும்.

நாம் விரும்புவதும் எதிர் பார்ப்பதும் எல்லாம் உரிமை அல்ல. அது வெறும் உரிமை கோருவது மட்டுமே. சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் உரிமைகள் எனப்படும்.

பல புகழ்பெற்ற அரசியல் சிந்தனையாளர்கள் அரசு உருவாவதற்கு முன்பே உரிமைகள் இயற்கையாகவே தோன்றியதாக ஒப்புக்கொள்கிறார்கள். சுதந்திரத்திற்கான உரிமை, சொத்துரிமை, வாழ்வதற்கான உரிமை போன்றவை முக்கிய இயற்கை உரிமைகள் (Natural Rights).

பெரும்பாலான நாடுகளில் உரிமைகளுக்காக சட்டபூர்வமான, அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் மசோதா அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பு பிரிவு III இல் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**பல வகையான உரிமைகள்**

| அரசியல் உரிமைகள் | குடி உரிமைகள் |
|---|---|
| • வாக்களிக்கும் உரிமை<br>• தேர்தலில் போட்டியிடும் உரிமை<br>• பொது பதவிகள் வகிக்கும் உரிமை<br>• அரசை விமர்சிக்கும் உரிமை | • சட்டத்தின் முன் சமத்துவம்<br>• சுதந்திரம் மற்றும் நியாயமான விசாரணைக்கான உரிமை<br>• ஒன்று கூடுவதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான உரிமை<br>• பேச்சுரிமை |
| **பொருளாதார உரிமைகள்** | **கலாச்சார உரிமைகள்** |
| • வேலை செய்யும் உரிமை<br>• போதுமான ஊதியம் பெறுவதற்கான உரிமை<br>• நாட்டின் வளங்கள் மற்றும் செல்வத்தின் மீது உள்ள சம உரிமை. | • மொழி மற்றும் எழுத்து வடிவத்தைப் பாதுகாக்கும் உரிமை<br>• தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமை<br>• வட்டார மக்கள் தங்கள் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் உரிமை |




படம் 9.6

பல்வேறு உரிமைகளைப் பற்றி சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான முழக்கங்கள், விழிப்புணர்வு அட்டைகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்றவை தயாரிக்கவும்.

## சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

மக்களாட்சியின் அடிப்படை விழுமியங்களில் ஒன்று சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் . அனைவருக்கும் சமமான பாதுகாப்பு கிடைக்கும் என்பதே சட்டத்தின் ஆட்சி என்பதன் பொருளாகும். நாட்டின் பொதுவான சட்டங்கள் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும். எந்த ஒரு பிரிவினருக்கும் சிறப்புச் சட்டங்கள் இல்லை. அதேபோலவே சட்ட அமைப்பு பரிந்துரைக்கப்பட்ட செயல்பாடுகள் மற்றும் தத்துவங்கள் வழியாக மட்டுமே அரசு அதன் கடமைகளை நிறைவேற்ற முடியும்.




படம் 9.7

'மக்களாட்சி முறையில் சட்டத்தின் ஆட்சியின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில் ஒரு விவாதம் நடத்தவும்.

### அரசியலமைப்பு வாதம் *(Constitutionalism)*

*எல்லா நவீன மக்களாட்சி அமைப்புகளும் அரசியலமைப்பின் படி செயல்படுகின்றன. அரசின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டங்கள், குடிமக்களின் உரிமைகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் அடிப்படை ஆவணமாகும் அரசியல் அமைப்பு. அரசின் அதிகாரங்களுடன் குடிமக்களின் அடிப்படை உரிமைகளும் அரசியலமைப்பில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் தலையிட அரசுக்கு சில வரம்புகள் உள்ளன.*

### அதிகாரப் பகிர்வு (Separation of Powers)

மக்களாட்சி அமைப்பில் அரசாங்கத்தின் பிரிவுகளான சட்டம் உருவாக்கம், நிர்வாகம், நீதி நியாயம் ஆகிய துறைகளுக்கு இடையிலான அதிகார பகிர்வு மிகவும் முக்கியமானதாகும். இந்த மூன்று துறைகளும் அதனதன் துறையில் சுதந்திரமாகச் செயல்படுவதோடு பல துறைகளின் நடவடிக்கைகளை ஆய்வுக்கு உட்படுத்தவும் செய்கின்றன. இத்தகைய அதிகாரங்கள் ஒரே துறையில் மையப்படுத்தப்பட்டால் அது சர்வதிகாரத்திற்கு வழிவகுக்கும். இந்நிலை மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும்.

### தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் (Election and Representation)

நவீன மக்களாட்சி நாடுகள் பொதுவாக மறைமுக மக்களாட்சி முறையைத்தான் பின்பற்றுகிறது என நாம் விவாதித்தோம் அல்லவா? மறைமுக மக்களாட்சியில் மக்களின் ஆட்சி என்பது மக்களின் பிரதிநிதிகள் மக்களுக்காக ஆட்சி செய்கின்றனர் என்று பொருளாகும். மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க கடைபிடிக்கப்படும் முறை தேர்தல் எனப்படும். தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் குறிப்பிட்ட கால இடைவெளியிலும் நடத்தப்பட வேண்டும். இதற்காக நாட்டின் அரசியலமைப்பில் வாக்குரிமை, தேர்தலைக் கண்காணித்தல் போன்றவை தொடர்பான அடிப்படை விதிகள் சேர்க்கப்பட வேண்டும்.

### மதச்சார்பின்மை (Secularism)

மதச்சார்பின்மை என்ற கருத்தாக்கத்தின் அடிப்படை அரசுக்கும் மதத்திற்கும் இடையே உள்ள தெளிவான வேறுபாடாகும். அரசுக்கு அதிகாரப்பூர்வமான மதம் இருக்கக் கூடாது. அதே சமயம் குடிமக்கள் தாங்கள் விரும்பும் எந்த மதத்தையும் பின்பற்றலாம் என்ற சுதந்திரம் உண்டு. அரசு எல்லா மதங்களையும் சமமாக நடத்தும். ஒரு

மக்களாட்சி முறையில் மதச் சார்பின்மை இரண்டு வழிகளில் சக்தி வாய்ந்தது . முதலாவதாக மதங்களைப் பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் என்று பாராமல் சமமாக நடத்துகிறது. அரசுக்கு அதிகாரப்பூர்வமான மதம் இல்லை என்பதால் மதத்தின் அடிப்படையில் எந்த சமூகத்திற்கும் எதிராக வேறுபாடு காட்டுவதில்லை. இரண்டாவதாகக் குடிமக்களுக்கு நம்பிக்கையான சுதந்திரத்துடன் சமநீதியும் உரிமைகளும் வழங்கப்படுகின்றன.




*படம் 9.8*

## அரசியல் கட்சிகள்

நவீன மக்களாட்சியில் அரசியல் கட்சிகள் மிகவும் இன்றியமையாத பகுதியாகும். மக்களாட்சியில் அரசியலில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்திலும் இவை முக்கிய பங்கு வகிக்கிறது. அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் செயல்பாடுகளை எளிதாக்குகின்றன. இவர்கள் நடத்தும் மாநாடுகளும், பேரணிகளும் மேடைப்பேச்சுகளும் மக்களாட்சியில் மிகவும் வலிமையான அரசியல், கல்வி செயல்பாடுகளாகும். பொதுமக்கள் கருத்தைத் தங்களுக்கு அனுகூலமாக்கி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது தான் அரசியல் கட்சிகளின் நோக்கமாகும்.

*"மக்களாட்சியை வலிமையுடையதாக மாற்றுவதில் அரசியல் கட்சிகளின் பங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடத்தவும்.*

## எதிர்க்கட்சிகள்

மக்களாட்சி அமைப்பில் எதிர்க்கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசின் செயல்பாடுகளை விமர்சனம் மற்றும் மதிப்பீடு செய்யும் சுதந்திரம் எதிர்கட்சிகளுக்கு இருக்க வேண்டும். எதிர்க்கட்சியின் செயல்பாட்டு சுதந்திரம் மட்டுமே ஆரோக்கியமான மக்களாட்சியின் அடிப்படையாகும்.

ஆக்கபூர்வமான எதிர்கட்சி அரசின் அனைத்து செயல்பாடுகளையும் உன்னிப்பாக ஆராய்ந்து மதிப்பீடு செய்கிறது. ஆட்சியின் தவறான கொள்கைகளை விமர்சிப்பதுடன் அவற்றைத் திருத்துவதற்காகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்கும் மாற்றுக் கொள்கைகளை பரிந்துரைக்கவும் செய்கிறது. மக்களாட்சியை அதிக உயிரோட்டம் உள்ளதாக வைத்திருப்பது எதிர்க்கட்சிகளாகும். அவர்கள் நடத்தும் பேரணிகள், மாநாடுகள், மேடைப்பேச்சுகள் எல்லாம் அரசியல் செயல்பாட்டை கூடுதல் சுறுசுறுப்புடன் வைக்கிறது. எதிர்க்கட்சியைத் தடை செய்யவோ, கட்டுப்படுத்தவோ அல்லது எதிர்க்கட்சி பிரதிநிதிகளை சிறையில் அடைக்கவோ முன் வரும் அரசின் செயல்பாடு மக்களாட்சிக்கு ஏற் புடையதல்ல.

*மக்களாட்சி முறையில் எதிர்க்கட்சிகளைத் தவிர்க்க முடியாத காரணிகள் எவை?*

- *அரசின் செயல்பாடுகளை விமர்சனம் செய்து மதிப்பீடு செய்தல்*
- 

நாம் இதுவரை மக்களாட்சி அரசுகளைப் பற்றியும் அவற்றின் விழுமியங்கள் பற்றியும் விவாதித்தோம் அல்லவா? ஆனால் மக்களாட்சியை பின்பற்றாத அரசுகளும் உலகில் உள்ளன. அவற்றுள் சில கிழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **மன்னர் ஆட்சி (Monarchy)** | • மிகப் பழமையான அரசாங்க வடிவம்<br>• அதிகாரம் பரம்பரை வழி தொடரும்<br>• நாட்டின் அனைத்து அதிகாரங்களும் மன்னர் / இராணியிடம் குவிக்கப்பட்டிருக்கும். |
| **சர்வதிகாரம் (Dictatorship)** | • நாட்டின் அதிகாரம் முழுவதும் ஒரு தனி நபரிடம் குவிந்திருக்கும்<br>• நாட்டின் உச்ச அதிகார தலைவனாக மாறும் தனி நபரை எதிர்த்து கேள்வி கேட்கவோ விமர்சனம் செய்யவோ யாருக்கும் உரிமை இல்லை.<br>• தேர்தல் உட்பட்ட அனைத்து வகையான மக்களாட்சி நடைமுறைகளும் தடை செய்யப்பட்டிருக்கும். |
| **இராணுவ சர்வாதிகாரம் (Military Dictatorship)** | • இராணுவம் நேரடியாக ஆட்சி நடத்துகிறது.<br>• மக்களாட்சி உரிமைகள் மற்றும் மக்களாட்சியின் பிற நடைமுறைகள் காணப்படுவதில்லை.<br>• எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் இராணுவத்தின் மூலம் அடக்குதல் |
| **கட்சி சர்வாதிகாரம் (Party Dictatorship)** | • ஒரேயொரு அரசியல் கட்சி ஆட்சி நடத்தும்<br>• நாட்டின் அனைத்து அதிகாரங்களும் கட்சியிடமே மையப்படுத்தப்பட்டிருக்கும்.<br>• பேச்சு சுதந்திரம் உட்பட அனைத்து மக்களாட்சி விழுமியங்களும் தடை செய்யப்பட்டிருக்கும் |
| **மத ஆட்சி (Theocratic State)** | • மத விதிகளின்படி மதத்தலைவர்கள் நேரடியாக ஆட்சி நடத்துகிறார்.<br>• சட்டங்களின் விதிகள் நாட்டின் அதிகாரபூர்வ மதத்தின் அடிப்படையில் இருக்கும்.<br>• அதிகாரபூர்வ மதத்தை நம்புவதற்கும், பின் தொடர்வதற்கும் அனைவரும் கட்டாயப்படுத்தப்படுவார்கள். |

## இந்திய மக்களாட்சி

உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு இந்தியா. இவ்வளவு அதிகமான மக்கள் பங்கெடுக்கும் மக்களாட்சி முறை உலகில் வேறு எங்குமில்லை. தேர்தல்கள் மக்களாட்சி அமைப்பில் தவிர்க்க முடியாத காரணியாகும். இந்திய மக்களாட்சியின் சிறப்புகள் எவையென ஆராயலாம்.



படம் 9.9

## இந்தியா ஏன் மக்களாட்சியைப் பின்பற்றியது?

இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் அதன் தலைமையிலும் மக்களாட்சியின் விழுமியங்கள் பெரும் தாக்கம் செலுத்தின. சுதந்திரப் போராட்டத்தில் அனைத்து செயல்பாடுகளும் மக்களாட்சி முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதுபோலவே, கலாச்சார அடிப்படையிலும் புவியியல் அமைப்பின் அடிப்படையிலும் இவ்வளவு பன்முகத் தன்மைகொண்ட ஒரு நாடு அரசியல் ரீதியாக ஒன்றிணைக்கப்பட வேண்டுமெனில் அது மக்களாட்சி அமைப்பின் வழியாக மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும், என்பதை அன்றைய தலைவர்கள் உணர்ந்திருந்தனர். பல்வேறு கருத்துகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு மக்களாட்சி அமைப்பில் மட்டுமே கிடைக்கும். மக்களாட்சி முறையில் மட்டுமே அமைதியான வழியில் ஆட்சியாளர்களின் அதிகார மாற்றமும் மக்களின் குறைகளையும் எதிர்க்கருத்துகளையும் பதிவு செய்ய வாய்ப்பு கிடைக்கும் என சுதந்திர இந்தியாவின் சிற்பிகள் அறிந்திருந்தனர். எனவேதான் சுதந்திரம் அடைந்தபோது இந்தியா மக்களாட்சி அமைப்பை ஏற்றுகொண்டு அதற்கான அரசியலமைப்பையும் எழுதி தயார் செய்தனர்.

*இந்தியா மக்களாட்சி முறையை ஏற்றுக் கொள்வதற்கான காரணங்களைக் கண்டறிந்து ஒரு பட்டியல் தயார் செய்க.*

## இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சி முறை

இந்தியாவில் பாராளுமன்ற ஆட்சி முறை நடைமுறையில் உள்ளது. இந்தியப் பாராளுமன்றத்தில் இரண்டு அவைகள் உள்ளன. மேல் சபை எனப்படும் மாநிலங்களவையும் (Rajya Sabha) சபையும் கீழ்சபை எனப்படும் மக்களவையுமாகும் (Lok Sabha). மக்கள் அவையில் பெரும்பான்மை பெறும் கட்சி அல்லது கூட்டணி அமைச்சரவையை உருவாக்குகிறது. நாட்டின் தலைவர் குடியரசுத் தலைவர் என்ற போதிலும் அவரது அதிகாரங்கள் பெயரளவில் தான் இருக்கம். உண்மையான அதிகாரங்கள் பிரதமர்

தலைமையிலான அமைச்சரவையிடம்தான் இருக்கும். அமைச்சரவை நாடாளுமன்றத்துடன் கூட்டுப்பொறுப்பு உடையதாகும். மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் அமைச்சரவையைப் பதவியில் இருந்து நீக்க முடியும். அவசர கால தீர்மானங்கள், கேள்வி நேரம், கவனயீர்ப்பு தீர்மானங்கள், பூஜ்ய நேரம் போன்றவற்றின் வழியாக அமைச்சரவை மீது நாடாளுமன்றத்தில் கட்டுப்பாட்டைச் செலுத்த முடியும்.

### நம்பிக்கையில்லா தீர்மானம்

*மக்களவையில் அமைச்சர்களின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் கொடுப்பதுதான் நம்பிக்கையில்லா தீர்மானம் எனப்படும்.நாடாளுமன்ற மக்களாட்சி முறையில் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை சட்டம் இயற்றும் துறையின் நம்பிக்கையைத் நிக்க வைத்துக் கொண்டால் மட்டுமே ஆட்சியில் தொடர முடியும். பெரும்பான்மை உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானத்தை நிறைவேற்றினால் அமைச்சரவை அதிகாரத்தை இழக்கும்.*

## இந்தியாவில் உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை (Universal Adult Franchise in India)

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 326 இன் படி ஜாதி, மதம், பாலினம், இன வேறுபாடு இன்றி அனைத்து குடி மக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் நடைமுறையில் வந்த போது வாக்களிக்கும் வயது 21 ஆக இருந்தது. ஆனால் அரசியல் அமைப்புச் சட்ட திருத்தம் 61 ன் படி 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் முதல் வாக்குரிமைக்கான வயது 18 ஆக குறைக்கப்பட்டது. எழுத்தறிவு குறைந்த இந்தியாவில் உலகளாவிய வயது வந்தவர்கள் உரிமையை நடைமுறைப்படுத்த பலரும் எதிர்த்தனர். ஆனால் இந்தியாவில் எல்லா குடி மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதையே ஜவஹர்லால் நேரு ஆதரித்தார். நவீன மக்களாட்சி முறை தோன்றிய ஐரோப்பிய நாடுகளில் கூட அதன் தொடக்கத்தில் தொழிலாளர்களுக்கும் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை. இச்சூழலில் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் பின்பற்றிய உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையின் முக்கியத்துவம் போற்றுதலுக்குரியதாகிறது.




*படம் 9.10*

*"பிரதிநிதித்துவ மக்களாட்சியில் உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் விவாதம் நடத்தவும்.*

## தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு

**(Elected Government)**

இந்தியாவில் தேசிய மற்றும் மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அரசாங்கம் உருவாக்கப்படுகிறது. அரசாங்கத்தின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும். ஐந்து வருடங்களுக்குப் பிறகு புதிய தேர்தல் நடத்தி புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வரும். உள்ளூர் சுய ஆட்சி நிறுவனங்களிலுள்ள ஆட்சி குழுக்களும் தேர்தல்கள் வழியாகவே உருவாக்கப்படுகின்றன.

ஜாதி, மதம், பாலினம், பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் தேர்தல்களில் போட்டியிடவும் பொது பதவிகளை வகிக்கவும் உரிய உரிமை எல்லா இந்திய குடிமக்களுக்கும் உண்டு.

இந்தியாவில் சுதந்திரம் ஆனதும் நியாயமானதுமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்காக ஒரு தேர்தல் ஆணையம் நடை முறையில் உள்ளது.

### தேசிய தேர்தல் ஆணையம்

*தேர்தல் ஆணையம் என்பது இந்தியாவில் சுதந்திரம் ஆனதும் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்குப் பொறுப்பான ஒரு அரசியலமைப்பு நிறுவனமாகும். குடியரசுத் தலைவர், துணைக் குடியரசு தலைவர் பதவிகளுக்கும் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்துகிறது. தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களையும் கொண்ட ஒரு அமைப்பாகும்.*

## சுதந்திரமான நீதித்துறை மற்றும் நீதித்துறை மீள் ஆய்வு

**(Independent Judiciary and Judicial Review)**

இந்தியாவின் நீதித்துறை அமைப்பில் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் கீழ் நீதிமன்றங்கள் உட்படுகின்றன. நீதித்துறை, செயலாக்கப் பிரிவு, சட்டமன்றம் இவற்றிலிருந்து தனித்து சுதந்திரமாக செயல்படுகிறது. நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக முறையான சேவைக்கு காலவரையறை உள்ளது. நீதிபதிகளின் சேவை மற்றும் ஊதிய நிர்ணயத்தில் செயலாக்கத்துறை மற்றும் சட்டம் இயற்றும் துறைகள் தலையிடுவதில் அரசியலமைப்பு வரையறைகளை வகுத்துள்ளது. அரசியலமைப்பின் பாதுகாவலன் நீதிமன்றம் ஆகும். இந்த அடிப்படையில் நீதிமன்ற மீளாய்வு வழியாக செயலாக்கத்துறை மற்றும் சட்டம் இயற்றும் துறைகளில் அரசியலமைப்புக்கு முரணான நடவடிக்கைகளை ரத்து செய்து அறிவிக்க நீதித்துறைக்கு அதிகாரம் உண்டு.

### நீதிமன்ற மீள்ஆய்வு *(Judicial Review)*

*சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள், செயலாக்கப் பிரிவின் நடவடிக்கைகள் அரசியல் அமைப்பிற்கு முரணானவை என்றால் அவற்றை ரத்து செய்யும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளது. இந்த அதிகாரம் நீதிமன்ற மீள்ஆய்வு என்று அழைக்கப்படுகிறது.*

## இந்தியாவின் ஆட்சி முறை

மக்களாட்சி முறையில் அரசியல் கட்சிகள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் பல கட்சி ஆட்சி முறை நடைமுறையில் உள்ளது. முதல் தேர்தல் முதல் 1967 வரை இந்திய தேசிய காங்கிரஸ் மட்டுமே பொதுத் தேர்தல்களில் ஆதிக்கம் செலுத்தியது. அதன் பிறகு தேசிய அளவில் காங்கிரஸ் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டாலும் பல மாநிலங்களிலும் தன் அதிகாரத்தை இழந்தது. 1989 ஆம் ஆண்டு தேர்தல் முதல் இந்தியாவில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் ஆட்சி அமைக்கும் கூட்டணி ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது.

## பன்முகத்தன்மை

ஒரு நாடு என்ற நிலையில் ஐரோப்பாவிலுள்ள நாடுகளிலிருந்து இந்தியா வேறுபாட்டுக் காணப்படுகிறது. ஒரே கலாச்சாரம், ஒரே மதம் என்னும் கொள்கை அடிப்படையில் ஐரோப்பாவில் உள்ள நாடுகள் உருவாக்கப்பட்டன. ஆனால் ஐரோப்பாவிலிருந்து வேறுபட்டு வெவ்வேறு மதங்கள், இனங்கள், கலாச்சார வேறுபாடு உடையவர்கள் என அனைவருக்கும் சமமான உரிமைகளும் முக்கியத்துவமும் அளித்து இந்தியா என்ற ஒரு நாடு உருவானது. இந்த வேறுபாடுகளை அரசியல் ரீதியாக நாம் ஏற்றுக் கொள்வதால் ஒரு கூட்டாட்சி முறையை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. மத – மொழி சிறுபான்மையினரின் உரிமைகளை அடிப்படை உரிமைகளில் உட்படுத்தி தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அளிக்கிறது. இந்திய அரசியலமைப்பின் எட்டாவது பிரிவில் 22 மொழிகள் உட்படுத்தப்பட்டுள்ளன. இதுபோலவே பழங்குடி மக்கள் பிரிவினரின் பாதுகாப்புக்காகத் தனிப்பட்ட விதிகள் 5, 6 பிரிவுகளில் உட்படுத்தப்பட்டுள்ளன. கலாச்சாரம் மற்றும் சமூக தனித்தன்மைகளின் அடிப்படையில் சில மாநிலங்களுக்கு சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, இந்திய அரசியலமைப்பு முகவுரையிலேயே இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நாட்டுக்கு அதிகாரப்பூர்வ மதம் இல்லை. அனைத்து மதங்களும் சமமாகக் கருதப்படுகிறது. குடிமக்கள் தாங்கள் விரும்பும் எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இத்தகைய வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு தளம் இந்திய நாடாளுமன்றம் ஆகும்.

### பலகட்சி முறை

*ஒரு அரசியல் அமைப்பில் பல அரசியல் கட்சிகள் நிலைநிற்பதும் அவை தேர்தல்களில் போட்டியிடுவதும் பலகட்சி முறை எனப்படுகிறது.*

### கூட்டணி ஆட்சி

*தேர்தலில் எந்த கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் தனி பெரும்பான்மை கிடைக்காமல் இருக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி உருவாக்கி ஆட்சி அமைக்கிறது. இப்படிப்பட்ட அரசு கூட்டணி அரசு எனப்படும்.*

### கூட்டாட்சி முறை

*அரசியலமைப்பு அடிப்படையில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரப் பங்கீடு உள்ள ஆட்சி முறை கூட்டாட்சி முறையாகும். ஒன்றியம் மற்றும் பல மாநிலங்களுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க ஒரு சுதந்திரமான நீதி நியாய அமைப்பு உள்ளது.*

*இந்திய மக்களாட்சி முறையின் சிறப்புத் தன்மைகளைப் பற்றி கருத்தரங்கம் நடத்தவும்.*

இந்தியாவுடன் சேர்ந்து சுதந்திரம் அடைந்த பல நாடுகளிலும் விரைவாக ராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டது. ஆனால் அவற்றின் எல்லாவித பலன்களும் மற்றும் பலவீனங்களுடன் இந்திய மக்களாட்சி முன்னேறிக் கொண்டிருக்கிறது. பல செயல்களிலும் குறைகள் இருந்தாலும் மக்களாட்சி பரிணாம வளர்ச்சியை நோக்கிப் பயணம் செய்கிறது.

## தொடர் செயல்பாடுகள்

- நாடாளுமன்ற ஆட்சி முறையின் சிறப்புகளைப் பற்றி மக்கள் பிரதிநிதியுடன் நேர்காணல் நடத்தவும்.
- உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து மக்களாட்சி அல்லாத அரசுகளின் எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடித்து டிஜிட்டல் விளக்கக் காட்சியை தயார் செய்யவும்.
- உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக..
- மனித உரிமைகள் தினத்தன்று வகுப்பில் தயார் செய்த விழிப்புணர்வு அட்டைகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள்.

அலகு 10

# உலக நிலப் படத்தில் ஐரோப்பா




## இன்றைய ஐரோப்பா

எஸ்.கெ. பொற்றக்காடு

"எனது ஐரோப்பிய சுற்றுப்பயணம் இத்தாலியில் தொடங்கியது. தென் இத்தாலியில் உள்ள காப்பிரித் தீவு, வெஸ்சூவியஸ் எரிமலை, பாம்பி நகரம் போன்ற இடங்களுக்குச் சென்று பின்னர் உள்நாட்டு வழியாக ரோம் நகரைச் சென்றடைந்தேன். ரோமில் இருந்து ஃப்ளாரன்ஸ் நகருக்குச் சென்றேன். அங்கிருந்து உள்நாட்டுப் பகுதிகளைச் சுற்றி பயணம் செய்து விட்டு சாய்ந்த கோபுரங்களின் நகரமான பிஸ்ஸாவை வந்தடைந்தேன். பிஸ்ஸாவிலிருந்து வெனிஸ் நகருக்குப் புறப்பட்டேன். பின்னர் அங்கிருந்து மிலான் நகருக்குச் சென்றேன். மிலானில் எனது இத்தாலிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சுவிட்சர்லாந்துக்கு ரயிலில் சென்றேன். சுவிட்சர்லாந்தில் உள்ள முக்கிய நகரங்கள், மலைத்தொடர்கள், ஏரிக்கரைகள் மற்றும் கிராமங்கள் வழியாக 40 நாட்கள் பயணம் செய்த பின் பிரான்சுக்குப் புறப்பட்டேன். பாரிசில் ஒரு வாரம் இருந்தேன். பின்னர் பாரிஸில் இருந்து பிரான்ஸ் கிராமபுறங்கள் வழியாகப் பயணம் செய்து 'நிப்பி' என்ற இடத்தைச் சென்றடைந்தேன். நிப்பியிலிருந்து நான் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்துக்குச் சென்றேன். இங்கிலாந்தில் ஒன்றரை மாதங்கள் தங்கி இருந்தேன். பின்னர் ஜூலை 8, 1950 அன்று இந்தியாவுக்கு கப்பல் ஏறினேன்.

1955 ஆம் ஆண்டு 'இன்றைய ஐரோப்பா' என்ற புத்தகத்தில் மலையாளத்தின் பயணக் கட்டுரை எழுத்தாளரும் ஞானபீட விருதை பெற்றவருமான எஸ். கெ. பொற்றக்காடு எழுதிய வரிகளே இவை. 'ஐரோப்பா' ஒரு கண்டம் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா?




*படம் 10.1 • உலக நிலப்படம்*

*நிலப் படத்தை உற்றுநோக்கி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கவும்.*
*ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கண்டம் எது ?*
*ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பெருங்கடல் எது ?*
*ஐரோப்பாவின் வட பகுதியில் அமைந்துள்ள பெருங்கடல் எது ?*
*ஐரோப்பாவின் தென்பகுதியில் அமைந்துள்ள கடல் எது ?*

## ஐரோப்பாவின் அடிப்படைத் தகவல்கள்




*படம் 10.2 •*

*சுமார் 1,03,55,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது ஐரோப்பா . இது உலக நிலப்பரப்பில் 7% மட்டுமே.*

நிரப்பரப்பில் ஐரோப்பா உலகின் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது. பிற ஆறு கண்டங்களும் வேறுபட்ட நிலப்பகுதிகளாக அமைந்திருக்கும் போது ஐரோப்பா ஆசியாவின் மேற்குத் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. ஆசியா மற்றும் ஐரோப்பாவை உள்ளடக்கிய பரந்த நிலப்பகுதி யுரேசியா என்று அழைக்கப்படுகிறது. கிரேக்க மற்றும் ரோமானிய அறிஞர்கள் ஐரோப்பாவை உலகின் மையமாகக் கருதினர். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்களால் உருவாக்கப்பட்ட உலக நிலப்படத்தில் ஐரோப்பாவை ஒரு கண்டமாகப் பதிவு செய்துள்ளனர். எனவேதான் பண்டையகாலம் முதல் ஐரோப்பா ஒரு கண்டமாகக் கருதப்படுகிறது.

*நிலப்படப் புத்தகத்தின் உதவியுடன் ஐரோப்பாவின் அட்சக்கோடு மற்றும் தீர்க்கக்கோடுகளின் அமைவிடத்தைக் கண்டுபிடிக்கவும்.*

## ஐரோப்பாவின் அமைவிடம்

ஐரோப்பாவின் வடக்கே ஆர்டிக் பெருங்கடலும் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் தெற்கே மத்தியதரைக் கடலும் அமைந்துள்ளன என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்கள் அல்லவா? இதன் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள யூரல் மலைத் தொடரும் கருங்கடல் (Black Sea), மற்றும் காஸ்பியன் கடலும் (Caspian Sea) ஐரோப்பாவை ஆசியாவிலிருந்து பிரிக்கிறது.




*படம் 10.3 ● ஐரோப்பாவின் அரசியல் நிலப்படம்*

*கருங்கடலின் அமைவிடத்தை வரைபடப் புத்தகத்தின் உதவியுடன் கண்டுபிடிக்கவும். ஐரோப்பாவின் அரசியல் நிலப்படத்தை உற்று நோக்கி முக்கியமான நாடுகளை அறிந்துக் கொள்ளுங்கள்.*

### உங்களுக்குத் தெரியுமா?

*ஐரோப்பாவில் மிகப்பெரிய நாடு ரஷ்யா. ரஷ்யாவின் 25% பரப்பளவு மட்டுமே ஐரோப்பாவில் உட்படுகிறது. மீதமுள்ள பகுதி ஆசியாவில் உட்படுகிறது. யூரல் மலைத்தொடரின் மேற்கில் உள்ள ரஷ்யப் பகுதிகள் ஐரோப்பாவில் உட்படுகிறது. இப்பகுதி ஐரோப்பிய ரஷ்யா எனப்படுகிறது. ரஷ்ய மக்களில் 75% பேர் வாழ்வது ஐரோப்பிய ரஷ்யாவில் ஆகும். ரஷ்யாவின் மிகப்பெரிய நகரங்களான மாஸ்கோ மற்றும் செண்ட் பீட்டர்ஸ்பர்க் ஐரோப்பிய ரஷ்யாவில் அமைந்து உள்ளது. உக்ரைன், பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்வீடன் போன்றவை பரப்பளவில் முன்னிலையில் நிற்கும் பிற ஐரோப்பிய நாடுகள் ஆகும்.*



*படம் 10.4 ● ஐரோப்பா – இயற்கை அமைப்பு*

ஐரோப்பாவின் அமைவிடத்தையும் இயற்கை எல்லைகளையும் கண்டு அறிந்தீர்கள் அல்லவா? இனி நாம் ஐரோப்பாவின் புவியியல் சிறப்புகள் எவை என்பதைப் பற்றிக் கலந்துரையாடலாம்.

## புவியியல் சிறப்புத் தன்மைகள்

### இயற்கை அமைப்பு

பன்முக இயற்கை அமைப்பைக் கொண்டது தான் ஐரோப்பா, ஐரோப்பாவின் இயற்கை அமைப்பை கீழே கூறப்பட்டுள்ள முறையில் வகைப்படுத்தலாம் அவை எவை எனக் காண்போம்.

- வடமேற்கு குன்றுகள்
- மத்திய உயர் நிலங்கள்
- வடக்கு ஐரோப்பிய சமவெளிகள்
- ஆல்பைன் மலைத்தொடர்கள்

#### ஃபியோடு

*பனிப் பாறைகளின் அரித்தல் செயல்பாட்டின் பலனாக U' வடிவில் உருவாகும் பள்ளத்தாக்குகள் 'U' வடிவ பள்ளத்தாக்குகள் ஆகும். உயர்ந்த அட்சரேகை பகுதிகளின் கடற்கரைகளில் இவ்வாறு உருவாகும் பனிப்பாறை பள்ளத்தாக்குகள் ஃபியோடுகள் எனப்படும். வெப்ப–குளிர் நீரோட்டங்கள் சந்திக்கும் பகுதிகளிலுள்ள ஃபியோடுகளில் பிளாங்டன் (Planktons) ஏராளமாக வளர்கின்றன. இவற்றை உணவாகக் கொள்ளும் மீன்கள் ஏராளமாக இங்கு காணப்படுவதால் இப்பகுதிகள் மீன்பிடிக்கும் தொழிலுக்கு ஏற்றவையாகும். எனவே, ஸ்காண்டிநேவிய பகுதிகள் மீன்பிடித் தொழிலுக்குப் புகழ்வாய்ந்ததாகும்.*

### வடமேற்கு குன்றுகள் (North Western Highlands)

ஐரோப்பாவின் வடமேற்கு பகுதிகளில் அமைந்துள்ள உயரமான குன்றுகளும் நார்வே, ஸ்வீடன், பின்லாந்து போன்ற பகுதிகளில் பரந்து காணப்படும் ஸ்காண்டிநேவியன் பீடபூமியும் வடமேற்கு குன்றுகளின் சிறப்பாகும். பனிமூடிய குன்றுகளும் பனிப்பாறைகளும் அதிவேகமாகப் பாயும் நதிகளும் அழகான வனங்களும், ஏரிகளும் நிறைந்த ஸ்காண்டிநேவியா சுற்றுலாப் பயணிகளின் மனம் கவர்ந்த ஓர் இடம் ஆகும். நீண்ட காலமாக பனிப்பாறைகள் சிதைவடைவதன் மூலமாகவும் உருகுவதன் மூலமாகவும் உருவான உருண்ட உச்சிப் பகுதி உடையதும் செங்குத்தான சரிவுடையதுமான குன்றுகள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. ஸ்காண்டிநேவியன் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் ஃபியோடுகள் (Fjords) இப்பகுதியின் வேறொரு சிறப்புத் தன்மையாகும்.


*படம் 10.5 ● நார்வேயின் ஃபியோடு கடற்கரை*

#### பனியாறு உருவாக்கம் *(Glaciation)*, சிதைவு *(Weathering)*

*நகரும் பனிப்படலங்கள் பனிப்பாறைகள் எனப்படும். இவற்றின் நகர்வின் விளைவாக வேறுபட்ட நிலத்தோற்றங்கள் உருவாக்கப்படுவதும் மேற்பரப்பில் உருவமாற்றம் ஏற்படவும் செய்கிறது. இச்செயல்பாடு பனியாறு உருவாக்கம் எனப்படும்.*

*புவிமேற்பரப்பில் பௌதீகம், வேதியியல், உயிரியல் ஆகியவற்றினால் பாறைகளில் ஏற்படும் வெடிப்பு அல்லது பொடிதல் சிதைவு எனப்படும்.*

*நிலப்படப் புத்தகத்தின் உதவியுடன் ஸ்காண்டிநேவியன் பகுதியில் உட்படும் நாடுகளைக் கண்டுபிடித்துப் பட்டியலிடவும்.*

### வட ஐரோப்பிய சமவெளி (North European Plains)



படம் 10.6 ● ஸ்டெப்பீஸ் புல்வெளி

வட ஐரோப்பிய சமவெளி வடமேற்கில் உள்ள குன்றுகளின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இதை மிகப்பெரிய ஐரோப்பிய சமவெளி என்று அழைக்கிறோம். கிழக்கே யூரல் மலைத்தொடர்கள் முதல் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடல் வரை இச்சமவெளி பரந்து விரிந்து காணப்படுகிறது. சாதாரணமான பரந்த நிலத்தோற்றமுள்ள சமவெளிகளில் அங்கும் இங்குமாக சிறு குன்றுகள் காணப்படுகின்றன. வேளாண்மைக்கு மிகவும் ஏற்ற பகுதியான வட ஐரோப்பிய சமவெளி பனிப்பாறைகளின் படிதல் செயல்பாட்டாலும் ஐரோப்பியாவின் முக்கிய நதிகளான வோல்கா, (Volga), டோன் (Don), நைப்பர் (Dnieper) போன்றவற்றால் ஏற்பட்ட வண்டல் படிதலின் விளைவாக உருவானதாகும். ஐரோப்பாவின் மிகவும் நீளமான நதி வோல்கா. வட ஐரோப்பிய சமவெளிகளில் பரவலாகக் காணப்படும் புல்வெளிகள் ஸ்டெப்பிஸ் (Steppes) எனப்படும்.

*நிலப்படப் புத்தகத்தின் (Atlas) உதவியுடன் வோல்கா நதி எந்த நாட்டின் வழியாகப் பாய்கிறது என்பதைக் கண்டுபிடி.*

### மத்திய உயர் நிலப்பகுதி (Central Uplands)

வட ஐரோப்பிய சமவெளியின் தென்பகுதியில் மத்திய உயர் நிலப்பகுதிகள் அமைந்துள்ளன. சிறிய குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் பீடபூமிகளும் நிறைந்த இந்த நிலப்பகுதி மேற்கே அயர்லாந்து முதல் கிழக்கே ரஷ்யா வரை பரந்து காணப்படுகிறது. ரைன் (Rhine), ரோன் (Rhone) போன்ற நதிகள் இப்பகுதியை நீர்வளம் மிக்கதாக்குகின்றன.

மத்திய உயர் நிலப்பகுதியில் உட்படும் வேறுபட்ட நிலத் தோற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அட்டவணையைப் பரிசோதித்து அவை ஒவ்வொன்றும் அமைந்துள்ள நாடுகளைக் கண்டுபிடிக்கவும். நிலப்படப் புத்தகத்தைப் பயன்படுத்தி அவற்றின் அமைவிடத்தையும் கண்டுபிடிக்கவும்.

| மத்திய உயர் நிலப்பகுதி – முக்கிய நிலத் தோற்றங்கள் | |
|---|---|
| **நில அமைப்புகள்** | **நாடு** |
| ரைன் பள்ளத்தாக்கு (Rhine Valley), வோஸ்கஸ் மலைகள் (Vosges Mountains), ஜூரா மலைகள், (Jura Mountains) மத்திய மாஸிஃப் பீடபூமி (Central Massif Plateau) | பிரான்ஸ் |
| ஆர்டனிஸ் மலைகள் (Ardennes Mountains) | பெல்ஜியம் |

| | |
|---|---|
| கருங்காடு மலைகள் (Black Forest Mountains), ஹார்ஸ் மலைகள் (Harz Mountains) | ஜெர்மனி |
| மஸேற்றா பீடபூமி (Maseta Plateau) | ஸ்பெயின் |
| பொஹிமியன் பீடபூமி (Bohemian Plateau) | செக் குடியரசு |



*படம் 10.7 • ஜெர்மனியில் உள்ள கருங்காடு மலைகள்*




*படம் 10.8 •*

### ஜுராசிக் பார்க்

*நீங்கள் ஜுராசிக் பார்க் என்ற படத்தைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? உலகில் மிகப்பெரிய விலங்கான டைனோசர்கள் வாழ்ந்திருந்தது ஜுராசிக் காலகட்டத்தில் ஆகும். சுமார் 143 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஜுராசிக் கால கட்டத்திலுள்ள பாதைகள் ஐரோப்பியாவில் உள்ள ஜுரா மலைத்தொடர்ச்சிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் இக்காலம் ஜுராசிக் காலம் எனப்படுகிறது.*

*மத்திய உயர் பகுதிகளில் பீடபூமிகள் அமைந்துள்ள நாடுகளைக் கண்டுபிடித்து எழுதவும்.*

- *பிரான்ஸ்*
-
-



*படம் 10.9 • ஆல்ப்ஸ் மலை தொடர்*

### ஆல்பைன் மலைத்தொடர் (Alpine Mountain System)

மத்திய உயர்நிலப் பகுதியின் தென் பகுதியில் அமைந்துள்ள இணையான மலைத்தொடர்களுடைய மடிப்பு மலைத்தொடர்களே ஆல்பைன் மலைத்தொடர். மேற்கு அட்லாண்டிக் பெருங்கடல் முதல் கிழக்கில் காஸ்பியன் கடல் வரை இம்மலைத் தொடர்கள் நீண்டு காணப்படுகின்றன. ஆல்ப்ஸ் (Alps), காக்கஸஸ் (Caucasus), கார்ப்பாத்தியன்ஸ் (Carpathians) போன்றவை முக்கியமான ஆல்பைன் மலைத்தொடர்களாகும். காக்கசஸ் மலைத்தொடரில் உள்ள ஆல்ப்ரஸ் மலைச் சிகரம் ஐரோப்பாவின் மிக உயர்ந்த சிகரமாகும்.

## டிராகுலா கோட்டை



படம் 10.10 ● டிராகுலா கோட்டை

*"நண்பரே! கார்ப்பார்த்தியனுக்கு வரவேற்கிறேன். லண்டனில் இருந்துள்ள பயணம் இனிதாக இருந்தது என நம்புகிறேன். நான் உங்களைப் பார்க்க ஆவலாக உள்ளேன். இன்று நன்றாக தூங்குங்கள். நாளை 3:00 மணிக்கு புகோவினோய்க்கு புறப்படும் வண்டியில் உங்களுக்கு ஒரு இருக்கையை முன்பதிவு செய்துள்ளேன். எனது நாட்டில் தங்குவதற்கு உங்களுக்கு விருப்பக் குறைவு இருக்காது என்று நம்புகிறேன் இப்படிக்கு உங்களுடைய சொந்த டிராகுலா" ஒரு நூற்றாண்டு காலமாக உலகம் முழுவதும் உள்ள வாசகர்களைப் பயத்தின் முள் முனையில் நிறுத்தி இருந்த "டிராகுலா" என்ற நாவலின் பகுதியாகும் இது. லண்டன் நகரத்தில் மாளிகை வாங்க நினைக்கும் டிராகுலா பிரபு என்ற அசுரனைத் தேடி நாயகனான ஜோனாதன் ஹார்க்கர் டிராகுலா கோட்டையில் சென்றடைவதுதான் நாவலின் தொடக்கம். ஐரிஷ் எழுத்தாளரான ஃப்ராம் ஸ்டோக்கர் 1897 இல் எழுதிய இந்த நாவலின் பெரும்பாலான பகுதிகளின் பின்னணியாக இருந்த டிராகுலா கோட்டை கார்ப்பாத்தியன் மலைத்தொடர்களில் தான் அமைந்துள்ளது.*

## மடிப்பு மலைகள்

*புவியின் வெளிப்புற அடுக்கான புவியோடும் உட்புற அடுக்கான புவி உறையின் மேல்பகுதியும் சேர்ந்து பொதுவாக திட நிலையில் காணப்படும் மண்டலமே கரைமண்டலம் எனப்படும். ஒழுங்கற்ற விளிம்புகளைக் கொண்ட துண்டுகளால் ஆனது கரைமண்டலம். பல்லாயிரம் கிலோமீட்டர் பரப்பளவு மற்றும் சராசரியாக 100 கிலோமீட்டர் திண்ணமும் உள்ள பகுதி கரைமண்டலத் தகடுகள் (Lithosphere plates) என அழைக்கப்படுகின்றன. தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது அடுக்குகளின் விளிம்புகளில் பாறைத் தகடுகள் மடங்கி உயர்ந்து உருவாகும் மலைகள் மடிப்பு மலைகள் எனப்படும். எடுத்துக்காட்டு –இமயமலை.*

*ஐரோப்பாவின் இயற்கை அமைப்பு நிலப் படத்தில் (படம் 10.4) காக்கஸஸ் மலைத் தொடர்களைக் கண்டுபிடிக்கவும். ஐரோப்பாவில் மிகவும் உயரமான சிகரத்திற்கு முக்கோண (▲) அடையாளம் கொடுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சிகரத்தின் பெயரைக் கண்டுபிடித்து எழுதுக.*

*பின்வரும் விளக்கப்படம் ஐரோப்பாவின் இயற்கை அமைப்புடன் தொடர்புடையது. அதனை நிறைவு செய்க.*

ஐரோப்பாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள்

| வட மேற்கில் உள்ள குன்றுகள் | | மத்திய உயர் நிலங்கள் | |
|---|---|---|---|
| • <br> • | • ஸ்டெப்பீஸ் <br> • | • <br> • | • மடிப்பு மலைகள் <br> • |

## காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் – விலங்கினங்கள்

ஐரோப்பாவின் பொதுவான காலநிலை மிதமான கோடைக்காலமும் ஒப்பீட்டளவில் கடுமையான குளிர்காலமும் ஆகும். ஆனால் வட்டார அடிப்படையில் காலநிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அட்சக்கோட்டின் அமைவிடம் இயற்கை அமைப்பு மற்றும் கடலின் அருகாமை போன்றவை காலநிலையில் தாக்கம் செலுத்துகின்றன.

உயர்ந்த அட்சக்கோட்டின் அமைவிடம், மலைகளின் தாக்கம் போன்றவை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வறண்ட குளிர்கால நிலைக்குக் காரணமாகின்றது. ஆனால் தெற்கு, மேற்குப் பகுதிகளில் கடலின் அருகாமையின் தாக்கத்தால் மிதமான காலநிலை அனுபவப்படுகிறது.

உலகில் பாலைவனமே இல்லாத கண்டம் ஐரோப்பாவாகும். ஐரோப்பாவின் பெரும்பான்மை பகுதிகளிலும் பொழிதலின் பல்வேறு வடிவங்களான மழையும் பனியும் கிடைக்கிறது.

### பொழிதல்

*தொடர்ச்சியான சுருங்குதல் செயல்பாட்டின் வழியாக நீர்த் துளிகள் மேகங்களில் வெளியேறி திட திரவ வடிவத்தில் புவியில் விழும் செயல்பாடு பொழிதல் எனப்படும். மழை, பனிப்பொழிவு, பனிமழை மற்றும் ஆலங்கட்டி மழை போன்றவை பொழிதலின் பல்வேறு வடிவங்கள் ஆகும்.*

### வெப்பம் – குளிர் பாலைவனங்கள்

*பாலைவனம் என்ற சொல்லைக் கேட்டவுடன் நமது மனதில் முதலில் தோன்றும் காட்சி பரந்து விரிந்து காணப்படும் மணல் பகுதியாகும். ஆனால் அதுமட்டுமல்ல, 25 சென்டிமீட்டருக்கு அதிகமாக வருடாந்திர மழை கிடைக்காத எந்த ஒரு பகுதியும் பாலைவனமாகக் கருதப்படுகிறது. வருடம் முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும் அண்டார்டிகா ஒரு பாலைவனமாகும். அண்டார்டிகா ஒரு குளிர்பாலைவனமாகக் கருதப்படுகிறது.*

காலநிலை அடிப்படையில் ஐரோப்பாவை பல காலநிலை மண்டலங்களாகப் வகைப்படுத்தலாம். ஒவ்வொரு காலநிலை மண்டலத்திற்கும் ஏற்ப வேறுபட்ட தாவர – உயிரினங்கள் காணப்படுகின்றன.




*படம் 10.11 • ஐரோப்பா –காலநிலை மண்டலங்கள்*

## ஆர்டிக் காலநிலை / தூந்திராக் காலநிலை
**(Arctic/Tundra Climate)**

ஐரோப்பாவின் ஆர்ட்டிக் பகுதிகளில் தூந்திராக் காலநிலை அனுபப்படுகிறது. குளிர்ந்த குறுகிய கோடைக்காலமும், மிக நீண்ட கடுமையான குளிர் காலமும் ஆர்டிக் காலநிலையின் தனித்தன்மையாகும். கோடைக் காலத்தில் வெப்பநிலை 10°C வரை உயரும்போது குளிர்கால வெப்பநிலை -25°C முதல் -40°C

வரை குறைகிறது. குளிர்காலத்தில் ஐந்து முதல் ஆறு மாதங்கள் வரை சூரிய ஒளி கிடைக்காத சூழ்நிலை இங்கு உள்ளது


*படம் 10.12*

ஒரு நபர் வாயு மண்டலத்தை நோக்கி தண்ணீரை வீசும்போது நிமிட நேரத்திற்குள் அது பனியாக மாறுகின்ற காட்சியைத் தான் படம் 10.12 இல் காண்கிறோம். இதிலிருந்து இங்குள்ள குளிர்காலத்தின் கடினத்தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

தாவரங்களின் வளர்ச்சிக்கு சூரிய ஒளி எவ்வளவு முக்கியம் என்பது நமக்குத் தெரியும். நீண்ட இரவும் கடுமையான குளிரும் பனி பொழிவும் தாவரங்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது. இதனால் குளிர்காலத்தைத் தாங்கி வளரும் குற்றிச்செடிகள் (Shrubs), பூஞ்சைகள் (Lichens), பாசிகள் (Mosses) மட்டுமே பொதுவாக இக்கால நிலையில் வளர்கின்றன.

தூந்திராக் காலநிலை பகுதியில் தாவரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதால் விலங்கினங்களின் எண்ணிக்கையையும் பாதிக்கிறது. குளிரை தாங்கக்கூடிய அடர்த்தியான ரோமங்களைக் கொண்ட ஓநாய், ரெயின்டீர் (Reindeer), துருவக்கரடி (Polar bear), ஆர்டிக் காட்டு முயல் (Arctic hare) போன்ற மிகக் குறைவான விலங்குகளை மட்டுமே இங்கு காண முடிகின்றது.


*படம் 10.13 • ஓநாய்*


*படம் 10.14 • ரெயின்டீர்*


*படம் 10.15 • துருவக்கரடி*



*ஆர்டிக் காலநிலையைப் போன்ற ஒரு சூழலில் நீங்கள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டால் உங்களின் அன்றாட வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள் என்று கலந்துரையாடல் நடத்தி வகுப்பில் வெளியிடவும். குறிப்புகள் : உணவு பழக்கவழக்கங்கள், ஆடைகள், வேளாண்மை*

## துணை ஆர்ட்டிக் காலநிலை / டைகா கால நிலை

**(Sub Arctic/Taiga Climate)**


*படம் 10.16 • ஊசி இலை மரங்கள்*

தூந்திரக் காலநிலைப் பகுதியுடன் சேர்ந்து காணப்படும் தெற்கு துணை ஆர்ட்டிக் பகுதிகளில் டைக்கா காலநிலை அனுபவப்படுகிறது.



படம் 10.17 • எர்மைன்



படம் 10.18 • வெள்ளி நரி

மித கோடைக்காலம் குறைந்த வெப்பம் உடையதாக இருந்தாலும் குளிர்காலம் ஆர்டிக் காலநிலையைப் போலவே கடுமையானதாக் இருக்கும். வருடத்தில் ஐந்து முதல் ஏழு மாதங்கள் வரை வெப்பநிலை $0^0$C க்கும் குறைவாகவே காணப்படுகிறது. டைக்கா காலநிலையில் பொழிதல் பொதுவாகப் பனிவடிவில் இருக்கும்.

ஊசியிலை மரங்கள் (Coniferous Trees) நிறைந்த பசுமைமாறா காடுகள்தான் டைக்கா காலநிலையின் முக்கிய தாவரச் செல்வம் ஆகும். பைன் (Pine), தேவதாரு (Cedar) போன்றவை முக்கியமான மரங்கள் ஆகும். அடர்த்தியான ரோமங்கள் உடைய காட்டுப்பூனை (Lynx), எர்மைன் (Ermine), வெள்ளி நரி (Silver Fox) போன்றவை இங்குள்ள முக்கிய விலங்குகளாகும்.

*துணை ஆர்ட்டிக் காலநிலையின் அடிப்படையில் தரப்பட்ட அட்டவணையை நிரப்புக.*

| நாடுகள் | தாவரங்கள் | விலங்குகள் |
|---|---|---|
| *நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, ரஷ்யா* | | |

## கிழக்கு ஐரோப்பிய காலநிலை

**(Eastern European Climate)**



படம் 10.19 • மறிமான்

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதிகளில் கடுமையான வெப்பமும் அதிகமான குளிரும் அனுபவப்படுகிறது.இக்கால நிலையை கிழக்கு ஐரோப்பிய காலநிலை என அழைக்கிறோம். குளிர்கால வெப்பநிலை பெரும்பாலும் 0°C க்கும் குறைவாகவே காணப்படுகிறது. கோடையில் குறைந்த அளவில் மழைக் கிடைக்கிறது.

அரிதான மழையும் கடுமையான வெப்பமும் காணப்படுவதால் இக்கால நிலைப் பகுதிகளில் பெரிய மரங்கள் வளர்வதில்லை. ஐரோப்பாவின் புல்வெளிகளான ஸ்டெப்பீஸ் பற்றிய கலந்துரையாடலை நீங்கள் நினைவு கூறுவீர்கள் அல்லவா? ஸ்டெப்பிஸில் அனுபவப்படுவது கிழக்கு ஐரோப்பியன் காலநிலையாகும். மறிமான் (Antelope), ஓநாய் (Wolf), குதிரை (Horse) போன்ற விலங்குகள் இங்கு முக்கியமாகக் காணப்படுகின்றன.

*கிழக்கு ஐரோப்பிய காலநிலை அனுபவப்படும் ரஷ்யா, உக்ரைன், ரொமானியா ஹங்கேரி, பல்கேரியா போன்ற நாடுகளை மார்பிள் மென்பொருளைப் பயன்படுத்தி அறிந்து கொள்ளவும்.*

## மேற்கு ஐரோப்பிய காலநிலை

**(Western European Climate)**

கடுமையான குளிரும் மிதமான வெப்பமும் வருடம் முழுவதும் கிடைக்கும் மழையும் மேற்கு ஐரோப்பிய கால நிலையின் தனிச்சிறப்புகளாகும். வடமேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், நெதர்லாந்து (Netherlands), பெல்ஜியம் (Belgium), தென் நார்வே, டென்மார்க் (Denmark) மேற்கு பிரான்ஸ், வடக்கு ஸ்பெயின் போன்ற இடங்களில் மேற்கு ஐரோப்பிய காலநிலை அனுபவப்படுகிறது. அட்லாண்டிக் பெருங்கடலின் அருகாமை இக்கால நிலையில் தாக்கம் செலுத்துகிறது.



*படம் 10.20 ● பீச் மரம்*

தாவரங்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமான காலநிலை மேற்கு ஐரோப்பிய கால நிலையாகும். வலுவான தடியும் அகன்ற இலைகளையும் உடைய இலையுதிர் மரங்களும்தான் இங்கு காணப்படுகின்றன. பீச் (Beech), எல்ம் (Elm), ஒக் (Oak), பிர்ச் (Birch), ஆஷ் (Ash) போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். அணில், நரி, முயல், மான், ஓநாய் போன்ற விலங்குகளும் இங்கு காணப்படுகின்றன.



*படம் 10.21 ● எல்ம் மரம்*



*படம் 10.22 ● ஒக்மரம்*



*படம் 10.23 ● ஆஷ் மரம்*

## மத்திய தரைக்கடல் காலநிலை (Mediterranean Climate)

மத்திய தரைகடலினைச் சுற்றியுள்ள பகுதிகளில் அனுபவப்படும் காலநிலை மத்திய தரைக்கடல் காலநிலை எனப்படும். போர்ச்சுக்கல், ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ், போஸ்னியா, ஹர்சகோவினா, குரோஷியா மற்றும் தென் பிரான்ஸ் போன்ற இடங்களில் மத்திய தரைக்கடல் காலநிலை அனுபவப்படுகிறது. வெப்பம் கூடிய வறண்ட கோடைக்காலமும், குளிர்ந்த, மழையோடும் உள்ள குளிர்காலமும் மத்திய தரைக் கடல் கால நிலையின் சிறப்புத்தன்மை ஆகும்.



*படம் 10.24 ● லாவண்டர்*



*படம் 10.25 ● ஒலிவ்*

மரங்களும், குற்றிச்செடிகளும் நன்றாக வளரும் கால நிலையாகும். ரோஸ்மேரி (Rosemary), லாவண்டர் (Lavender), ஒலிவ் (Olive), பைன் (Pine), ஆரஞ்சு (Orange), திராட்சை (Grape), அத்தி (Fig) போன்றவை முக்கியமான தாவரங்களாகும்.

ஐபீரியன் காட்டுப் பூனை (Iberian Lynx), பார்பரி மக்கா (Barbary Macaque) மஃப்ளோன் ஆடு (Mouflon Goat), ஸ்பானிஷ் இம்பீரியல் பருந்து



*படம் 10.26 ● அத்தி*

(Spanish Imperial Eagle), கௌளிக் கிளி (Nuthatch) போன்ற அபூர்வ உயிரினங்கள் மத்திய தரைக் கடல் பகுதியில் காணப்படுகின்றன.


படம் 10.27 • ஸ்பானிஷ் இம்பீரியல் பருந்து


படம் 10.28 • ஐபீரியன் காட்டுப் பூனை


படம் 10.29 • பார்பரி மக்கா


படம் 10.30 • மஃப்ளோன் ஆடு

### விற்றி கல்ச்சர்

*மத்திய தரைகடல் பகுதிகளில் திராட்சை வேளாண்மை மிகவும் புகழ்பெற்றதாகும். அறிவியல் அடிப்படையில் பயிரிடும் திராட்சை வேளாண்மையை விற்றி கல்ச்சர் என்கிறோம். இதனுடன் ஒயின் தயார் செய்வதும் இங்குள்ள முக்கிய பொருளாதாரச் செயல்பாடகும்.*

*வரைபடப் புத்தகத்தின் துணையுடன் தரப்பட்டுள்ள ஐரோப்பா நிலப்படத்தில் மத்தியத் தரைகடல் காலநிலை அனுபவப்படும் பகுதிகளை அடையாளப்படுத்தவும்.*



படம் 10.31 • ஐரோப்பா நிலப்படம்

*ஐரோப்பாவின் காலநிலை சிறப்புத் தன்மைகளை ஆய்வு செய்து தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.*

| காலநிலைப் பகுதிகள் | சிறப்பு தன்மைகள் |
|---|---|
| • ஆர்ட்டிக் காலநிலை | • <br> • |
| • | • <br> • |
| • | • <br> • |
| • | • <br> • |
| • | • <br> • |

காலநிலைக்கு ஏற்ப தாவர, உயிரினங்களுக்கு வேறுபாடுகள் ஏற்படுவது போல கால நிலையும் இயற்கை அமைப்பும் மக்களின் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஐரோப்பாவில் சமூக, கலாச்சார வாழ்க்கை பற்றி ஆய்வு செய்வோம்.

## சமூகமும் மக்களும்

மனிதர்கள் ஆப்பிரிக்காவில் இருந்து தான் உலகின் பல பகுதிகளுக்கும் குடி பெயர்ந்தனர் என்று நம்பப்படுகிறது. 40000 முதல் 50000 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிற்கு வந்த மனித இனம் பின்னர் பல்வேறு மொழிகளைப் பேசியும் பலவித பண்பாட்டையும் பின்பற்றினர். பிற நாடுகளுக்கான கப்பல் பயணங்களும் ஆய்வுகளும் ஐரோப்பாவின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மொழி வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

### மக்கள் தொகை

நிலப்பரப்பளவில் ஆறாம் இடத்தில் இருந்தாலும் மக்கள் தொகையில் ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் ஐரோப்பா உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ரஷ்யா மிகவும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடாகும். மக்கள் தொகையில் ரஷ்யாவுக்கு அடுத்ததாக ஜெர்மனி, யுனைடெட் கிங்டம், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் இடம்பெறுகின்றன.

ஐரோப்பாவின் எல்லா பகுதிகளிலும் மக்கள் தொகை ஒன்றுபோல் காணப்படுவதில்லை. ஐரோப்பா கண்டத்தின் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள நாடுகளில் மக்கள் தொகை கூடுதலாக காணப்படுகின்றன. ஸ்காண்டிநேவிய நிலப் பகுதியில் உள்ள நாடுகளையும் அவற்றின் காலநிலை மற்றும் இயற்கை அமைப்பை பற்றியும் நாம் விவாதித்தோம் அல்லவா? புவியியல் சிறப்புத் தன்மைகளால் ஸ்காண்டிநேவிய நிலப் பகுதிகளான நார்வே, ஸ்வீடன், பின்லாந்து போன்ற நாடுகளில் மக்கள் தொகை மற்றும் மக்கள் அடர்த்தி மிகக் குறைவாக காணப்படுகின்றன. இந்நாடுகளில் தெற்கு கடலுடன் சேர்ந்து காணப்படும் நகரங்களில்தான் பெரும்பான்மையான மக்கள் வாழ்கின்றனர்.

### யுனைட்டெட் கிங்டம்




படம் 10.32

*இங்கிலாந்து (England), ஸ்காட்லாந்து (Scotland), வேல்ஸ் (Wales) ஆகிய நாடுகளைச் சேர்த்து கிரேட் பிரிட்டன் (Great Britain) எனவும் கிரேட் பிரிட்டனுடன் வட அயர்லாந்தும் (Northern Ireland) சேர்ந்து அவற்றை யுனைட்டட் கிங்டம் (United Kingdom) எனவும் அழைக்கின்றனர்*

*நார்வே, ஸ்வீடன், பின்லாந்து போன்ற நாடுகளின் இயற்கை அமைப்பும் காலநிலையும் மக்கள் தொகை அடர்த்தியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றி ஒரு குறிப்பு தயார் செய்யவும்.*

### ஐரோப்பிய யூனியன்

*1957–இல் பெல்ஜியம், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, லக்சம் பர்க், நெதர்லாந்து ஆகிய ஆறு நாடுகள் சேர்ந்து தொடங்கிய கூட்டமைப்பு 1993 இல் ஐரோப்பிய யூனியன் உருவாவதற்கு வழி வகுத்தது. நாடுகளிடையே பொருளாதார ஒற்றுமையும் உள்நாட்டு சந்தையையும் நோக்கமாகக் கொண்ட இந்த கூட்டமைப்பு பின்னர் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் துறைகளில் எல்லாம் கவனம் செலுத்தியது. சமாதானம், நல்லிணக்கம், மக்களாட்சி மற்றும் மனித உரிமை போன்ற துறைகளின் சாதனைக்கு ஐரோப்பிய யூனியனுக்கு 2012 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.*

வேறுபட்ட இயற்கை அமைப்பு, கலாச்சாரம் மற்றும் குடியேற்றத்தின் தாக்கம் காரணமாக பல்வேறு மொழிகள் ஐரோப்பாவில் பேசப்படுகின்றன. ஐரோப்பாவில் மிகப் பெரும்பான்மையான மக்கள் பேசுவது ரஷ்ய மொழியாகும். இதற்கு அடுத்தபடியாக ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் போன்ற மொழிகள் பரவலாகப் பேசப்படுகின்றன.

ஐரோப்பாவின் மக்கள் தொகை வளர்ச்சிக்கு முக்கிய காரணம் குடியேற்றம் ஆகும். ஆப்பிரிக்கா, மத்திய ஆசியா மற்றும் தெற்கு ஆசியா போன்ற இடங்களில் இருந்து பெருமளவில் மக்கள் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குக் குடியேறுகின்றனர்.

ஐரோப்பா உலகில் மிகவும் வளர்ச்சியடைந்த பகுதிகளில் ஒன்றாகும். சிறந்த காலநிலை, எளிதில் கிடைக்கும் இயற்கை வளங்கள், தொழில்நுட்ப அறிவு போன்றவை ஐரோப்பாவை தொழில் துறையிலும் வேளாண் துறையிலும் செல்வச் செழிப்பு மிக்கதாக மாற்றுகிறது. இதுவே ஐரோப்பாவை நோக்கிய குடியேற்றத்திற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஐரோப்பாவில் முக்கிய வேளாண்முறைகளும் தொழில்களும் எவையெனக் காண்போம்.

## வேளாண்மையும் தொழிலும்

ஐரோப்பாவில் வேளாண்மை வட்டார அளவில் பன்முகத்தன்மையில் இருந்தாலும் போதுமான நில வசதிக்கும் மக்கள் தொகை அடர்த்திக்கும் ஏற்ப தீவிர வேளாண்மை, விரிவான வேளாண்மை மற்றும் கலப்பு வேளாண்மை போன்ற வேளாண் முறைகள் முக்கியமாக காணப்படுகின்றன.

| தீவிர வேளாண்மை (Intensive Farming) | விரிவான வேளாண்மை (Extensive Farming) | கலப்பு வேளாண்மை (Mixed Farming) |
|---|---|---|
| • மக்கள் தொகை கூடிய பகுதிகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வேளாண் முறை | • பரந்த நிலப்பரப்பில் வாணிப நோக்குடன் இயந்திரமயமாக்கப்பட்ட தானிய வேளாண் முறை | • வேளாண்மையுடன் கால்நடை பராமரிப்பையும் இணைந்து நடத்துகின்ற வேளாண் முறை |

| | | |
|---|---|---|
| • மத்திய தரைக் கடல் காலநிலை அனுபவப்படும் நாடுகளில் வேளாண்மை செய்யப்படுகின்றன. | • வடக்கு ஐரோப்பாவின் ஸ்டெப்பிஸ் புல்வெளியில் விரிவான வேளாண்மை நடைபெறுகிறது | • மத்திய மேற்கு ஐரோப்பாவில் இந்த வேளாண் முறை அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது |
| • ஆரஞ்சு, ஒலிவ், திராட்சை போன்றவை முக்கியமாகப் பயிர் செய்யப் படுகின்றன. | • கோதுமை முக்கிய பயிராகும். ஆனால் பார்லி, சோளம் மற்றும் ஓட்ஸ் போன்ற தானியங்களும் பயிர் செய்யப்படுகின்றன. | • தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதுடன் கால்நடைகளையும் பராமரிக்கின்றனர். |

*ஐரோப்பாவில் நடைமுறையில் உள்ள வேளாண் முறைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்களைக் கண்டுபிடித்து அட்டவணையை நிரப்பவும்.*

| பகுதி | பயிர்கள் |
|---|---|
| *மத்திய மேற்கு ஐரோப்பா* | |
| *மத்தியதரைக்கடல் நிலப்பகுதி* | |
| *ஸ்டெப்பீஸ் புல்வெளிகள்* | |

ஐரோப்பாவில் வேளாண்மையைப் போலவே முக்கியமான ஒரு அடிப்படை பொருளாதார செயல்பாடு மீன்பிடித்தலாகும். கடற்கரையின் அருகாமை எவ்வாறு ஐரோப்பாவின் மீன்பிடித்தல் துறையில் தாக்கம் செலுத்துகிறது என்பதை ஆய்வு செய்வோம்.

### மீன்பிடித்தல்

வடக்குக் கடல் (North Sea), வட அட்லாண்டிக் பெருங்கடல், ஆர்ட்டிக் பெருங்கடல் என்பவற்றுடன் சேர்ந்து காணப்படும் நார்வே, டென்மார்க் மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் முக்கியமான தொழில் மீன்பிடித்தல் ஆகும். காட்மீன் (Cod), மத்தி (Herring), சால்மன் (Salmon), ஹாலிபட் (Halibut), கடல் ட்ரவுட் (Sea Trout) போன்ற மீன் வகைகள் இப்பகுதிகளில் தாராளமாகக் கிடைக்கின்றன.



*படம் 10.33 • சால்மன்*



*படம் 10.34 • ஹாலிப்பட்*



*படம் 10.35 • கடல் ட்ரவுட்*

**பெரிய மீன்பிடி வங்கி**

***(Great Fisher Bank)***

*ஐரோப்பாவில் மிக அதிகமாக மீன் கிடைக்கும் பகுதிகள் டென்மார்க் – நார்வே கடற்கரையிலுள்ள பெரிய மீன்பிடி வங்கியும் டோகர் வங்கியுமாகும் (Dogar Bank). இவை தவிர மத்திய தரைக்கடல், கருங்கடல், உள்நாட்டு காயல்களும் மீன்பிடித்தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன.*

### ஐரோப்பாவில் வாகன உற்பத்தி தொழில்

*ஐரோப்பாவிலுள்ள நாடுகள் வாகன உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. உலகப் போர்களின் போது தங்கள் நாட்டின் இராணுவத்துக்காகப் போர் விமானங்கள், டிரக்குகள் மற்றும் டேங்கர்கள் உருவாக்கிய நிறுவனங்கள் வாகன உற்பத்தி துறைக்கு மாறின. ஆடி. ஃபெராரி, உகாட்டி, ஃபோக்ஸ்வாகன், மெர்சிடஸ், பென்ஸ், BMW ரோல்ஸ்ராய்ஸ், ஸ்கேன்னியா, வால்வோ மற்றும் போர்ஷே போன்றவை உலகம் முழுவதும் இரசிகர்களைக் கொண்ட வாகன உற்பத்தி நிறுவனங்களாகும்.*

## தொழில்

தொழில் புரட்சி ஐரோப்பாவின் வளர்ச்சிக்கு வழிவகித்தது. ஐரோப்பாவில் இரும்பு உருக்குத் தொழில், துணி உற்பத்தி மற்றும் கட்டுமானத்துறை அனைத்தும் உலக கவனத்தை ஈர்த்தன.




*படம் 10.36 ● ஐரோப்பாவின் தொழில் நிலப்படம்*

*ஐரோப்பாவின் தொழில் நிலப்படத்தை (படம் 10. 36) ஆய்வு செய்து கீழே தரப்பட்டுள்ள முக்கிய தொழில்கள் எந்தெந்த நாடுகளில் உள்ளன என்று கண்டுபிடித்து அட்டவணையை நிரப்புக.*

| தொழில்கள் | நாடுகள் |
|---|---|
| *இரும்பு உருக்கு* | |
| *கப்பல் கட்டுமானம்* | |
| *துணி உற்பத்தி* | |
| *வாகன உற்பத்தி* | |

வேளாண்மையும் தொழில்களும் மக்களின் சமுக, பொருளாதார, கலாச்சார வாழ்க்கையில் வெளிப்படையான தாக்கத்தை செலுத்துகின்றன. ஐரோப்பாவின் முக்கிய விழாக்களும் கலாச்சார மையங்களும் நகரங்களும் எவையென ஆராயலாம்.

## விழாக்களும் கலாச்சார நகரங்களும்

ஐரோப்பா பன்முக கலாச்சாரங்கள், நம்பிக்கைகள் மற்றும் விழாக்களின் மையமாகும். ஐரோப்பாவில் பன்முக கிறிஸ்துமஸ், புதுவருட விழாக்கள், ஜெர்மனியில் அக்டோபர் ஃபெஸ்ட் (Oktober Fest), ஸ்பெயினில் லாடொமேற்றினா (La Tomatina), காளைப்போர், நெதர்லாந்தில் கிங்க்ஸ் டே (King's Day) கார்ணிவெல் மற்றும் வெனீஸ் கார்னிவெல் போன்ற விழாக்கள் குறிப்பிடும்படியான கொண்டாட்டங்களாகும். ஈஃபிள் கோபுரம், பீஸா சாய்ந்த கோபுரம், லண்டன் பாலம் (London Bridge) போன்ற கட்டுமானங்களும் கலை மற்றும் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நகரங்களும் ஐரோப்பாவில் முக்கியமான சுற்றுலா தலங்களாகும்.



*படம் 10.37 • அட்டோபர் ஃபெஸ்ட்*



*படம் 10.38 • லா டொமேற்றினா*



*படம் 10.39 • காளைப்போர்*



*படம் 10.40 • கிங்க்ஸ் டே கார்னிவல்*



*படம் 10.41 • வெனீஸ் கார்னிவெல்*



*படம் 10.42 • சாய்ந்த கோபுரம்*

## முக்கியமான நகரங்கள்

### பாரிஸ்

ஐரோப்பாவில் ஒவ்வொரு வருடமும் மிக அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் நகரம் பாரிஸ் ஆகும். சைன் (Seine) நதிகரையில் அமைந்துள்ள பாரிஸ் பிரான்சின் தலைநகரமாகும் ஈஃபிள் கோபுரம் (Eiffel Tower), லூவ்ரே அருங்காட்சியகம் (Louvre Museum) போன்றவை சுற்றுலாப் பயணிகளை இந்நகர் நோக்கி ஈர்க்கின்றன.



*படம் 10.43 • சைன் நதியும் ஈஃபிள் கோபுரமும்*

### லண்டன்

தேம்ஸ் (Thames)நதிக்கரையில் அமைந்துள்ள லண்டன், இங்கிலாந்து மற்றும் யுனைட்டெட் கிங்டம்மின் தலைநகரமும், மிகப்பெரிய நகரமும் ஆகும்.

### பெர்லின்

ஜெர்மனியின் தலைநகரமும் மிகப்பெரிய நகரமும் ஆகும் பெர்லின். ஸ்ப்ரீ (Spree) நதிக்கரையில் இந்நகரம் அமைந்துள்ளது.



*படம் 10.44 • லண்டன் நகரம்*

### மாஸ்கோ

ரஷ்யாவின் தலைநகரம் மாஸ்கோ ஆகும். மாஸ்க்வா நதிக்கரையில் அமைந்துள்ள இந்நகரம் ஐரோப்பாவில் மிகப்பெரிய நகரமாகும்.

### ரோம்

இத்தாலியின் தலைநகரான ரோம் டைபர் (Tiber) நதிக் கரையில் அமைந்துள்ளது. ரோமப் பேரரசு மற்றும் கிறிஸ்தவ மதத்தின் நினைவுச் சின்னங்கள் இங்கு ஏராளம் காணப்படுகின்றன. ரோமில் உள்ள கொலோசியம் (Colosseum) பழங்கால உலக அதிசயங்களுள் ஒன்றாகும்.

இவை தவிர மாட்ரிட் (Madrid), ஏதென்ஸ் (Athens), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), வியன்னா (Vienna), பார்சிலோனா (Barcelona), லிஸ்பன் (Lisbon), டப்ளின் (Dublin) ஆகியவை ஐரோப்பாவிலுள்ள முக்கிய நகரங்களாகும்.



*படம் 10.45 • பெர்லின் நகரம்*



*படம் 10.46 • மாஸ்கோ நகரம்*



*படம் 10.47 • ரோம் நகரம்*



*படம் 10.48 • கொலோசியம்*

*ஐரோப்பாவிலுள்ள சில முக்கிய நதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த நதிக்கரைகளில் அமைந்துள்ள நகரங்கள் எவையெனக் கண்டுபிடித்து அட்டவணையை நிரப்பவும்.*

| நதி | நகரம் |
|---|---|
| *தேம்ஸ்* | |
| *டைபர்* | |
| *மாஸ்க்வா* | |
| *சைன்* | |
| *ஸ்ப்ரீ* | |

## ஆயிரம் ஏரிகளின் நாடு

ஆயிரம் ஏரிகளின் நாட்டைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வடக்கு ஐரோப்பாவில் உள்ள பின்லாந்து இவ்வாறு சிறப்புடன் அழைக்கப்படுகிறது. ஆயிரம் ஏரிகளின் நாடு என்று சிறப்பிக்கப்பட்டாலும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட எரிகளும் அதிகமான நதிகள் மற்றும் பரந்த சதுப்பு நிலங்களும் நிறைந்த நாடு பின்லாந்து. பின்லாந்தின் தென்பாகத்தில் பால்டிக்கடலும் பின்லாந்து கடலிடுக்கும் தென் மேற்கில் போக்னியா கடலிடுக்கும் அமைந்துள்ளன. இங்குள்ள இயற்கை அமைப்பு, காலநிலை மற்றும் கலாச்சாரம் எண்ணற்ற சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.




*படம் 10.49 • பின்லாந்து – நிலப்படம்*

*நிலப்படப் புத்தகத்தை (Atlas) உற்றுநோக்கி பின்லாந்தின் அண்டை நாடுகள் எவையெனக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.*

| | |
|---|---|
| *கிழக்கு* | |
| *தெற்கு* | *எஸ்டோனியா* |
| *வடகிழக்கு* | |
| *வடக்கு* | |

## காலநிலையும் மக்கள் வாழ்க்கையும்



*படம் 10.50* ●



*படம் 10.51* ● *ஹெல்சிங்கி நகரம்*

பின்லாந்தில் பொதுவாக ஆர்ட்டிக் மற்றும் துணை ஆர்ட்டிக் காலநிலை அனுபவப்படுகிறது. கடுமையான குளிரும் பனிப்பொழிவும் பின்லாந்தின் வடக்குப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையைக் கடினமாக்குகிறது. இதனால் பின்லாந்தின் கடலோரப் பகுதிகளில் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். ஃபின்ஸ் (Finns) என அழைக்கப்படும் பின்லாந்து மக்களில் ஐந்தில் ஒரு பாகம் மக்கள் தலைநகரமான ஹெல்சிங்கியில் (Helsinki) வாழ்கின்றனர். உலகில் மக்கள் குடியிருப்பு பகுதிகள் அதிகமாக கடலோரப் பகுதிகளில் காணப்படுவதன் காரணங்கள் எவையாக இருக்கும்?

- 
- 

பின்லாந்தின் மூன்றில் இரண்டு பாகமும் வனம் நிறைந்த பகுதியாகும். ஒப்பீட்டளவில் இயற்கை வளங்கள் மிகவும் குறைந்த பின்லாந்தில் தரம் குறைந்த நிலக்கரி (Peats) முக்கியமாகக் காணப்படுகிறது. கடுமையான குளிர் அனுபவப்படுவதால் மின்சக்தியின் பயன்பாடு மிகக் கூடுதலாக உள்ளது. நாட்டின் முக்கிய மின்சக்தி உறைவிடம் நீர் மின்சக்தி ஆகும். ஆனால், குளிர் மின் உற்பத்திக்குத் தடையாக உள்ளது. கடினமான குளிரும் தொடர்ச்சியான பனிப்பொழிவும் கட்டுமான செயல்பாட்டுக்கும் போக்குவரத்துக்கும் பெரும் தடையாக உள்ளதால் கட்டுமானச் செலவு அதிகரிக்கிறது.

## மகிழ்ச்சியின் நாடு

பலவிதமான வரம்புகள் உள்ளபோதிலும் 2024 இல் ஐக்கிய நாட்டு சபையின் உலக மகிழ்ச்சி குறியீட்டில் (World Happiness Index) பின்லாந்து முதலிடத்தில் உள்ளது. தொடர்ந்து ஏழு ஆண்டுகளாகப் பின்லாந்து இந்தச் சாதனையை அடைந்துள்ளது.

## மகிழ்ச்சிக் குறியீடு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

*மகிழ்ச்சிக் குறியீடு ஆறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. அவை தனிநபர் வருமானம், சமூக ஆதரவு, ஆரோக்கியமான ஆயுட்காலம், சுதந்திரம், நன்கொடை வழங்கும் பழக்கம் மற்றும் ஊழலற்றத் தன்மை என்பன.*

ஸ்காண்டிநேவியன் – இயற்கை அமைப்பும் ஆர்ட்டிக் காலநிலையும் அனுபவப்படும் நாடுகளான நார்வே, ஸ்வீடன், டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து போன்றவையும் பின்லாந்தைத் தொடர்ந்து முதல் பத்து இடங்களில் மகிழ்ச்சிக் குறியீட்டில் உள்ளன. மட்டுமல்லாமல், உலக நாடுகளின் வளர்ச்சியைக் கணக்கிடும் ஐக்கிய நாட்டு சபையின் மனித மேம்பாட்டுக் குறியீட்டிலும் (Human Development Index) இந்த நாடுகள் முன்னணியில் உள்ளன.

சிறந்த காலநிலை, இயற்கை அமைப்பு மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்த பல நாடுகளும் மகிழ்ச்சிக் குறியீட்டில் பின்லாந்தை விட பின்தங்கியே உள்ளன. அனுகூலமற்ற காலநிலை மற்றும் இயற்கை அமைப்பையும் எதிர்கொண்டு மேம்பாட்டை நோக்கி உயர்வதற்கு பின்லாந்து மக்களின் உறுதி மற்றும் கடின உழைப்பும் உலகத்திற்கு முன்மாதிரியாக உள்ளது.

## தொடர் செயல்பாடுகள்

- ஐரோப்பாவின் நிலப்பட வரைப்படத்தில் முக்கிய இயற்கை அமைப்பு பிரிவுகளை அடையாளப்படுத்தி வேறுபட்ட நிறங்களைக் கொடுத்து வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- ஐரோப்பாவின் தாவர – உயிரினங்களின் படங்களைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் படத்தொகுப்பு தயார் செய்க.
- 'ஐரோப்பாவின் இயற்கை அமைப்பும் காலநிலையும் அந்த பகுதியிலுள்ள தாவரங்களிலும் உயிரினங்களிலும் செலுத்தும் தாக்கம்' என்ற தலைப்பில் ஒரு செயல்திட்டம் தயார்செய்க.
- ஐரோப்பாவில் முக்கியமான சுற்றுலா மையங்களின் ஒரு கையேடு தயார் செய்யவும்.

அலகு 11

# நிலமானிய முறையும் இடைக்கால உலகமும்






*படம் 11.1 • நிலப்பிரபுத்துவ பண்ணை (Manorial Estate)*

இடைக்காலத்தில் நிலவியிருந்த நிலமானிய முறையுடன் தொடர்புடைய நிலப் பிரபுத்துவ பண்ணை (Manorial Estate) படம் 11.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது. பிரபுக்கள் வாழ்ந்திருந்த பரவலான பகுதியே நிலப்பிரபுத்துவ பண்ணை. இங்கே என்னென்ன வசதிகள் இருந்தன என்பதை நீங்கள் படத்திலிருந்து கண்டுபிடிப்பீர்கள் அல்லவா?

நிலமானிய முறையையும் இடைக்காலத்திலுள்ள அதிகார மையங்களைக் குறித்தும் கூடுதல் காரியங்களை நாம் விவாதிப்போம்.

## நிலமானிய முறை

மேற்கு ரோமானிய பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இடைக்கால ஐரோப்பாவில் தோன்றிய பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பே நிலமானிய முறையாகும். 'ஒரு துண்டு நிலம்' என்று பொருள்படும் ஃபியூடு என்ற ஜெர்மன் வார்த்தையிலிருந்து 'நிலமானியம்' என்ற சொல் தோன்றியது. பிரான்சில் தோன்றிய நிலமானியம் பின்னர் இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் பரவியது. நிலமானிய முறையில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை பின்வருமாறு,

**நிலமானிய முறையிலுள்ள மூன்று பிரிவுகள்**

- மதகுருக்கள்
- பிரபுக்கள்
- விவசாயிகள்



படம் 11.2 ● வேட்டைக்குச் செல்லும் பதினைந்தாம் நூற்றாண்டின் பிரெஞ்சு பிரபுக்கள்

நிலமானிய முறையில் அனைத்து நிலங்களின் உரிமைகளும் அரசருக்கு உரியதாகயிருந்தது. அரசர் தனக்குச் சொந்தமான நிலத்தைப் பிரபுக்களுக்குக் கொடுத்தார். அதற்குப் பதிலாக பிரபுக்கள் அரசருக்கு நம்பிக்கையுடையவராகவும் தேவைப்படும் நேரங்களில் இராணுவ உதவி செய்வதாகவும் உறுதியளித்திருந்தனர். பிரபுக்களுக்கு இராணுவத்தை உருவாக்கவும் நீதிநியாய முறையை நடைமுறைப்படுத்தவும் சொந்தமாக நாணயம் அச்சடிப்பதற்கும் அதிகாரம் இருந்தது. நிலமானிய முறையில் முதலாவதும் இரண்டாவதும் பிரிவுகளை நிலை நிறுத்தியிருந்த மூன்றாவது பிரிவான விவசாயிகளில் இரண்டு பிரிவுகள் இருந்தன. அவை எவையெனப் பார்ப்போம்.

- சுதந்திர விவசாயிகள்
- அடிமைகள்

அவர்களின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதைப் பார்போம்.

- அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை.
- அவர்கள் பிரபுக்களின் வேளாண் இடங்களிலும் வீடுகளிலும் வேலை செய்ய வேண்டியிருந்தது.
- சம்பளம் கிடைக்கவில்லை.
- பிரபுவின் அனுமதி இல்லாமல் நிலத்தை விட்டுச் செல்ல முடியாது.

*நிலமானிய சமூகத்தின் சிறப்பியல்புகளை விவாதித்து சுவரொட்டி தயாரிக்கவும்.*

14 ஆம் நூற்றாண்டில் நிலமானியமுறை வீழ்ச்சியடையத் துவங்கியது. இதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் எவை?

| சூழ்நிலைகள் | |
|---|---|
| | காலநிலை மாற்றம் |
| | உலோக நாணயங்களின் தட்டுப்பாடு |
| | மன்னராட்சி வலுபெற்றது |
| | பிளேக் அல்லது கறுப்பு மரணம் (Black Death) என்ற பெருந்தொற்றின் பரவல் |
| | வெடிமருந்தின் கண்டுபிடிப்பு |
| | சிலுவைப் போர்கள் |

## புனித ரோமப் பேரரசு (Holy Roman Empire)

ரோமை தலைமையிடமாகக் கொண்டிருந்த பேரரசைக் குறித்து நீங்கள் முந்தைய வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? பிற்காலத்தில் ரோமப் பேரரசு மேற்கு ரோமப் பேரரசு, கிழக்கு ரோமப் பேரரசு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு ரோமப் பேரரசை பிற்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள பழங்குடியினரான ஃபிராங்குகள் கீழடக்கினர். இவர்கள் நிறுவிய பேரரசுதான் ஃபிராங்கிஷ் பேரரசு. இந்தப் பேரரசின் புகழ்பெற்ற ஆட்சியாளராக சார்லமேன் (Charlemagne) இருந்தார். மூன்றாம் போப் லியோவை எதிரிகள் ரோம நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்ட போது சார்லமேன் அவர்களைத் தோற்கடித்து மீண்டும் அவரைப் போப்பாண்டவராக்கினார். இதற்கு பிரதிபலனாக சார்லமேன் முதல் புனித ரோமானியப் பேரரசராக போப் கிரீடம் சூட்டினார். எனவே, இந்தப் பேரரசு புனித ரோமப் பேரரசு (Holy Roman Empire) என்ற பெயரில் அறியப்படுகிறது. இந்தக் காலகட்டத்தின் கட்டடக்கலை



படம் 11.3 • கரோலிஜியன்

### கட்டடக் கலையில் கரோலிஜியன் முறை

*பைசான்டியன் முறையும் பண்டைய ரோமன் முறையும் ஒன்றிணைந்த ஒரு முறையாகும் காரோலிஜியன் முறை. வளைந்த கதவுகள், குவிமாடங்கள் மொசைக் தளங்களும் இதன் சிறப்பம்சங்களாகும்.*



படம் 11.4 • போப் சார்லமேனுக்கு கிரீடம் அணிவித்தல்

கரோலிஜியன் முறை என்று அறியப்படுகிறது. சார்லமேன் காலத்தில் உருவான அறிவுசார் முன்னேற்றம் கரோலிஜியன் மறுமலர்ச்சி என்றறியப்படுகிறது.

## கிழக்கு ரோமப் பேரரசு (Eastern Roman Empire)

ரோமைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த மேற்கு ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கிழக்கில் தோன்றிய பேரரசே கிழக்கு ரோமப் பேரரசு. இதன் தலைநகரம் கான்ஸ்டான்டிநோபிள் ஆகும். கான்ஸ்டான்டிநோபிளின் பழைய பெயர் பைசான்டியன் ஆகும். எனவே இந்தப் பேரரசு பைசான்டியன் பேரரசு என்றும் அறியப்படுகிறது. கிழக்கு ரோமப் பேரரசின் புகழ்பெற்ற ஆட்சியாளராக இருந்தவர் ஜஸ்டினியன். உலகிற்கு ஜஸ்டினியன் வழங்கிய மிகப் பெரிய பங்களிப்பு ஜஸ்டினியன் சட்டங்கள் (Code of Justinian). ஆகும். நாட்டில் நிலைநின்றிருந்த சட்டங்களும், சட்டவியலும் சட்டப்பூர்வ ஆணைகளையும் தொகுத்து தெளிவான சட்டத்தை உருவாக்குவதற்காக சட்ட வல்லுநர்களின் ஒரு குழு உருவாக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட சட்டம் கார்பஸ் ஜுரிஸ் சிவில்ஸ் (Corpus Juris Civils). ஆகும். இதற்கு மூன்று பகுதிகள் இருந்தன.




படம் 11.5 • கிழக்கு ரோமப் பேரரசு

கார்பஸ் ஜுரிஸ் சிவில்ஸ்
- டைஜஸ்ட்
- கோட்
- இன்ஸ்டிடியூட்

## மத்திய இஸ்லாமியப் பகுதிகள்

செங்கடலுக்கும் பாரசீக வளைகுடாவிற்கும் இடையில் அரேபியர்கள் வாழ்ந்திருந்த பரந்த நிலப்பரப்பே அரேபிய தீபகற்பம். அரேபியர்கள் பல கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலான கோத்திரங்களும் நாடோடி வாழ்க்கையை நடத்தினர். ஆனால் நகரங்களில் வாழ்ந்திருந்த சில பிரிவினர் வணிகத்திலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் வணிகத்திற்காகப்

பல பகுதிகளுக்குச் சென்றனர். அரேபியர்களின் புனித இடமாக மெக்காவிலுள்ள காபா (Kaba). இருந்தது. புனித யாத்திரைக் காலம் சமாதானத்தின் காலமாகயிருந்தது.

தீர்க்கத்தரிசியான முகம்மது நபி ஒருவருக்கொருவர் கலகத்திலிருந்த அரபு கோத்திரங்களை ஒன்றிணைத்தார். ஆனால், அவருடைய கருத்துக்களை மெக்காவிலுள்ள செல்வந்தர்களான வணிகர்கள் எதிர்த்தனர். எனவே, C. E. 622 இல் முகம்மது நபி தனது சீடர்களுடன் மெக்காவிலிருந்து மதினாவிற்குக் குடிபெயர்ந்தார். இது ஹிஜிரா என்ற பெயரில் அறியப்படுகிறது. மிக விரைவிலேயே அவர் மதீனாவின் ஆட்சியாளராக மாறினார். பின்னர் மெக்காவின் கட்டுப்பாட்டைப் பெற்றதுடன் மதீனா இஸ்லாமிய நாட்டின் ஆட்சி தலைநகரமாக மாறியது. மெக்கா மத மையமாகவும் மாறியது. இவ்வாறு அரேபியாவில் பெரும்பகுதியை ஒருங்கிணைத்து அரபு கலாச்சாரத்தை வளர்க்க முகம்மது நபிக்கு முடிந்தது.




*நிலப்படம் 11.6 ● மத்திய இஸ்லாமிய பகுதிகள்*

## கலிபா ஆட்சி

முகம்மது நபியின் மறைவுக்குப் பிறகு அதிகாரத்திற்கு வந்தவர்கள் கலிபாக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் ஆட்சி கலீபா ஆட்சி (Caliphate) எனப்பட்டது. கலீபா இஸ்லாம் மதத்தலைவராகவும்

அரபு அரசின் தலைவருமாயிருந்தார். முதல் நான்கு கலீபாக்களின் காலத்தில் அரபு பேரரசின் தலைநகரம் மதீனாவாகயிருந்தது. ஆரம்பகால கலீபாக்கள் யார் யார் என்பதைப் பார்ப்போம்.

**ஆரம்பகால கலீபாக்கள்**

- அபுபக்கர்
- உமர்
- உஸ்மான்
- அலி

*முகம்மது நபிக்குப் பிறகு அரேபியாவில் ஆட்சிக்கு வந்த கலீபாக்களின் சுயவிவர ஆல்பம் தயாரிக்கவும்.*

## உமையா அரச வம்சம் (Umayyad Dynasty)



படம் 11.7 • பாறை குவிமாடம் (டோம் ஆஃப் திரோக்)

நான்காவது கலீபாவான அலியின் மரணத்தைத் தொடர்ந்து உருவான பாதுகாப்பற்ற நிலைமையால் சிரியாவின் ஆளுநராக இருந்த மூவாவியா (Muawiya) அதிகாரத்தைப் பிடித்தார். அவர் நிறுவிய அரச வம்சமே உமையா அரச வம்சம். அவர் தலைநகரத்தை சிரியாவிலுள்ள தமாஸ்கஸு க்கு மாற்றினார். உமையா வம்சத்திலே கலீபாவாகயிருந்த அப்து அல் மாலிக் அரபு சொத்திற்கு வலியுறுத்தல் நல்கினார். அவை எவையென ஆராய்வோம்.

- அரபி ஆட்சி மொழியாக்கப்பட்டது
- இஸ்லாமிய நாணயமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ஜெருசலேமில் பாறை குவிமாடம் கட்டப்பட்டது

## அப்பாஸியாக்கள்



படம் 11.8 • ஹாரூண் அல் ரஷீத்

உமையா அரச வம்சத்தை அகற்றிவிட்டு அபுல் அப்பாஸ் (Abul Abbas) தலைமையில் அப்பாஸிய ஆட்சி நிலவில் வந்தது. அவர் தலைநகரத்தை தமாஸ்கஸிலிருந்து பாக்தாத்திற்கு மாற்றினார். இவர்களில் மிகவும் முக்கியமான கவிஞரும் பண்டிதருமாயிருந்தவர் ஹாரூண் அல் ரஷீத் (Harun-al-Rashid) ஆவார்.

*கலீபா ஆட்சிக்குப் பிறகு அரேபியாவில் ஆதிக்கம் செலுத்திய இராஜ வம்சங்களின் சிறப்பம்சங்களை விவாதம் செய்து ஒரு ஆல்பம் தயாரிக்கவும்.*

## உலகிற்கு அரேபியர்களின் நன்கொடைகள்

அரபு மக்கள் தனித்துவமான ஒரு கலாச்சாரத்தை வளர்த்தவர்களாவர். அவர்களுக்குத் திறமையான ஒரு அரசாங்கமும் தபால் முறையும்

வரி பிரித்தல் முறையும் இருந்தது. கல்வித்துறையிலும் பெரும் முன்னேற்றம் அடைய அவர்களால் முடிந்தது. பாக்தாத், தமாஸ்கஸ், கெய்ரோ, கொர்தோவா ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் இதற்குச் சான்றுகளாகும்.

இயற்கணிதம், அரபி எண்கள் போன்றவைகளை உலகிற்கு நன்கொடை செய்தவர்கள் அரேபியர்களாவர். இந்தியாவின் நன்கொடையான பூஜ்ஜியத்தை உலகமுழுவதும் பரப்பியது அரேபியர்களாவர். வேதியியலில் பல வேதியியல் செயல்பாடுகளை கண்டுபடித்தவர்களும் அரேபியர்களாவார். ஒளி அறிவியலை (Optics) கண்டுபிடித்தவர்களும் இவர்களாவர். காசநோய், வைசூரி, வயிற்றுப்புற்று நோய், பிளேக் ஆகியவற்றைப் பற்றிய அறிவு இவர்களுக்கு இருந்தது. ஆயிரத்து ஓர் இரவுகள் *(The Thousand and One Nights)* அரபு இலக்கியத்தில் புகழ்வாய்ந்த நூலாகும். பிற துறைகளில் இவர்களது நன்கொடைகள் எவையென ஆராய்வோம்.

| விஞ்ஞானிகள் / இலக்கியவாதிகள் | துறை | நூல்கள் |
|---|---|---|
| அல்ராஸி | மருத்துவம் | கிதாப் அல்ஹாவி *(Kithab-Al-Hawi)* |
| அவிசென்னா (இப்னு சீனா) | மருத்துவம் | அல் ஹானுன் ஃபித்திப் *(Al-Qanun Fittib)* |
| அல்பிரூனி | புவியியல் | தஹ்கிக் மாலில் ஹிந் *(Tahqiq ma lil-Hind)* |
| உமர்கயாம் | இலக்கியம் | ரூபையாத் *(Rubaiyyat)* |
| ஃபிர்தௌசி | இலக்கியம் | ஷாநாமா *(Shahnama)* |

*அரேபியர்கள் உலகிற்கு அளித்த நன் கொடைகளைப் பட்டியலிடுங்கள்.*

## மங்கோலியப் பேரரசு

மத்திய ஆசியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருந்த நாடோடி கோத்திர வர்க்கமே மங்கோலியர்கள். பகலில் மேய்ச்சல் நிலங்களைத் தேடி குதிரைகளில் பயணம் செய்து இரவில் கூடாரங்களில் வசித்த கோத்திரவர்க்கமே மங்கோலியர்கள். நீண்டகாலமாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்த வெவ்வேறு மங்கோலிய கோத்திரப் பிரிவினரை ஒன்றிணைத்து மங்கோலிய பேரரசிற்கு அடித்தளத்தை அமைத்தவர் செங்கிஸ்கான் ஆவார். அவருடைய உண்மையான பெயர் டெமுஜின் (Temujin) என்பதாகும். மங்கோலிய கோத்திரசபை அவருக்குச் செங்கிஸ்கான் என்ற பெயரை வழங்கியது. மங்கோலியர்களின் தலைநகரம் காரகோரம் ஆகும். நாட்டில் பல்வேறு பகுதிகளை இணைக்க செங்கிஸ்கான் ஒரு அஞ்சல் அமைப்பை ஆரம்பித்தார். இது 'யாம்' என்ற பெயரில் அறியப்பட்டது.



படம் 11.9 ● செங்கிஸ்கான்

இந்த திறமையான அமைப்பிற்கு குதிரைகளை உபயோகித்தனர். அவர் 'யாசா' என்ற பெயரில் சட்டக் குறியீட்டையும் உருவாக்கினார்.

## மாலி பேரரசு




படம் 11.10 ● மாலிபேரரசு

ஆப்பிரிக்காவின் மேற்குப்பகுதியில் பரவியிருந்த பிரபலமான ஒரு பேரரசே மாலி பேரரசு. இந்தப் பேரரசின் மிகவும் சக்தி வாய்ந்த ஆட்சியாளர் மன்சா கங்கன் மூசா ஆவார். இபின் பத்தூத்தாவிலிருந்துதான் ஆப்பிரிக்காவின் மிகவும் பணக்கார நாடான மாலியைக் குறித்த தகவல் கிடைக்கிறது. மன்சா கங்கன் மூசா கல்வி, கைவினைகளை ஊக்குவித்தார். நாட்டின் தெற்குப் பகுதி தங்க சேமிப்புகளுக்கும் வடக்குப் பகுதி உப்பு சேமிப்புகளுக்கும் பெயர் பெற்றதாயிருந்தது. காவோ (Gao), ஜென்னே (Jenne), திம்புக்டு (Timbuktu) ஆகியவை பேரரசின் பிரபலமான நகரங்களாயிருந்தன. திம்புக்டு வியாபார மையம் மட்டுமல்லாமல் கல்வி மையமாகவும் செயல்பட்டது. இங்குள்ள பெரிய மசூதி இஸ்லாமிய கற்றல் மையமாக இருந்தது. உலகில் பல்வேறு பகுதியிலிருந்தும் பல அறிஞர்கள் திம்புக்டுவிற்கு வந்தனர்.

*மங்கோலிய பேரரசு, மாலி பேரரசு ஆகியவற்றின் சிறப்பியல்புகளை விவாதித்து குறிப்பு தயாரிக்கவும்.*

## அமெரிக்காவின் அரசியல் அமைப்புகள்



*“மண்ணின் ஆழத்தைப்பார் நீ உழவனே,*
*நெசவாளனே, பழக்கப்படாத மேய்ப்பனே...*
*எனக்கு காட்டு, உன் இரத்தத்தையும் உன் உழவு சால்களையும்.*
*என்னிடம் சொல்; இரத்தினம் பிரகாசிக்காததால் அல்லது நிலம் கல்லையோ,தானியத்தையோ சரியான நேரத்தில் தராததால் நான் தண்டிக்கப்பட்டேன்.”*

*பாப்லோ நெருடா, 'த ஹைட்ஸ் ஆப் மாச்சுபிச்சு'*

படம் 11.11 ●

படத்தில் 11.11 இல் தரப்பட்டுள்ள கட்டமைப்புக் குறித்து பாப்லோ நெருடா எழுதிய பாடலின் பொருளாகும் இந்தப் புராதன கட்டமைப்பு என்ன? இது எந்த கண்டத்தில் அமைந்துள்ளது? நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு அமெரிக்காவில் இருந்தது என்பதை இந்தக் கட்டமைப்பு நமக்கு நினைவூட்டுகிறது. ஆனால் இந்த அரசியல் அமைப்பைக் குறித்து வெளி உலகிற்குத் தெரிந்திருக்கவில்லை.

15 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் அமெரிக்காவை நோக்கியுள்ள ஆய்வின் மூலம்தான் இவற்றைக் குறித்துள்ள அறிவு வெளி உலகிற்குக் கிடைத்தது. அஸ்டெக்குகள், மாயன்கள், இன்காக்கள் (நிலப்படம் 11.12) ஆகியவை அமெரிக்காவில் நிலை நின்றிருந்த கலாச்சாரங்களாகும். அவற்றைக் குறித்து விரிவாக ஆராய்வோம்.




படம் 11.12 ● மத்திய, தென் அமெரிக்காவின் அரசியல் அமைப்புகள்

## அஸ்டெக்குகள் (The Aztecs)

12 ஆம் நூற்றாண்டில் அஸ்டெக்குகள் மெக்சிக்கோ பள்ளத்தாக்குகளில் குடியேறினார். அஸ்டெக் சமூகம் படிநிலை முறையாக இருந்தது. அவர்களின் தலைநகரம் டெனோச்டிட்லான் (Tenochtitlan) இவர்கள் மெக்சிக்கோ ஏரியில் சினம்பாஸ் (Chinampas) எனப்படும் செயற்கைத் தீவுகளைக் கட்டினர். இது இவர்களின் கட்டுமான திறமைக்கு எடுத்துக்காட்டாகும். வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்த இவர்கள் சோளம், பீன்ஸ், வெண்பூசணி, பூசணிக்காய், மரச்சீனி, உருளைக்கிழங்கு போன்றவற்றை வேளாண்மை செய்திருந்தனர். இதுமட்டும்மல்லாமல் வணிகம், கைத்தொழில் ஆகியவற்றிலும் கைத்தேர்ந்திருந்தனர். தங்கம், செம்பு, வெள்ளீயம் போன்ற உலோகங்களால் ஆன நாணயங்களை இவர்கள் பயன்படுத்தினர். கல்விக்கு முக்கியத்துவம் அளித்தனர். பிரபுக்களின் குழந்தைகளுக்காக கால்மேகாக்கும் (Calmecac) பிற பிரிவு குழந்தைகளுக்காக டெபோச்கல்லி (Tepochcalli) என்ற கல்வி நிறுவனங்களைக் கட்டினர்.

## மாயன்கள்

11 ஆம் நூற்றாண்டிற்கும் 14 ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் மெக்சிக்கோவில் செழித்து வளர்ந்த நாகரீகமே மாயன் நாகரீகம். காடுகளை வெட்டி திருத்தி சோளம் பயிரிட்டனர். கருங்கல்லால் அரண்மனைகளும் தேவாலயங்களும் கட்டினர். தங்கம், வெள்ளி ஆகியவற்றால் ஆபரணங்களும் அழகான மண் பாத்திரங்களையும் உருவாக்கினர். சித்திர வடிவிலான எழுத்துகளை இவர்கள் உபயோகித்திருந்தனர். மரப்பட்டை, ஒருதரம் செடியிலிருந்து தயாரித்த காகிதம் ஆகியவை எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டது. கணிதவியலிலும் வானவியலிலும் முன்னேறியிருந்த இவர்களுக்கு ஒரு பஞ்சாங்கம் இருந்தது.

### சினம்பாஸ்



படம் 11.13 ● சினம்பாஸ்

*மெக்சிக்கோ ஏரிகளுக்குள்ளே கட்டப்பட்ட செயற்கை தீவுகளே சினம்பாஸ். நாணல், சேறு ஆகியவை கொண்டு கட்டப்பட்டு அவற்றின் மீது தாவரங்கள் வளர்க்கப்பட்டு தீவுகள் உருவாக்கப்பட்டன. அரண்மனைகளும் பிரமிடுகளும் இந்தத் தீவுகளுக்கிடையே கட்டப்பட்டிருந்தன.*



படம் 11.14 • மாயன் தொழுகை ஆலயம்



படம் 11.15 • க்யூப் (கயிறுகளில் கட்டுகள் கட்டப்பட்டு கணித அலகுகள் குறிக்கும் ரகசிய மொழி)

## இன்காக்கள்

தென் அமெரிக்காவில் இருந்த மிகவும் பெரிய பூர்வீக கலாச்சாரமே பெருவின் இன்கா கலாச்சாரம். மையப்படுத்தப்பட்ட பேரரசே அங்கு இருந்தது. மன்னர் பரமாதிகாரியாக இருந்தார். குஸ்கோ (Cuzco) தலைநகரமாகயிருந்தது. கருங்கல் கொண்டு கட்டப்பட்ட தேவாலயங்களும் அரண்மனைகளும் அழகான வீடுகளும் இந்த நகரத்தில் இருந்தன. தலைநகரத்தின் சாலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுடன் இணைக்கப்பட்டிருந்தது. மத்தியப் பெருவில் 3500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள மாச்சுபிச்சு இவர்களின் கட்டுமானப் பணிக்குச் சான்றாகும். தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் நகைகளைச் செய்தனர். கம்பளி ஆடைகளை நெசவு செய்ய லாமா (Lama), அல்பாகா (Alpaca) போன்ற விலங்குகளின் தோல்களைப் பயன்படுத்தினர். வேளாண்மை செய்பவர்களுக்குத் தேவையான நிலத்தை அரசாங்கம் வழங்கியது. சோளமும் உருளைக் கிழங்கும் முக்கிய பயிர்கள். (Quipu) க்யூப் என்ற கணக்குப் பதிவிடும் முறை நிலவில் இருந்தது. ஸ்பெயின்காரர்களின் அமெரிக்க காலனித்துவம் இந்தக் கலாச்சாரத்தை அழித்தது.

*அமெரிக்காவில் நிலைபெற்றிருந்த பல்வேறு கலாச்சாரங்களின் பொதுப்பண்புகளை விவாதம் செய்து கருத்தரங்கு நடத்தவும்.*

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட சமூக, கலாச்சார, பொருளாதார மாற்றங்களை இந்தப் பாடத்திலிருந்து அறிந்து கொண்டீர்கள் அல்லவா? மேலே கொடுக்கப்பட்ட பகுதிகளில் நவீனத்துவத்தை நோக்கியுள்ள படிக்கட்டுகளாக இந்த மாற்றங்கள் இருந்தன.

## தொடர் செயல்பாடுகள்

- 'நிலமானிய முறை ஐரோப்பிய சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயாரிக்கவும்.
- அரபு பேரரசின் தோற்றமும் அரபு மக்களின் ஒருங்கிணைப்பும் உள்ளடக்கிய மன வரைபடத்தைத் (Mind Map) தயாரிக்கவும்.
- நீங்கள் அமெரிக்க அரசியல் அமைப்புகளைப் பற்றி ஆய்வு செய்த குழுவின் ஒரு அங்கமாக இருந்திருந்தால் நீங்கள் கண்டுபிடித்த காரியங்களை விவரித்து உங்கள் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதவும்.
- பல்வேறு பேரரசுகளின் உருவாக்கத்திற்கு காரணமான ஆட்சியாளர்களின் ஒரு டிஜிட்டல் பதிப்பு தயாரிக்கவும்.

அலகு 12



# வேளாண்துறையும் புதுமையான தொழில் நுட்பங்களும்




படம் 12.1

*மாணவனாக இருக்கும்போதே நான் ஒரு விவசாயி என்பதில் பெருமை கொள்கிறேன். பள்ளிக்கூடத்தில் வேளாண் துறை நடத்திய வகுப்பு தான் என்னை விவசாயம் செய்யத் தூண்டியது. எனது விவசாய நிலத்தில் பழங்களும் காய்கறிகளும் உள்ளன. பள்ளியிலிருந்து வந்து தேநீர் அருந்திய பிறகு நான் விவசாய நிலத்திற்குச் செல்வேன். அங்கே நானும் எனது தங்கையும் விவசாய நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவோம். நான் முற்றிலும் இயற்கை விவசாயம் செய்கிறேன். தேவையான அனைத்து மண்புழு உரத்தையும் நானே தயார் செய்கிறேன். என் மாணவ வாழ்க்கையில் எனக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக செலவிட முடிகிறது. விவசாயம் எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் மற்றும் வருமானத்தையும் தருகிறது. விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் அதன் தேவையையும் புரிந்து கொள்கிறேன்.*

மேலே தரப்பட்டுள்ளது விவசாயிகள் தினத்தன்று ஆவணி (சிங்ஙம்) 1 இல் வேளாண் துறையின் "குழந்தை விவசாயி" என்ற விருதைப் பள்ளியில் நவீன் பெற்றுக் கொண்ட போது அவர் ஆற்றிய உரையாகும்.நவீனைப் போலவே நீங்களும் விவசாயம் செய்கிறீர்களா? விவசாயத்தின் முக்கியத்துவம் எவையென எழுதலாம் அல்லவா?

- உணவிற்காக
- 
- 
- 



படம் 12.2 ●

பொருளாதார அமைப்பில் மிகவும் பழமையான மற்றும் முக்கியமான துறைகளில் ஒன்று வேளாண்துறை ஆகும். இதுவே இந்தியாவின் மிகப்பெரிய அமைப்புசாரா துறையாகும். மக்களுக்குத் தேவையான உணவும் கால்நடைகளுக்குத் தேவையான தீவனமும் வழங்குவது விவசாயமாகும். நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் வேலைவாய்ப்பு வழங்குவதிலும் வேளாண் துறைக்கு முக்கிய பங்கு உள்ளது. தொழில்துறைக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதுடன் தொழில்களின் வளர்ச்சிக்கும் துணை நிற்கிறது. நமது அன்றாட வாழ்க்கையில் வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கு அதிகமான முக்கியத்துவம் உண்டு.

*நீங்கள் தினமும் பயன்படுத்தும் வேளாண் விளை பொருட்கள் உங்களது வீட்டிலோ, பகுதிகளிலோ பயிர் செய்யப்படுபவை மற்றும் செய்யப்படாதவை என வேறுபடுத்தி அட்டவணையை நிரப்பவும்.*

| *வீட்டிலோ, உள்ளூர் பகுதியிலோ பயிர் செய்யப்படுபவை* | *உள்ளூர் பகுதிகளில் பயிர் செய்யப்படாதவை* |
|---|---|
| ● | ● |

நாம் பயன்படுத்தும் அனைத்து வேளாண் விளை பொருட்களும் நமது நாட்டில் பயிர் செய்யப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரே விதமான பயிர்கள் மற்றும் பயிர் முறைகள் பயன்படுத்துவதில்லை. இதற்கு என்ன காரணம்? இடம் மற்றும் காலநிலை வேறுபாட்டுக்கு ஏற்ப வெவ்வேறு பயிர்கள் மற்றும் பயிர் முறைகள் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் இதற்குக் காரணம்.







படங்கள் 12.3 ● வேறுபட்ட விளை பொருட்கள்

## பயிர் முறைகளில் தாக்கம் செலுத்தும் காரணிகள்

| பயிர் முறைகளில் தாக்கம் செலுத்தும் காரணிகள் | துணைக் காரணிகள் |
|---|---|
| • இயற்கைக் காரணிகள் | • மண்ணின் தன்மை • நில அமைப்பு<br>• காலநிலை • நீர்ப் பாசன வசதி |
| • பொருளாதாரக் காரணிகள் | • விவசாய விளைபொருட்களின் விலை<br>• விவசாயிகளின் வருமானம்<br>• விவசாயிகளின் கைவசம் உள்ள விவசாய நிலத்தின் அளவு |
| • அடிப்படை வசதிகள் | • நீர்ப்பாசனம் • மின்சாரம்<br>• போக்குவரத்து<br>• சந்தை வசதி<br>• விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்கும் வாய்ப்பு |
| • சமூகக் காரணிகள் | • உணவு முறை • கல்வி<br>• பயிர் செய்யும் தலைமுறையினருக்கு இடையே உள்ள வேறுபாடு<br>• சமூகச் சூழல் |
| • அரசின் கொள்கைகள் | • விளை பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி<br>• வரி<br>• கடன் வசதி<br>• மானியம் |
| • தொழில்நுட்பக் காரணிகள் | • அதிக மகசூல் தரும் விதை வகைகள்<br>• அறிவியல் முறையிலான நீர்ப்பாசனம்<br>• நவீன தொழில்நுட்ப அறிவின் பயன்பாடு |

பயிர்முறைகளைப் பாதிக்கும் காரணிகள் எல்லா பகுதிகளிலும் ஒன்று போலக் காணப்படுவதில்லை. எனவேதான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சாகுபடிக்கு வெவ்வேறு பயிர் முறைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.



*படம் 12.4 • கோதுமை விவசாயம்*

*தரப்பட்டுள்ளவற்றில் இருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து வரைபடத்தை நிரப்பவும்.*

*அறிவியல் நீர்ப்பாசனம், வரி, இயற்கைக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள் அடிப்படை வசதிகள், கல்வி .*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சமூகக் காரணிகள் | -------------- | தொழில் நுட்பக் காரணிகள் | -------------- | அரசின் கொள்கைகள் | -------------- |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| -------------- | காலநிலை | -------------- | விவசாயியின் வருமானம் | -------------- | போக்கு வரத்து |

## பயிரிடும் முறைகள் (Cropping Systems)

ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு விவசாய நிலத்தில் பயிர் செய்யப்படும் முறையைப் பயிரிடும் முறை என அழைக்கிறோம். பயிரிடும் முறைகளைக் கீழே தரப்பட்டுள்ள விதத்தில் பிரிக்கலாம்.

பயிரிடும் முறை

- ஒற்றைப் பயிர் சாகுபடி
- பல பயிர் சாகுபடி
- கட்டைப் பயிர் சாகுபடி



*படம் 12.5 ● ரப்பர் சாகுபடி*

## ஒற்றைப் பயிர் சாகுபடி (Monocropping)

ஒரு பயிர் நிலத்தில் ஒரு நேரத்தில் ஒரு பயிர் சாகுபடி செய்யும் முறை ஒற்றைப் பயிர் சாகுபடி எனப்படும். முக்கியமாக ஏற்றுமதிக்காகவே ஒற்றைப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஒற்றைப் பயிர் என்பதால் நடுதல், பராமரித்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்றவை எளிதாக நடைபெறும். பயிர் செய்யும் இடத்திலேயே லாபத்தை அதிகரிக்க முடியும் என்பது இப்பயிர் முறையின் சிறப்பு அம்சமாகும். ஒற்றைப்பயிர் முறை நோய் தாக்குதல் அதிகரிக்க காரணமாகிறது. எடுத்துக்காட்டாக ரப்பர், தேயிலை, மரவள்ளிக்கிழங்கு

*ஒற்றைப் பயிர் சாகுபடிக்கு அதிகமான எடுத்துக்காட்டுகளை உங்கள் பகுதியில் இருந்து கண்டுபிடித்துப் பட்டியலிடவும்.*

## பலபயிர் சாகுபடி (Multiple Cropping or Poly Cropping)

மண்ணின் வளத்தைப் பாதிக்காத முறையில் ஒரு பயிர் இடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களைப் பயிர் செய்யும் முறை பல பயிர் சாகுபடியாகும். பயிர் நிலத்தில் இருந்து மொத்த உற்பத்தியையும் அதன் வழியாக வருமானம் அதிகரிக்கச் செய்யும் என்பதே இதன் சிறப்புத்தன்மை.




### கலப்புப் பயிர் (Mixed Cropping)

பயிர் செய்யும் நிலத்தில் ஒரே நேரத்தில் இரண்டோ அதைவிட கூடுதலாகவோ பயிர்கள் பயிர் செய்யும்போது அவற்றிற்கு இடையே உள்ள தூரத்தைப் பொருள்படுத்தாமல் பயிர் செய்யும் முறையே கலப்பு பயிர் முறை. இப்பயிர் முறை பெரும்பாலும் வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது. பாதகமான காலநிலை காரணமாக ஒரு பயிரின் விளைச்சல் குறைவாக இருந்தாலும் பிற பயிர்களில் இருந்து விளைச்சல் பலன் கிடைக்கும் என்பதே இதன் சிறப்பு.

எடுத்துக்காட்டாக: சோளம் – நிலக்கடலை, தென்னை – துவரை



*படம் 12.6 • கலப்பு பயிர்*
*சோளம் – நிலக்கடலை*

### ஊடுபயிர் சாகுபடி (Inter Cropping)

சீரான வரிசைகளில் நடப்படும் முக்கியப் பயிர்களின் இரண்டு வரிசைகளுக்கு இடையில் வேறொரு வகை பயிரைப் பயிர் செய்யும் முறை ஊடுபயிர் சாகுபடி. இயற்கை வளங்களை முறையாகப் பயன்படுத்துவதன் வழியாக உற்பத்தியை அதிகரிக்க முடியும். களைகளையும், நோய் தாக்குதலையும் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற நல்ல முறை இதுவாகும்.

எடுத்துக்காட்டாக : ஆரம்ப கட்டத்தில் மெதுவாக வளரும் பருத்தியின் ஊடுபயிராக வேர்க்கடலை, தென்னைக்கு ஊடுபயிராக வாழை பயிர் செய்வது



*படம் 12.7 • ஊடு பயிர்*
*தென்னை – வாழை*

### வரிசைப்பயிர் (Sequence Cropping)

அறுவடைக்குப் பிறகு பயிர் செய்யும் இடத்தில் எஞ்சியிருக்கும் ஈரப்பதம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி கூடுதல் தயாரிப்பு இல்லாமல் அதே பயிர் நிலத்தில் இன்னொரு குறுகிய காலப் பயிரைப் பயிர் செய்வது வரிசைப் பயிர் முறையாகும். பயிர் நிலங்கள் தரிசாக விடப்படுவதில்லை என்பது இதன் சிறப்பு.

எடுத்துக்காட்டு: நெல் வயல்களில் முக்கிய பயிரான நெல் அறுவடைக்குப் பிறகு பயறு வகைகள் அல்லது எள் பயிர் செய்யப்படுகிறது.



*படம் 12.8 • நெற்பயிர்*

### *தொடர்பயிர்* (Relay Cropping)

ஒரு பயிர் நிலத்தில் முதல் பயிரின் அறுவடைக்கு முன்பே இரண்டாவது பயிர் சாகுபடியைத் தொடங்கும் முறை தொடர் பயிர் முறையாகும்.



*படம் 12.9 • எள்*

எடுத்துக்காட்டாக : வாழை அறுவடைக்கு முன்பு காய்கறிகள் பயிர் செய்யப்படுகின்றன.

### பயிர் சுழற்சி (Crop Rotation)


படம் 12.10 ● பயறு விவசாயம்

ஒரே பயிர் நிலத்தில் ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் வெவ்வேறு தாவர குடும்பங்களிலிருந்து பயிர்களைப் பயிர் செய்வதுதான் பயிர் சுழற்சிமுறை எனப்படும். மண்ணின் வளத்தை அதிகரிக்கச் செய்கிறது என்பதே பயிர் சுழற்சி முறையின் சிறப்பாகும். இது மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யவும் களைகள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் சிறந்த முறையாகும்.

எடுத்துக்காட்டாக நெற்பயிர் அறுவடைக்குப் பிறகு பயறு பயிர் செய்தல்.


படம் 12.11 ● பல அடுக்கு பயிர் முறை
தென்னை – நல்ல மிளகு – வாழை

### பல அடுக்குப் பயிர் முறை (Multi-storied Cropping/Multi-tier Cropping)

பல அடுக்குப் பயிர் முறை என்பது வேறுபட்ட உயரங்களில் வளரக்கூடியதும் வேறுபட்ட ஆழத்தில் வேரூன்றுவதும் தேவையான சூரிய ஒளியின் அளவு வேறுபட்டு இருக்கும் பயிர்களை ஒரே நேரத்தில் ஒரே பயிர் நிலத்தில் பயிர் செய்யும் முறையாகும்.மண், தண்ணீர், சூரிய ஒளி போன்றவை அதிகமாகப் பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியும் என்பது தான் இதன் சிறப்பு.


படம் 12.12 ● தென்னை –மஞ்சள்

எடுத்துக்காட்டாக தென்னை, நல்ல மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்றவை ஒரே நேரத்தில் ஒரே நிலத்தில் பயிர் செய்தல்.

### கட்டைப் பயிர்முறை (Ratoon Cropping)

அறுவடையின் போது பயிரின் வேர் அல்லது அடிப்பாகம் வெட்டி எடுக்கப்படாமல் விடப்படுகிறது. அறுவடைக்குப் பிறகு பயிர் செய்யப்பட்ட அதே பயிர் மீண்டும் தளிர்விட்டு வளர்ந்து மகசூல் தருகிறது. ஒருமுறை பயிர் செய்த பயிரிலிருந்து மீண்டும் மகசூல் கிடைக்கிறது என்பது இதன் தனிச்சிறப்பு. இம்முறையில் மகசூல் குறைவு, நோய் மற்றும் பூச்சித் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பது இம்முறையின் குறைபாடாகும். எடுத்துக்காட்டாக: கீரை வகைகள், கரும்பு


படம் 12.13 ● கரும்பு பயிர்

*பல்வேறுபட்ட பயிர் முறைகளையும் அவற்றின் சிறப்பு பற்றியும் நாம் அறிந்து கொண்டோம். அதன் அடிப்படையில் உங்கள் பகுதியில் எந்தப் பயிர்முறை பொருத்தமானது என்பதைக் கண்டுபிடிக்கவும். அந்தப் பயிர் முறையை நீங்கள் ஏன் தேர்வு செய்தீர்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

## வேளாண் துறையில் புதுமையான முறைகள்

### விவசாயிக்கு ட்ரோண் கிடைத்தது: இனி நாம் பறந்து விதைக்கலாம்


படம் 12.14 ● ட்ரோண்

பாலக்காடு: இனி பறந்து விதைக்கலாம். மாநிலத்தில் ட்ரோண் தொழில்நுட்ப அறிவின் பயனாக விதை விதைத்தல் வெற்றிகரமாக நடை பெற்றது. பொதுவாக விதை விதைக்க தேவைப்படும் நேரத்தை விட மிகவும் குறைந்த நேரம் போதும் என்பதுதான் இதன் முக்கிய சிறப்பு. பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் உரப் பயன்பாடு போன்றவற்றை ட்ரோண் மூலம் திறம்பட நடத்தலாம்.

மேலே தரப்பட்டுள்ள செய்தியை நீங்கள் வாசித்தீர்கள் அல்லவா? அதிகரித்து வரும் உலக மக்கள் தொகை, காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றுக்கு ஏற்ப வேளாண் செயல்பாடுகள் வேகமாக நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கின்றன. கடந்த சில பத்தாண்டுகளாக இந்தியாவில் வேளாண் துறை தீவிரமான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. பாரம்பரிய வேளாண் பயிர் முறையில் இருந்து புதிய தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி செய்யப்படும் பயிர் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறிப்பிடத்தக்கவையாகும். தொழில்நுட்ப அறிவு வேளாண்துறையில் காணப்படும் சவால்களை எதிர்கொண்டு உற்பத்தியைப் பெருக்க நவீன முறைகள் பின்பற்றப்படுகின்றன. வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிக்கு உதவுவதுதான் வேளாண் துறையில் தொழில்நுட்ப அறிவின் முக்கிய நோக்கமாகும்.

*உங்கள் பகுதியில் வேளாண்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பட்டியலிடவும்.*

### மழை மறைவு விவசாயம் (Rain Shelter Farming)

மழை மறைவு என்பது பாலித்தீன் தாளைப் பயன்படுத்தி மூடிய மேற்கூரையாகும். ஒளி ஊடுருவும் பாலித்தீன் தாள்களை மேற்கூரைக்கு பயன்படுத்துவதால் பயிருக்குத் தேவையான சூரிய ஒளி கிடைப்பதுடன் கனமழையிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கிறது. பாதகமான கால நிலையிலும் வருடம் முழுவதும் அதிக உற்பத்தி கிடைக்க மழை மறைவு விவசாயம் உகந்ததாகும். ஒவ்வொரு வீட்டிலும் மழை மறைவு வசதி இருக்கும் என்றால் வீட்டுக்குத் தேவையான காய்கறிகள் எந்தக் காலநிலையிலும் பயிர் செய்ய முடியும்.


படம் 12.15 ● மழை மறைவு



படம் 12.16 ● பாலிஹவுஸ்

## பாலிஹவுஸ் விவசாயம் (Polyhouse Farming)

வெப்பம், மழை, குளிர் மற்றும் வெயில் போன்றவற்றிலிருந்து பயிரைப் பாதுகாத்து வளர்ச்சிக்கு ஏற்ற சுற்றுச்சூழலைச் செயற்கையாக உருவாக்கும் முறை பாலிஹவுஸ் விவசாயம் அல்லது பசுமைக்குடில் விவசாயம் எனப்படுகிறது. பாலிதீன் தாள்களைப் பயன்படுத்தி முழுவதுமாக மறைத்து பாலிஹவுஸ்களில் பயிர் செய்யும் முறையாகும் இது.

*பாலிஹவுஸ் விவசாயம், மழை மறைவு விவசாயம் இவற்றை ஒப்பீடு செய்து குறிப்பு தயாராக்குங்கள்*

**நீர்வழி உரமிடுதல்**
***Fertigation***

*தண்ணீரில் கரையக்கூடிய உரங்களை நீர்ப் பாசனத்தின் வழியாகப் பயன்படுத்தும் முறை.*

## துல்லிய விவசாயம் (Precision Farming)

ஒவ்வொரு பயிருக்கும் தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களும் பயிர் பாதுகாப்பிற்கான பொருட்களும் சரியான சமயத்தில், சரியான அளவில் மட்டுமே அளித்து மகசூலை அதிகமாக்கும் தொழில்நுட்ப முறை துல்லிய விவசாய முறையாகும். மழை மறைவுகளிலும், திறந்த வெளிப்பகுதிகளிலும் இம்முறையைச் செயல்படுத்தலாம். நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களின் ஒழுங்கான பயன்பாடு இயந்திரங்களில் செயல் திறன் பயன்பாடு மற்றும் பயிர் நிலத்தின் சிறந்த மேலாண்மை போன்றவை விவசாய முறையின் சிறப்புகளாகும். நுண்ணிய நீர்ப்பாசனம் (செடிகளின் வளர்ச்சிக்குத் தேவையான நீர் சொட்டு நீர் அல்லது சிறிய ஓடைகள் வழியாக அளிக்கும் முறை) உரமிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை என்பதை துல்லிய விவசாயத்தின் முக்கிய கூறுகளாகும்.



படம் 12.17 ● விவசாய ரோபோ

## டிஜிட்டல் விவசாயம் (Digital Farming)

இது பல்வேறு தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய விவசாய முறையாகும். பெரிய தரவு, பகுப்பாய்வுக் கருவிகள், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், கைபேசி போன்ற டிஜிட்டல் தொடர்பு தொழில்நுட்பங்கள் , டிஜிட்டல் மேடைகள், ரோபோட்டிக்ஸ், விவசாய ஆலோசனை செயலிகள் போன்ற தொழில்நுட்ப அறிவுகள் டிஜிட்டல் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன.



படம் 12.18 ● செங்குத்து விவசாயம்

## செங்குத்து விவசாயம் (Vertical Farming)

நகரமயமாக்கல், பயிர் நிலங்களின் பற்றாக்குறை காரணமாக நகரங்களில் உணவு உற்பத்திக்குப் பயனுள்ள முறையாக செங்குத்து விவசாயம் பயன்படுத்தப்படுகிறது. கட்டடங்களில் அல்லது செங்குத்தாக அடுக்கப்பட்ட அடுக்குகளில் பயிர்கள் வளர்த்துதல் இம்முறையாகும். ஹைட்ரோஃபோணிக், எயரோஃபோணிக் மற்றும் அக்குவாஃபோணிக் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த அளவு நீர் பயன்பாட்டுடன் வருடம் முழுவதும் உணவு உற்பத்தி செய்யலாம்.

## இயற்கை விவசாயம் (Organic Farming)

இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள், கலப்பு உரங்கள், பசுந்தாள் உரங்கள், ஊடு பயிர் முறை, இயந்திரங்கள் போன்றவற்றைச் சார்ந்து இருக்கும் முறையே இயற்கை விவசாய முறையாகும். ரசாயன உரங்கள், செயற்கை வேதியியல் பூச்சிக்கொல்லி மருந்துகள் முற்றிலும் இம்முறையில் தவிர்க்கப்படுகின்றன. தாவர வளர்ச்சி ஊக்கிகள், மரபணு மாற்றப்பட்ட விதைகள் போன்றவை இம்முறையில் பயன்படுத்தப்படுவதில்லை.

### காலநிலை – ஸ்மார்ட் விவசாயம் (CSA)

*காலநிலை மாற்றத்தை சமாளிக்க விவசாயிகளுக்கு உதவும் ஒரு விவசாய முறை தான் காலநிலை ஸ்மார்ட் விவசாயம் (CSA). உற்பத்தித் திறனும் வருமானமும் அதிகரித்தல், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப செயல்படுதல் மற்றும் பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல் (Green House GAS Emission) போன்றவை முக்கிய நோக்கங்கள் ஆகும்.*

*வேளாண் துறையில் 'நவீன நுட்பங்கள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும்.*

## வேளாண் துறை எதிர்கொள்ளும் சவால்கள்




மேலே தரப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளைக் கவனித்தீர்கள் அல்லவா? வேளாண் துறையில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதை இதிலிருந்து கண்டுபிடியுங்கள்

ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தும் பெரும்பாலான சிறு விவசாயிகள் ரசாயன உரங்களின் அதிக விலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். விவசாய உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பைக் கண்டுபிடிக்க இயலாமை, மூலதன பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கும் உற்பத்திச் செலவுகள் போன்றவை விவசாயிகளைக் கடுமையாகப் பாதிக்கின்றன. மண் வளம் குறைந்து வருவதும், விதைகள் மற்றும் நீர்ப் பாசனத்தின் அதிகச் செலவு விவசாயிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குகிறது. இவை போன்ற பிரச்சனைகள் தவிர வேளாண்துறை எதிர்கொள்ளும் வேறு பிரச்சனைகளையும் ஆராய்வோம்.

- பயிர் சுழற்சியைப் புறக்கணித்தல்
- அறுவடை பலன் குறைவு/பயிர் சேதம்
- வேளாண் கடன்
- அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை
- வேளாண் ஆராய்ச்சி போதுமானதாக இல்லை
- கடன் பெறுதல், திரும்ப செலுத்துதல்
- வேளாண் பொருட்களின் குறைந்த விலை
- இயந்திரமயமாக்கிலின்மை
- காலநிலை மாற்றம்

*"வேளாண்துறை எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற தலைப்பில் ஒரு செயல்திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான விவரங்களை விவசாயிகளிடமிருந்து சேகரிக்க வினாநிரல் தயார் செய்யவும்.*

புதிய வேளாண் நுட்பங்கள், வேளாண் துறை எதிர்கொள்ளும் சவால்கள் என்பவற்றை நாம் தெரிந்துகொண்டோம் அல்லவா? இத்தகைய சவால்களை எதிர்கொள்ள ஒன்றிய – மாநில அரசுகள் எண்ணற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. 'நாமும் விவசாயத்தை நோக்கி' என்ற திட்டத்தின் அங்கமாக வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் விவசாயம் செய்யவும் அதை ஒரு கலாச்சாரமாக வளர்ப்பதற்காகவும் கேரள அரசின் உறுதிமொழியை நாம் சொல்வோம்.




*வேளாண்மை எனபது ஒரு கலாச்சாரம் ஆகும். அதைவிட வேளாண்மை நமது வாழ்க்கை என்ற புரிதல் எங்களுக்கு உண்டு. முதலில் மனதளவிலும் பின்னர் மண்ணிலும் விவசாயத்தைக் கொண்டு சென்று அதை ஒரு கேரள அழகியலாக மாற்றும் நாங்கள் விவசாயம் என்ற துறைக்கு உயிரூட்டி நல்ல விதைகளை நல்ல மண்ணில் விதைத்து உயிர்நீர் பாய்ச்சி பிற செயல்பாடுகளைச் செய்து நல்ல அறுவடை செய்ய எப்போதும் உங்களுடன் நாங்கள் இருப்போம் என்று உறுதிமொழி அளிக்கிறோம். நாங்களும் விவசாயத்தை நோக்கி என்ற திட்டத்தை ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு ஊரிலும் செயல்படுத்த முழுமனதுடன் தயாராகிறோம் என்று உறுதிமொழி தருகிறோம்... உறுதி... உறுதி... உறுதி.....*

## வேளாண்மை அடிப்படையிலான சிறு மற்றும் குடிசைத்தொழில்கள்



*படங்கள் 12.19 ● சிறு மற்றும் குடிசைத்தொழில்கள்*

படங்களை உற்றுநோக்கி சிறு தொழில்களையும் அவற்றின் மூலப் பொருட்களையும் அடையாளம் காணவும் .

இந்த தொழில் உற்பத்தி மூலப் பொருட்கள் விவசாய விளைபொருட்கள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? வேளாண்துறை எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு ஓரளவுக்குத் தீர்வு கொடுப்பது வேளாண்மை அடிப்படையிலான சிறு மற்றும் குடிசைத்

தொழில்களாகும். விளைப் பொருட்களைப் பயன்படுத்தி நம்மைச் சுற்றியுள்ள பகுதிகளில் செயல்படும் சிறுகுடிசைத் தொழில்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததவை. சிறு தொழில்கள் என்பது பத்துகோடி ரூபாய்க்கு மிகாமல் முதலீடு செய்து ஆண்டு வருமானம் ஐம்பது கோடிக்கும் குறைவாக ஈட்டும் தொழில்களாகும்

குடிசைத்தொழில்என்பது ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்பம் உள்ளூரில் கிடைக்கும் விளைபொருட்களைப் பாரம்பரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதாகும். இதற்கு ஆரம்ப முதலீடு குறைவானதாகும். குடிசைத் தொழிலில் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. நெசவு, கம்பளி தயாரித்தல், தோல் தொழில், கைவினைப்பொருட்கள் தயாரிப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் சிறு தொழிலகள் போன்றவை குடிசைத்தொழில்களுக்கு எடுத்துக்காட்டாகும். உலகம் முழுவதும் உள்ள எண்ணற்ற கிராம பொருளாதார அமைப்புகளின் முதுகெலும்பு குடிசைத்தொழில்களாகும்.

**வேளாண் பூங்கா**

*கேரளத்தில் வேளாண் உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தும் இடங்கள் இவை. வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உறுதி செய்கிறது. வேளாண் பூங்கா வேளாண் துறையின் கீழ் செயல்படுகிறது.*

## வேளாண்மை சார்ந்த சிறு – குடிசைத் தொழில்களில் நவீன மாற்றங்கள்.

வேளாண்மை சார்ந்த ஸ்டார்ட்அப் (புதிய தொழில்கள்) இன்று பிரபலம் அடைந்து வருகின்றன. இதுபோன்ற ஸ்டார்ட் அப்களுக்கு அரசு அதிக ஊக்கத்தை அளித்து வருகிறது. பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பொடிசெய்தல், அரைத்தல், பொதிதல் (Packing) போன்ற எளிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பலவகையான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றும் சிறு – குடிசைத் தொழில்கள் இன்று புகழ்பெற்று வருகின்றன. பாக்கு (கமுகு) மரப்பாளை உற்பத்திப் பொருட்கள், உணவு உற்பத்திப் பொருட்கள், பல இனங்களில் இருந்து கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் போன்ற தொடர்புடையத் தொழில்கள் முக்கியமான வேளாண் உற்பத்திப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டவை.


படம் 12.20 • பாக்கு (கமுகு) மரத்துப் பாளையில் இருந்து உற்பத்திப் பொருட்கள்

*நமது பகுதியிலுள்ள வேளாண் விளை பொருட்களைப் பயன்படுத்தி ஒரு ஸ்டார்ட் அப் தொடங்குவதற்கான கருத்துக்களைக் கண்டறிந்து ஒரு கட்டமைப்பு (Frame work) தயார் செய்க.*

## கைத்தறித் தொழில்

*“எந்த ஒரு தேசியக் கல்வி முறையிலும் இன்றியமையாத காரணிகளாக நூற்பும் நெசவும் இருக்கும் என்று கருதுகிறேன்”*

**மகாத்மா காந்தி**

இவை கைத்தறித் தொழிலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு காந்தியடிகள் கூறிய வார்த்தைகள். இந்தியாவில் அமைப்புசாரா பொருளாதாரச் செயல்பாடுகளில் ஒன்று கைத்தறி தொழில்துறை.


படம் 12.21 • கைத்தறி

கிராமப்புற மற்றும் துணை கிராமப்புற மக்கள் வாழ்வாதாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகவும், பெண்களின் பொருளாதார அதிகாரமளிக்கும் உறைவிடமாகவும் இத்துறை உள்ளது. நாட்டின் துணி உற்பத்தியில் கைத்தறித் துறையின் நன்கொடை குறைவானது அல்ல. கேரளாவில் ஒரு முக்கிய பாரம்பரிய சிறு –குடிசைத் தொழில் கைத்தறி ஆகும். கயிறு உற்பத்தித் துறைக்கு அடுத்தபடியாகத் தொழில் வாய்ப்பு அளிப்பதில் அடுத்த நிலையில் கைத்தறி உள்ளது.

## வேளாண் சந்தை



படம் 12.22 • நாட்டுப்புறச் சந்தை



படம் 12.23 • காய்கறிக் கடை



படம் 12.24 • ஹைப்பர் மார்க்கெட்




படம் 12.25 • இணையதள சந்தை

மேலே உள்ள படங்களை உற்று நோக்குவோம். இவைகள் வேளாண் விளைபொருட்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் நாட்டில் நடைமுறையிலுள்ள சில அமைப்புகள் ஆகும். உங்களது வீட்டில் இதில் எதிலிருந்து விவசாயப் பொருட்களை வாங்குகிறீர்கள்? விவசாய உற்பத்திப் பொருட்களை வாங்கவும் விற்கவும் உருவாக்கப்பட்ட அமைப்புதான் வேளாண் சந்தை. சிறப்பான ஒரு வேளாண் சந்தை வேளாண் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். இதன் முக்கிய நோக்கங்கள் மிகக் கூடுதலான வருமானம் அடிப்படை உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்தல், வேளாண் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதி செய்து நியாயமான விலை கிடைக்க செய்தல் ஆகும்.

## விவசாயிகள் மற்றும் சந்தை:

வேளாண் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்காக எங்கெல்லாம் செல்கிறது என்று தெரியுமா? ஆராயலாம்.

### கதிர் செயலி

*விவசாயம் மற்றும் அதன் முறைகளையும் சிறப்புடையதாக்க தகவல் தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்தும் நோக்குடன் கதிர் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. (Kerala Agriculture Technology Hub and Information Repository - KATHIR). காலநிலை தகவல்கள், பயிர் ஆலோசனைகள், சந்தை நுண்ணறிவு தகவல், விவசாய திட்ட தகவல்கள், பயிர் நிலம் தொடர்பான தகவல்கள் போன்றவை இந்தச் செயலி மூலம் கிடைக்கும். இந்தச் செயலியைப் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.*




விவசாயி தனது விளைப் பொருட்களுக்கு நியாயமான விலையைப் பெறுவது அவரது உரிமை. எனவேதான் விவசாயிகள் அதிக விலையை வழங்கும் சந்தைகளைக் கண்டறிய முயற்சி செய்கிறார்கள். இணையதள சந்தைகளின் வாய்ப்பைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையில் இடைத்தரகர்கள் இல்லாமல் சந்தைப்படுத்த முடிகிறது.

*வேளாண்துறையில் வேளாண் சந்தைகளின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடல் நடத்தி குறிப்புகள் தயாரிக்கவும்.*

## பல்வேறு வேளாண் சந்தைகள்

கட்டமைக்கப்பட்டதும் செயல்பாட்டு திறனுமான சந்தைகள் வேளாண் துறையின் முன்னேற்றத்திற்கு அவசியமானதாகும். அமைப்பு சார் வேளாண் சந்தை (Organised Agriculture Market) எனவும் அமைப்பு சாரா வேளாண் சந்தை (Un-organised Agriculture Market) எனவும் வேளாண் சந்தைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப செயல்படுபவை அமைப்பு சார் வேளாண் சந்தைகள். முக்கியமாக APMC விதிகளுக்கு உட்பட்டு இவை செயல்படுகின்றன. ஆனால் தனிப்பட்ட அமைப்புகள் இல்லாமல் செயல்படுபவை அமைப்பு சாரா வேளாண் சந்தைகள்.

### விவசாய விளைபொருள் விற்பனை சந்தைக் குழு *(Agricultural Produce Market Committee- APMC)*

*பெரிய மற்றும் சில்லறை விற்பனையாளர்களால் சுரண்டலில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க நாட்டின் மாநில அரசுகளால் அமைக்கப்பட்ட சந்தைப்படுத்துதல் வாரியம் APMC ஆகும். விவசாய விளை பொருள் விற்பனை சட்டம் (APMR Act) வழியாக மாநிலங்கள் APMC யைக் கட்டுப்படுத்துகிறது.*

## கிராமப்புற முதன்மைச் சந்தைகள் (Rural Primary Markets)

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாகக் கொண்டு சேர்க்கும் சந்தைகள் கிராமப்புற முதன்மைச் சந்தைகள். தனிப்பட்ட கிராமவாசிகளுக்கும் முக்கிய விற்பனையாளர் மற்றும் நுகர்வோருக்கும் இடையிலான முக்கிய பரிமாற்ற வழிமுறைகளாகும். சந்தைகள் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை திறந்த வெளிகளில் கூடுகிறது. எடுத்துக்காட்டாக கிராமப்புற சந்தைகள், கிராமிய வாரச் சந்தைகள்.

### கிராமிய சந்தைகள் (Village Haats)

*ஒரு கிராமத்தில் உற்பத்தியாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் நுகர்வோர்கள் விவசாயப் பொருட்களை வாங்கவும் விற்கவும் கூடும் சந்தைகள் கிராமிய சந்தை எனப்படும்.*

### மண்டிகள்

*இவை மாவட்ட தலைமையகங்கள் மற்றும் பிற நகரங்களில் தினசரி பரிவர்த்தனைகளுக்காக நிரந்தர மொத்த விற்பனைச் சந்தைகளாகும்.*

### கண்காட்சிகள் (Fair)

*மத விழாக்கள் அல்லது உள்ளூர் விழாக்களின் போதும் புனித யாத்திரை தலங்களிலும் முக்கிய மையங்களிலும் நடத்தப்படும் சந்தைகளே கண்காட்சிகள்.*

### 'கேரள க்ரோ'

*விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும் அதன் வழியாக விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும் நுகர்வோருக்கு, நியாயமான விலையில் பொருட்கள் கிடைக்கச் செய்யவும் வேளாண்துறை "கேரளக்ரோ" என்ற ஒருங்கிணைந்த பிராண்டின் கீழ் விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தத் தொடங்கியுள்ளது.*

## மொத்த வியாபார சந்தைகள் அல்லது இரண்டாம் நிலை மொத்த வியாபார சந்தைகள்
(Wholesale Markets or Secondary Wholesale Markets)

விவசாய நிலங்களுடன் தொடர்புடைய நகரங்களில் செயல்படும் சந்தைகளே இவை. விவசாய உற்பத்தியாளர்களே உற்பத்திப் பொருட்களை இந்தச் சந்தைகளுக்கு கொண்டு சேர்க்கின்றனர். மாவட்ட தலைநகரங்களிலோ ரயில் நிலையத்திற்கு அருகிலோ உள்ள சந்தை மையங்கள் ஆகும் இவை. கிராமப்புற விவசாயிகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் இடையே வியாபாரம் நடைபெறுகிறது. பிற சந்தைகளில் இருந்தும் பொருட்களை இங்கு கொண்டு வருவது உண்டு. எடுத்துக்காட்டாக: மண்டிகள்.

மாநில தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தி சங்கங்களின் ஆதரவுடன் மாநிலங்களில் விவசாயச் சந்தை நடைபெறுகிறது. இது நகர்ப்புற மற்றும் கிராமப்புறச் சந்தைப்படுத்துதல் வலை அமைப்பு மூலம் நடைபெறுகிறது. கேரளாவில் மொத்த வியாபார சந்தைகளில் மூன்று நகர்ப்புறங்களிலும் மூன்று கிராமப்புறங்களிலும் இயங்குகின்றன. இதைத் தவிர ஐந்து மாவட்ட கொள்முதல் மற்றும்

சந்தைப்படுத்துதல் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. வேளாண் துறையின் கீழ் உள்ள இந்த ஐந்து மையங்கள் கேரள அரசின் சந்தை விதிகளின்படிச் செயல்படுகின்றன. ஈ – நாமின் (E-Nam) கீழ் ஆறு மொத்த சந்தைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர பல்வேறு நிலைகளில் உள்ள உள்ளூர் சந்தை மையங்கள் விவசாய விளைபொருட்களை நேரடியாகவும் விவசாயிகள் குழுக்கள் வழியாகவும் சந்தைப்படுத்த உதவுகின்றன. VFPCK உற்பத்தி மையங்களில் நிறுவப்பட்ட சுய உதவி விவசாயிகள் குழுக்களின் சந்தைப்படுத்துதல் வழியாகவும் இடைத்தரகர்களை அகற்றிவிட்டு விற்பனை நடத்தப்படுகிறது.

இந்தியாவில் விவசாய விளைபொருட்கள் மற்றும் வன வளங்களைச் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் ஒரு அமைப்பே இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்புநிறுவனம் (NAFED). விவசாய விளைபொருட்களின் ஒருங்கிணைப்பு, சந்தைப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல், தரம் பிரித்தல், பிராண்டிங் மற்றும் பேக்கிங் போன்ற சேவைகளை மேற்கொள்வதன் மூலம் முதன்மை வேளண்மை கூட்டுறவு சங்கம் (PACS) கிராமப்புற விவசாய செயல்பாடுகளை வலுப்படுத்தப்படுகின்றன.

### ஈ – நாம் *(E-Nam)*

*விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப விற்பனை செய்ய அரசால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும் தேசிய வேளாண் சந்தை. இது விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு இணையதளமாகும்.*

## விவசாயசந்தை எதிர்கொள்ளும் சவால்கள்

- போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை
- கடன் வசதிக் குறைவு
- போதுமான சந்தைத் தகவல் இல்லாமை
- போதுமான சேமிப்பு வசதிகள் இல்லாமை
- இறக்குமதி கொள்கைகள்
- இடைத்தரகர்களின் சுரண்டல்



படம் 12.26 • வேளாண் மொத்த வியாபார சந்தை

### காய்கறி மற்றும் பழ மேம்பாட்டு கவுன்சில் கேரளா *(VFPCK)*

*கேரளத்தில் உள்ள விவசாயிகளுக்கு வணிக அடிப்படையில் பழங்கள் மற்றும் காய்கறிகள் விவசாயத்திற்கான விதைகள் முதல் சந்தைப்படுத்துதல் வரை உள்ள பல்வேறு வேளாண் செயல்பாடுகளில் ஆதரவு அளிப்பதாகும் (VFPCK).*

### வேளாண் அறிவியல் மையங்கள்

*விவசாயிகளின் பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வு காணவும் புதிய விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களை வளர்க்கவும் இந்திய வேளாண் கவுன்சிலால் நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும் வேளாண் அறிவியல் மையங்கள்.*

*பலவகையான வேளாண் சந்தைகளைப் பற்றி ஒரு கருத்தரங்கு நடத்தவும்.*

பல வகையான தோட்ட பயிர்கள், உணவுப் பயிர்கள், பணப்பயிர்கள், வாசனை திரவியங்கள், காய்கறிகள் போன்றவற்றைப் பயிர் செய்ய ஏற்ற பலதரப்பட்ட வேளாண் காலநிலை மற்றும் சிறிய பயிர் நிலங்கள் என்பன கேரள வேளாண் துறையின் சிறப்பு அம்சங்களாகும். வேளாண்துறை, மாநில தோட்டக்கலை இயக்கம், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், உள்ளூர் தன்னாட்சி நிறுவனங்கள், கேரள வேளாண் பல்கலைக்கழகம், பல்வேறு வேளாண் ஆராய்ச்சி மையங்கள், விவசாய உற்பத்திக் குழுக்கள் போன்றவை வேளாண் துறையை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சி வேளாண் துறையில் புதியதொரு புரட்சிக்கு வழிவகுத்தது. வேளாண் துறையில் காணப்படும் பிரச்சினைகளை உள்வாங்கி, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்த தன்மையை அடைய தேவையான செயல்பாடுகளை தொழில்நுட்ப அறிவியல் வழியாக நிறைவேற்றப்படுகிறது. எதிர்கால சந்ததியினரின் உணவுப் பாதுகாப்பையும் நாட்டின் பொருளாதார பாதுகாப்பையும் நிலைநிறுத்த உதவும் செயல்பாடுகளில் நமது புதிய தலைமுறை ஈடுபட வேண்டும் என்பது நமது நோக்கம்.

## தொடர் செயல்பாடுகள்

- அருகில் உள்ள பகுதிகளில் காணப்படும் பயிர் நிலங்களுக்குச் சென்று பல்வேறு பயிர் வகைகள் மற்றும் பயிர் செய்யும் முறைகள் பற்றி அறிக்கை தயார் செய்க
- பள்ளி வளாகத்தின் அருகில் உள்ள வேளாண் அலுவலகத்திற்குச் சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தி வேளாண் அலுவலகத்தின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவும்.
- பள்ளிக்கூடத்தில் ஒரு விவசாய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட வினா நிரலின் அடிப்படையில் விவசாயிகளுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தி வேளாண் துறைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி ஒரு செயல்திட்டம் தயார் செய்க.
- பாடத்தில் விவாதிக்கப்பட்ட வேளாண் முறைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி பள்ளிக்கூடத்தில் ஒரு பயிர் நிலம் தயார் செய்யவும்.

அலகு 13

# புதிய நாடுகளைக் கட்டமைத்தல்





IN CONGRESS, JULY 4, 1776.

A DECLARATION

BY THE REPRESENTATIVES OF THE

UNITED STATES OF AMERICA,

IN GENERAL CONGRESS ASSEMBLED.

Signed by ORDER and in BEHALF of the CONGRESS,

JOHN HANCOCK, PRESIDENT.

ATTEST.
CHARLES THOMSON, SECRETARY.

## சுதந்திரப் பிரகடனம்

"அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டவர்கள் . அவர்களைப் படைத்தவர் அனைவருக்கும் தவிர்க்க முடியாத சில உரிமைகளை வழங்கி உள்ளார். வாழ்க்கை, சுதந்திரம், வாழ்க்கை சுகம் ஆகிய உரிமைகள் அதில் அடங்கும். இந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஆளப்படுபவர்களின் ஒப்புதல் கிடைக்கப் பெற்ற அரசாங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏதாவது ஆட்சி இந்த லட்சியங்களை அழிக்கும் வகையில் செயல்பட்டால் அதனை மாற்றவோ ஒழிக்கவோ செய்யும் அதிகாரம் மக்களுக்கு உண்டு."

பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்க மக்கள் தயாரித்த சுதந்திரப் பிரகடனத்தின் ஒரு பகுதியே மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

என்னென்ன உரிமைகளைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளன.?

- வாழ்வதற்கான உரிமை
- சுதந்திரத்திற்கான உரிமை
-
-

இவ்வாறு ஒரு சுதந்திர பிரகடனம் வெளியிட அமெரிக்க மக்களைத் தூண்டிய காரணிகள் எவை எனப் பரிசோதிக்கலாம்.

## காலனித்துவக் கட்டுப்பாடு




படம் 13.1 • தீர்த்தாடக பிதாக்கள் உருவாக்கிய காலனிகள்

மேஃப்ளவர் என்ற பெயர் உள்ள கப்பலில் அமெரிக்காவில் வந்திறங்கிய தீர்த்தாடக பிதாக்கள் (Pilgrim Fathers) என்று அறியப்படும் பியூரிட்டர்களின் ஒரு குழு வட அமெரிக்காவில் பிளிமௌத் (மாசசூசெட்ஸ்) என்ற காலனியை உருவாக்கினர். பிற் காலத்தில் 12 காலனிகள் உருவாக்கப்பட்டன. இந்தக் காலனிகளில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலானோர் ஆங்கிலேயர்கள் . தாய்நாட்டின் ஆதரவு இல்லாமல் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்த இவர்களைக் கட்டுப்படுத்த இங்கிலாந்து மன்னர் காலனிகளில் ஆளுநர்களை நியமித்தார். இது காலனி மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணமாக இருந்தது.

*தீர்த்தாடக பிதாக்கள் உருவாக்கிய காலனிகளைப் படத்தில் இருந்து கண்டுபிடித்து பட்டியலிடவும்.*

### பியூரிட்டர்கள்

*இங்கிலாந்தில் ஒரு கிறிஸ்தவ பிரிவினரே பியூரிட்டர்கள். ஆராதனை செயல்களில் பழமைவாத நிலைப்பாட்டை இவர்கள் கொண்டிருந்தனர். நாட்டில் உள்ள பிற கிறிஸ்தவ பிரிவினரோடு இவர்கள் முரண்பாடு கொண்டிருந்தனர். இதைத் தொடர்ந்து இவர்களில் சிலர் சொந்த நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்கக் கண்டத்திற்குக் குடி பெயர்ந்து காலனிகளை நிறுவினர்.*

## வணிகக் கட்டுப்பாடு

பிரிட்டிஷ் அரசாங்கம் சட்ட உருவாக்கத்தின் மூலம் காலனிகளில் வணிகக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வரமுயற்சித்தது.மூலப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்குமான ஏக போக சந்தைகளாக அவர்கள் காலனிகளை மாற்றினர். பிரிட்டன் நடைமுறையிலாக்கிய வணிகச் சட்டங்கள் எவை என்பதை ஆராய்வோம்

- காலனிகளிலிருந்து காலனிகளுக்கு உள்ள பொருட்கள் பிரிட்டிஷ் கப்பல்கள் வழியாகவோ அல்லது காலனிகளின் கப்பல்கள் வழியாகவோ கொண்டு செல்லப்பட வேண்டும்.
- கம்பளி, புகையிலை, கப்பலின் பாய் போன்ற பொருட்கள் இங்கிலாந்து வழியாக மட்டுமே ஐரோப்பாவிற்கு அனுப்ப வேண்டும். ஐரோப்பாவில் உள்ள பொருட்களை இங்கிலாந்து வழியாக மட்டுமே கொண்டு செல்ல முடியும்.
- 1765- ஆம் ஆண்டு முத்திரை சட்டத்தின்படி உயில்கள், சட்ட ஆவணங்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகிவற்றில் குறிப்பிட்ட மதிப்புள்ள முத்திரை பதிக்கப்பட வேண்டுமென கட்டாயப்படுத்தினர். பிரஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து காலனிகளைப் பாதுகாப்பதற்காகப் பிரிட்டனுக்கு செலவான தொகையை ஈடு செய்ய அதிக வரி வசூலிக்கப்பட்டது.

அதிகரித்த மக்களின் எழுச்சியின் காரணமாக 1766 இல் இந்தச் சட்டம் திரும்பபெற்றாலும் காலனிகளில்வரி விதிக்கும் உரிமையைப் பிரிட்டன் பாராளுமன்றம் தக்க வைத்துக் கொண்டது.

பிரிட்டனின் இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்க மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்று புரிந்து கொண்ட காலனி மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

காலனி மக்களை பிரிட்டனுக்கு எதிராகப் போராடத் தூண்டிய மற்றும் பிற காரணிகள் இருந்தன. அவை எவை எனப் பார்ப்போம்.

- ஏழாண்டு போரின் பலனாகக் காலனிமக்களின் பிரெஞ்சு பயம் அகன்று போனது.
- போரில் பங்கெடுத்ததன் பலனாகக் கிடைத்த ராணுவ அனுபவம்.
- தங்களது பலத்தைக் குறித்துள்ள அறிவு

### போஸ்டன் தேநீர் விருந்து



படம் 13.2 ● போராட்டக்காரர்கள் தேயிலையைக் கடலில் வீசுகிறார்கள்.

*பிரிட்டீஷ் பிரதமராக இருந்த நார்த் பிரபு 1773 இல் தேயிலைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். இச்சட்டத்தின்படி காலனி மக்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் தேயிலையை வாங்குவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். துறைமுகத்திற்கு வந்த கப்பல்களில் சிவப்பு இந்தியர்கள் போல வேடமிட்டு ஏறிய போராட்டக்காரர்கள் தேயிலைப் பெட்டிகளைக் கடலில் வீசி எறிந்தனர். இந்த நிகழ்வு போஸ்டன் தேநீர் விருந்து என்று அழைக்கப்படுகிறது.*

*வணிகச் சட்டங்கள் காலனிகளைச்சுரண்டுவதற்கு எவ்வாறு உதவின என்பதை விவாதித்து குறிப்பு தயாரிக்கவும்.*

## ஏழாண்டு போர்

*வியாபார குத்தகையை உறுதிபடுத்துவதற்காக பிரட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே நடந்த போரே ஏழாண்டு போர் ஆகும். 1756-இல் துவங்கின போர் 1763-இல் பாரிஸ் உடன்படிக்கையுடன் முடிந்தது.*

## காலனிகள் ஒன்றிணைகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் அமெரிக்க காலனிகளில் நடைமுறைப்படுத்திய சட்டங்களின் மீதான எதிர்ப்பு காலனிகளுக்கு இடையே ஒற்றுமையுணர்வு வளரக் காரணமானது. இந்த ஒற்றுமை உணர்வின் விளைவாக பிலடெல்பியாவில் காலனி மக்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடினர். இது காண்டினென்டல் காங்கிரஸ் என்றும் அறியப்படுகிறது. இந்த மாநாடுகளைக் குறித்து ஆராய்வோம்.

**1774**
**முதலாம் பிலடெல்பியா காங்கிரஸ்**

- ஜோர்ஜியா தவிர 12 காலனிகள் பங்கெடுத்தன.
- குறைகள் தீர்க்கப்படும் வரைக்கும் பிரிட்டனுடனான வணிகத்தை நிறுத்தி வைப்பதற்கு முடிவு செய்தனர்.

**1775**
**இரண்டாம் பிலடெல்பியா காங்கிரஸ்**

- பிரிட்டிஷ் மன்னருக்கு ஒலிவு கிளை மனு சமர்ப்பிக்கப்பட்டது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்க ராணுவத்தின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.
- பிரிட்டனுடன் போர் தொடங்கப்பட்டது

**1776**
**மூன்றாம் பிலடெல்பியா காங்கிரஸ்**

- புகழ்பெற்ற சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- தாமஸ் ஜெபர்சனால் இது எழுதி தயாரிக்கப்பட்டது.

## ஒலிவு கிளை மனு



படம் 13.3 • ஒலிவு கிளை மனு

*பிரிட்டனுடனான போரைத் தவிப்பதற்கான நோக்கத்தோடு மன்னருக்கு தங்களது நம்பிக்கையை அறிவித்துக் கொண்டு காலனி மக்கள் நல்கிய மனுவாகும். இதன்படி 1765 க்குப் பிறகு நடைமுறைப்படுத்திய சட்டங்கள் திரும்பப்பெற வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.*

## தத்துவ சிந்தையும் புரட்சியும்

அமெரிக்க மக்களிடம் தாக்கம் செலுத்திய தத்துவஞானிகளும் அவர்களுடைய கருத்துக்களும் எவை என்பதை ஆராய்வோம்.

'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரியில்லை' - **ஜெயிம்ஸ் ஓட்டிஸ்**

'இங்கிலாந்திலிருந்து பிரிந்து செல்வதே அமெரிக்கர்களைப் பொறுத்தவரை புத்திசாலித்தனம்' - **தாமஸ் பெயின்**

'மனிதனுக்குச் சில அடிப்படை உரிமைகள் உண்டு. அவற்றை மீற ஒரு அரசாங்கத்திற்கும் உரிமை இல்லை' - **ஜான் லாக்**

*காண்டினென்டல் காங்கிரசுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய நழுவு படம் தயாரிக்கவும்.*

## சுதந்திரத்திற்கு

1781-இல் யார்க் டவுனில் வைத்து கார்ன்வாலிஸ் தலைமையிலான ஆங்கிலப் படையை ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் உள்ள அமெரிக்கப்படை பிரான்ஸ், ஸ்பெயின் உதவியுடன் தோற்கடித்தது. தொடர்ந்து 1783-இல் பாரிஸ் உடன்படிக்கையின் படி பிரிட்டன் 13 அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

## புதிய அரசியலமைப்பு உருவாகிறது

போருக்குப் பிறகு காலனிகள் சேர்ந்து ஆர்டிக்கில்ஸ் ஆப் காண்பெடரேஷன் என்ற பெயரில் அரசியலமைப்பின் உருவவரைச் சட்ட அமைப்பை தயாராக்கினர். இதன் அடிப்படையில் அரசியலமைப்பை நிறைவு செய்வதற்காக பிலடெல்பியாவில் வைத்து ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையில் ஒரு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் வரையறுக்கப்பட்ட அரசியலமைப்பின்படி ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்கஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பின் முக்கியமான சிறப்பம்சங்கள் எவை?

- கூட்டாட்சி மாதிரியான ஒரு எழுதப்பட்ட அரசியல் அமைப்பு அமெரிக்காவில் உள்ளது. அதன்படி யூனியனில் சேர்ந்த ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்குச் சொந்தமான சில அதிகாரங்கள் இருந்தன.

### ஜார்ஜ் வாஷிங்டன்



*படம் 13.4 • ஜார்ஜ் வாஷிங்டன்*

*1732–ல் ஜார்ஜ் வாஷிங்டன் பிறந்தார். அவரது தந்தை அகஸ்டின் வாஷிங்டன் தாயார் மேரிபால். அமெரிக்க கான்டினென்டல் ராணுவத்தின் தளபதி, அரசியலமைப்பு மாநாட்டின் தலைவர், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் ஜனாதிபதி ஆகிய பதவிகளை வகித்தவர்.*

- உலகிலேயே மிகவும் சிறிய அரசியலமைப்பு
- வெளியுறவு, போர், மாநிலங்களுக்கிடையிலான வணிகம், நாணயம் ஆகியவற்றின் மீது மத்திய அரசாங்கத்தின் அதிகாரம்
- மத்திய அரசாங்கத்தில் மாநில அரசிற்கும் பிரதிநிதித்துவம் இருந்தது.
- அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளான காங்கிரஸ், ஜனாதிபதி, நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளது.

*வரைபடத்தை நிரப்பவும்*




புரட்சிக்குப் பிறகு பொருளாதாரம், தொழில், கல்வி, அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் அமெரிக்கா அடைந்த வளர்ச்சி ஒரு காலகட்டத்தில் சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடின மக்களை ஒரு முக்கிய உலக சக்தியாக வளர்ந்து வர உதவியது.

அமெரிக்க சுதந்திரப் போர் உலகிற்கு முக்கிய பங்களிப்பை அளித்தது. அவை எவை?




*அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாவதற்கு.வழி வகுத்த நிகழ்வுகளை உட்படுத்திக் கொண்டு ஒரு சுவர் பத்திரிக்கை தயாரிக்கவும்.*

## உள்நாட்டுக் கலவரங்களும் ஒற்றுமைகளும்

> *"அடிமைத்தனம் தவறில்லை என்றால் வேறு எதுவும் தவறில்லை"* *"If slavery is not wrong, then nothing is wrong"*

அமெரிக்க மாநிலங்களுக்கு இடையிலான பிரிவினையின் அடிப்படைக் காரணிகளில் ஒன்றைப் பற்றி ஆபிரகாம் லிங்கன் கூறிய வார்த்தைகளைக் கவனித்தீர்களா? புரட்சிக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகள் எதிர்கொண்ட மிகவும் சிக்கலான நிகழ்வாக இருந்தது உள்நாட்டு போர். இதற்கு வழி வகுத்த சூழல்கள், முக்கிய காரணங்கள் ஆகியவற்றை ஆராய்வோம்.

## வேறுபாடுகள் நிறைந்த மாநிலங்கள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாநிலங்களுக்கிடையில் வேளாண்மை, கல்வி, பொருளாதாரத் துறைகளில் இருந்த வேறுபாடுகள் எவை என்பதை ஆராய்வோம்

| வட அமெரிக்க மாநிலங்கள் | தென் அமெரிக்க மாநிலங்கள் |
|---|---|
| • வேளாண்மையும் வணிகமும் முக்கிய துறைகள் | • வேளாண்மை முக்கிய துறையாக இருந்தது.<br>• ஒழுங்கமைக்கப்பட்ட தோட்டங்களின் இருப்பு |
| • தொழில் துறை உற்பத்திகளுக்குப் பிறரைச் சார்ந்திருக்கவில்லை | • தொழிற்சாலைகள் மிகவும் குறைவாகயிருந்தது<br>• தொழில்துறை உற்பத்திக்காக வட மாநிலங்களையோ இங்கிலாந்தையோ சார்ந்திருக்க வேண்டியிருந்தது |
| • கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது<br>• ஆரம்பக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் இருந்தது. | • கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை<br>• எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியிருந்தனர் |

*வட அமெரிக்க மாநிலங்களுக்கும் தென் அமெரிக்க மாநிலங்களுக்கும் இடையே இருந்த சமத்துவமின்மை அவற்றுக்கிடையே மோதலுக்குக் காரணமானது எவ்வாறு என்பதை விவாதித்து குறிப்பு தயாரிக்கவும்.*

## அடிமைத்தனம்

*ஒரு மனிதன் மற்றொருவரின் முழுமையான அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும் என்ற நிலைமையே அடிமைத்தனம் என்று லீக் ஆப் நேஷனஸ் வரையறுத்தது. தோற்கடிக்கப்பட்ட எதிரிகளைக் கைதிகளாகப் பிடித்தும் தனி நபர்களை விலைக்கு வாங்கியும் அடிமைப்படுத்தப்பட்டனர். CE 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவத்துடன் ஆப்பிரிக்காவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான அடிமைகளை அமெரிக்காவிற்குக் கொண்டு வந்தனர்.*

## அடிமைத்தனம்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை ஐரோப்பியர் ஆப்பிரிக்காவிலிருந்து வேளாண் நோக்கங்களுக்காக அடிமைகளை அமெரிக்காவிற்குக் கொண்டு வந்தனர். வடக்கு மாநிலங்களில் மக்கள் அடிமை முறையை ஊக்கப்படுத்தவில்லை. ஜான் வூல்மான் தலைமையில் அடிமைத்தனத்தை ஒழிப்பது என்ற லட்சியத்தோடு முன்னரே முயற்சிகள் தொடங்கப்பட்டிருந்தன. அவரது செயல்பாட்டின் விளைவாக 1808-இல் அடிமைகளை இறக்குமதி செய்வது அமெரிக்காவில் தடை செய்யப்பட்டன. அடிமைத்தனத்தை ஆதரித்த தெற்கு மாநிலங்கள் தோட்டப்பயிர் வேளாண்மையின் நிலைநிற்பிற்கு அடிமைத்தனம் தேவை என்றும், அதனால் அவர்களை விடுவிப்பது நாட்டிற்கு ஆபத்தாகும் என்றும் வாதிட்டனர். இருப்பினும் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை தன் சொத்தாக மாற்றுவது அமெரிக்க அரசியலமைப்பின் கொள்கைகளுக்கு முரணானது என்று வட மாநிலங்கள் கருதின.

அடிமைத்தனத்திற்கு எதிரான செய்தித்தாள் 'தி லிபரேட்டரும்' திருமதி ஹாரியட் பீச்சர் ஸ்டோவினின் 'அங்கிள் டோம்ஸ் கேபின்' என்ற புத்தகமும் அடிமைத்தனத்திற்கு எதிரான மக்களின் உணர்வை வலுப்படுத்தின. இது வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் இடையே பதட்டத்தை உருவாக்கிது.

*'அமெரிக்காவில் அடிமைத்தனமும் உள்நாட்டு கலகமும்' என்ற தலைப்பில் ஒரு திறந்த மன்றத்தை நடத்தவும்.*



படம் 13.5 ● திருமதி. ஹாரியட் பீச்சர் ஸ்டோவ்

## வாக்குச் சீட்டில் இருந்து போர்க்களத்திற்கு

அடிமைத் தனத்தை ஒழிக்க உறுதி கொண்ட ஜனநாயக கட்சியின் தலைவராக இருந்தவர் ஆபிரகாம் லிங்கன் ஆவார். இவர் 1860-இல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென் கரோலினா தலைமையில் 13 மாநிலங்கள் யூனியனோடுள்ள தொடர்பிலிருந்து விலகின. அவர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 'கான் பெடரேட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா' என்ற புதிய ஒரு கூட்டணியை உருவாக்கினர். இருப்பினும் வட மாநிலங்கள் யூனியிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையைக் கேள்விக்குள்ளாக்கின. இது உள்நாட்டு போருக்கு வழி வகுத்தது.

## யூனியன் வெற்றியை நோக்கி

1861-இல் கூட்டமைப்பு நாடுகளுக்கும் யூனியன் நாடுகளுக்கும் இடையே உள்நாட்டு போர் மூண்டது. 1863-இல் கெட்டிஸ்பர்க் போரில் ஐக்கிய நாடுகள் இறுதியாக வெற்றி பெற்றது. 1863 ஜனவரி 1 இல் அமெரிக்க

ஐக்கிய நாடுகளின் அடிமைகளுக்கு விடுதலை கிடைக்கும் படியாக ஆபிரகாம்லிங்கன் பிரகடனத்தை வெளியிட்டார் இது புகழ்பெற்ற விடுதலை பிரகடனம் என்ற பெயரில் அறியப்படுகின்றது. தோற்கடிக்கப்பட்ட தென் மாநிலங்களோடு லிங்கன் அனுதாபம் தெரிவித்தார். 1865 ஏப்ரல் 15 இல் ஜான் வில்க்ஸ் பூத் (John Wilkes Booth) என்ற பிரிவினைவாதி அவரை கொலை செய்தார்.

*அமெரிக்காவில் ஒற்றுமையை நிலை நிறுத்துவதில் ஆபிரகாம் லிங்கன் வகித்த பங்கினைக் குறித்து விவாதம் செய்து குறிப்பு தயாரிக்கவும்.*

## ரஷ்யப் புரட்சி



படம் 13.7 •

*"எங்களது காலத்தில் அனைத்து வழிமுறைகளும், சாதனைகளும், நவீன கலாச்சாரத்தின் முன்னேற்றத்தையும் பயன்படுத்திக் கொண்டு வேளாண்மை செய்பவர்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தனர். அதன் விளைவாக அவர்கள் பட்டினி கிடப்பதும் வாத்தின் கால்களைச் சாப்பிடுவதும் ரொட்டிக்கு பதில் சேற்றுத் துண்டுகளைச் சாப்பிட்டு அஜீரணத்தால் மரணவேதைனைப்பட்டு இறக்கவும் செய்கின்றனர். அதே நேரத்தில் இரண்டாம் நிக்கோலஸ் தலைமையில் ரஷ்ய நிலபிரபுக்களும் முதலாளிகளும் நன்றாக செல்வத்தில் புரளுகின்றனர்."*

*லெனின் "சேகரிக்கப்பட்ட படைப்புகள்" தொகுதி 17, பக்கம் 527.*

### ஆபிரகாம் லிங்கன்



படம் 13.6 • ஆபிரகாம் லிங்கன்

*1809 பிப்ரவரி 12 இல் கென்டக்கியில் பிறந்தார். 1859 ல் அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் ஒற்றுமையை நிலைநிறுத்தி கொண்டே அடிமைகளை விடுதலை செய்தல் என்ற தன்னுடைய லட்சியத்தை அடைய அவரால் முடிந்தது. கெட்டிஸ்பர்க் சொற்பொழிவில் தான் அவர் ஜனநாயகத்தை மக்கள், மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என்று வரையறுத்தார்.*

மேலே கொடுக்கப்பட்டுள்ள பகுதியிலிருந்து ரஷ்யாவில் வேளாண்மை செய்பவர்களுடையவும் சாதாரண மக்களின் வாழ்க்கை குறித்தும் என்னவெல்லாம் அறிந்து கொள்ளலாம்? இந்தச் சூழ்நிலைகள் ரஷ்ய மக்களை எவ்வாறு புரட்சிக்குக் கொண்டு சென்றன?

## ஸார் (Tsar/Czar) சக்கரவர்த்தியும் மக்கள் சபையும்

ரஷ்யாவை ஆண்ட சர்வாதிகார ஆட்சியாளர்கள் ஸார் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்டனர். அதிகாரிகளை நியமிக்கவும் பிரித்து விடுவது மட்டுமல்ல யாரையும் நாடு கடத்தவும் சிறையில் அடைக்கவும் சக்கரவர்த்திகளுக்கு அதிகாரம் இருந்தது. மோசமான தொழில் நிலைமைகள், பொருளாதார மந்த நிலை, ஜப்பானுடன் நடந்து கொண்டிருந்த போர், ஆகியவற்றால் கோபமடைந்த மக்கள் பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களுக்காக ஸார் மன்னரான இரண்டாம் நிக்கோலஸிடம் வேண்டுதல் செய்ய பாதர் காபோண் (Father Gapon) இன் தலைமையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கிற்கு அணிவகுத்துச் சென்றனர். போராட்டக்காரர்களுக்கு எதிராக ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். 1905 ஜனவரி 22–இல் செயின்ட் பீட்டாஸ் பர்க்கில் நடந்த இந்தப் படுகொலை குருதியில் நனைந்த ஞாயிறு (Bloody Sunday) என்று அறியப்படுகிறது.

மக்கள் எழுச்சியை தொடர்ந்து டூமா (Duma) என்ற நாடாளுமன்றத்தை உருவாக்க சக்கரவர்த்தி ஒப்புக் கொண்டார். ஆனால் டூமாவில் (Duma) முன்மொழியப்பட்ட அனைத்து சீர்திருத்தங்களையும் அவர் நிராகரித்து அரசியல் சுதந்திரத்தை அடக்கவும் முயன்றார்.

## தொழிலாலர்களும் புரட்சியும்

ரஷ்ய சமூகத்தில் இரண்டு மக்கள் பிரிவினர் இருந்தனர். தொழிலாளர்களும் வேளாண்மை செய்பவர்களும் அடங்கிய சாதாரண மக்களும் பிரபுக்களும் முதலாளிகளும் அடங்கிய செல்வந்தர்களும் ஆவர். சாதாரண மக்களாக இருந்த வேளாண் செய்பவர்களையும் தொழிலாளர்களையும் ஆட்சியாளர்களும் பிரபுக்களும் இழிவாக நடத்தினர். வேளாண் செய்பவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பரிதாபகரமான நிலை எவ்வாறிருந்தது என்று ஆராய்வோம்.

தொழிலாளர்கள் எதிர்கொண்ட முக்கியப் பிரச்சனைகள்

- குறைந்த ஊதியம்
- மோசமான வாழ்க்கைச் சூழல்
- அதிகமான வேலைநேரம்
- தொழில்களில் வெளிநாட்டு முதலாளிகளின் ஆதிக்கம்

தொழிலாளர்களைப் போலவே வேளாண்மை செய்பவர்களின் நிலையும் பரிதாபகரமாகயிருந்தது. அவை எவையென ஆராயலாம்.




- வேளாண்மை செய்பவர்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்டனர்.
- வேளாண் நிலத்தின் பெரும் பகுதியும் பிரபுக்களின் கைகளில் இருந்தது.
- குறைந்த பிரிவு வேளாண்மை செய்பவர்களுக்கு மட்டுமே சொந்தமாக நிலம் இருந்தது.
- வேளாண்மை செய்பவர்கள் கொடுக்க வேண்டிய வரி அதிகமாக இருந்தது

வெளிநாட்டு முதலாளிகளின் ஆதிக்கமும் சுரண்டலும் வேளாண்மை செய்பவர்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே தொழிற்சங்கங்கள் உருவாகக் காரணமாயின. இது அவர்களிடையே அரசியல் உணர்வு வளர வழிவகுத்தது. இந்தச் சூழ்நிலையில்தான் அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் மிகவும் முக்கியமானவற்றை ஆராய்வோம்.

**சோசியல் டெமொகிராடிக் வர்க்கர்ஸ் பார்ட்டி**

- **போல்ஷெவிக்குகள்** (Bolshevik)
- **மென்ஷெவிக்குகள்** (Menshevik)

*ரஷ்யாவில் அரசியல் கட்சிகள் வளர்ந்து வரக் காரணமான சூழ்நிலைகளை மதிப்பிட்டு ஒரு குறிப்பு தயாரிக்கவும்.*

## கருத்துகளின் தாக்கம்

புரட்சிக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதில் இலக்கியவாதிகளும் பெரும் பங்கு வகித்தனர். லியோ டால்ஸ்டாய், துர்கெனவ், மாக்ஸிம் கார்க்கி போன்றோரின் எழுத்துக்கள் சாதாரண மக்களின் பரிதாப நிலைமையை உருக்கமான முறையில் சித்தரிக்கிறது. ஆனால் புரட்சி உருவாக்கியதும் அதற்கு வேண்டிய வழிமுறைகளை நல்கியதும் காரல் மார்க்ஸ், பிரெடெரிக் ஏங்கல்ஸ்

ஆகியோரின் பொதுவுடமைக் கோட்பாடுகள் அடங்கிய 'கம்யூனிஸ்ட் மானி பெஸ்டோ' ஆகும்.

### மார்க்சிஸ்ட் சித்தாந்தம்



படம் 13.7 ● காரல் மார்க்ஸ் பிரெடெரிக் ஏங்கல்ஸ்

*மார்க்சிஸ்ட் சித்தாந்தத்தின்படி, மனித வாழ்வில் அரசியல் , சமூக, அறிவுசார் செயல்பாடுகள் அனைத்தும் சமூகத்தின் உற்பத்தி முறையால் தீர்மானிக்கப்படுகிறது. தொழிலாளர்களே உற்பத்தியின் அடிப்படை என்றும் அதனால் தொழிலாளர்களின் மேலாதிக்கத்திற்காக நிலை நிற்க வேண்டும் என்றும் மார்க்சிய சித்தாந்தத்திற்கு உருவம் கொடுத்த காரல் மார்க்ஸும் பிரெடெரிக் ஏங்கல்சும் வாதிட்டனர்.*

முதல் உலகப்போர் தொடங்கிய போது ரஷ்யாவும் இணைந்தது. ஆயுதங்களின் குறைவும் பயிற்சி இல்லாமையும் ஆயிரக்கணக்கான வீரர்கள் மரணமடையக் காரணமாயின. இது ஸார் ஆட்சிக்கு எதிராக சாதாரண மக்களிடம் இருந்து விமர்சனம் உயரக் காரணமானது. இந்த நேரத்தில் ரஷ்யாவில் ஏற்பட்ட உணவு பற்றாக்குறையும் பிரச்சனைகளை அதிகரிக்கச் செய்தது. இது மக்களிடையே புரட்சி சிந்தனைகள் எழும்ப வழிவகுத்தது.



படம் 13.8 ● பெட்ரோகிராடில் அணிவகுப்பு

## முடியாட்சி முடிவடைகிறது

1917 மார்ச் 8 அன்று 'ஏகாதிபத்தியம் ஒழியட்டும்' என்ற முத்திரை வாக்கியம் முழக்கி பெண் தொழிலாளர்கள் முன்னில் நின்று கொண்டு பெட்ரோகிராடில் (Petrograd) வேலை நிறுத்தமும், அணிவகுப்பும் நடத்தினர். இதனை எதிர்கொள்ள அனுப்பப்பட்ட ராணுவ வீரர்கள் தொழிலாளர்களுடன்சேர்ந்து கொண்டனர். இரண்டாம் ஸார் நிக்கோலசை 1917 மார்ச் 15 அன்று பதவி நீக்கம் செய்து மென்ஷெவிக்குகளின் தலைவராகிய அலெக்சாண்டர் கெரன்ஸ்கியின் கீழ் ஒரு தற்காலிக அரசு உருவாக்கப்பட்டது. இந்தப் புரட்சி 'பிப்ரவரி புரட்சி' என்று அறியப்படுகிறது.



படம் 13.9 ● அலெக்சாண்டர் கெரன்ஸ்கி

## தொழிலாளி வர்க்கம் சர்வாதிகாரத்திற்கு

ரஷ்யப் புரட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது போல்ஷெவிக் கட்சியின் தலைவரான லெனின் ஆவார். தற்காலிக அரசு முதலாளிகளின் பக்கம் என்றும் அது மக்களுக்கு சமாதானமும் உணவும் சுதந்திரமும் அனுமதிப்பதில்லை என்றும் அதனால் அதற்குப் பதிலாக சோவியத் (Soviet)

அரசு வர வேண்டும் எனவும் வாதிட்டார். அவர் புதிய கருத்துக்களை முன் வைத்தார். அவை எவை என ஆராய்வோம்.

**லெனின்**

- **அதிகாரம்** – *தொழிலாளர் மன்றங்களுக்கு (சோவியத்துகள்)*
- **நிலம்** – *வேளாண்மை செய்பவர்களுக்கு*
- **சமாதானம்** – *அனைவருக்கும்*
- **உணவு** – *பட்டினி கிடப்பவர்களுக்கு*

இந்த இலக்கை அடைவதற்காக உருவாக்கப்பட்ட ராணுவ பிரிவே சிவப்பு காவல் படையினர் (Red Guard). போல்ஷெவிக் (Bolshevik) சங்கங்கள் தபால் – தொலைபேசி நிலையங்கள், ரயில் நிலையங்கள், வங்கிகள் என பெட்ரோ கிரேடில் உள்ள முக்கிய நிறுவனங்களையெல்லாம் கைப்பற்றினர். அதன் பின்னர் தற்காலிக அரசாங்கத்தின் தலைமையிடமான குளிர்கால அரண்மனையையும் கைப்பற்றினார். இத்துடன் அலெக்சாண்டர் கெரன்ஸ்கின் தலைமையில் உள்ள தற்காலிக அரசு வெளியேற்றப்பட்டது. இந்தப் புரட்சி அக்டோபர் புரட்சி (October Revolution) என்று அறியப்படுகிறது. தொடர்ந்து லெனின் ரஷ்யாவை தொழிலாளர்களின் குடியரசாக அறிவித்து அவருடைய தலைமையில் ஒரு அரசாங்கம் உருவாக்கவும் செய்தார்.

**ரஷ்ய நாட்காட்டி**

*சர்வதேச நாட்காட்டியை (கிரிகோரியன் காலண்டர்) விட 13 நாட்கள் பின்னால் ஆதனால் மார்ச்சில் நடந்த புரட்சி பிப்ரவரி புரட்சி என்று அறியப்படுகிறது.*

*பிப்ரவரி புரட்சி –அக்டோபர் புரட்சி ஆகியவற்றுக்கு வழிவகுத்த பல்வேறு நிகழ்வுகளை உட்படுத்தி ஒரு ஆல்பம் தயாரிக்கவும்.*

*1870–ல் லெனின் பிறந்தார். சமூக அமைப்பில் அடிப்படையான மாற்றங்களை ரகசிய அமைப்புகள் கொண்டு உருவாக்க முடியாது என்றும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்துக் கொண்டு மட்டுமே அதை அடைய முடியும் என்றும் அவருக்கு உணர முடிந்தது. இந்தக் கண்ணோட்டமே ரஷ்யாவில் தொழிலாளர்கள் மற்றும் வேளாண்மை செய்பவர்களின் புரட்சியைத் தவிர்க்க முடியாததாக மாற்றியது. அக்டோபர் புரட்சிக்கும் அதைத்தொடர்ந்து உருவாக்கப்பட்ட புரட்சிகர அரசாங்கத்திற்கும் தலைமை தாங்கியது லெனின் ஆவார்.*

புரட்சிக்குப் பிறகு சில நிர்வாக சீர்திருத்தங்களை லெனின் நடைமுறைபடுத்தினார். அவை எவை?




## ஏப்ரல் ஆய்வறிக்கை

*போல்ஷெவிக் கட்சி, சோவியத்துக்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கூட்டத்தில் லெனின் சமர்ப்பித்த அறிக்கையே ஏப்ரல் ஆய்வறிக்கை. பூஷ்வா மக்களாட்சியிலிருந்து சோசியலிசப் புரட்சிக்கு மாறுவதற்காக கைக் கொள்ள வேண்டிய திட்டங்களைக் குறித்துதான் இதில் விவரிக்கப் பட்டுள்ளது. தொழிலாளர் களுடையவும், வேளாண்மை செய்பவர்களுடை யவும், கைகளுக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டும் என்ற நிலைதான் நிலவில் உள்ளது என்று அவர் இதில் தெளிவுபடுத்தினார்.*

## மாறும் பொருளாதாரக் கொள்கை

பொருளாதாரத் துறையில் பல புரட்சிகரமான நடவடிக்கைகளை லெனின் எடுத்தார் 1921-இல் லெனின் நடைமுறைப்படுத்திய சீர்திருத்தமே புதிய பொருளாதாரக் கொள்கை (New Economic Policy). தனியார் வாணிபம், வேளாண்மை ஆகியவற்றிற்கும் தனியார் முதலீட்டிற்கும், ஓரளவு திரும்புவதாக இருந்தது புதிய பொருளாதாரக் கொள்கை. பெருந்தொழில்கள் அறக்கட்டளைகளாக ஒருங்கிணைக்கப்பட்டன. அதேநேரம் கூட்டுறவுத்துறையை அரசாங்கம் ஊக்குவித்தது. இருப்பினும் முதலாளித்துவத்தின் மறுமலர்ச்சி ஏற்படாமல் இருப்பதற்காக அரசாங்கத்தின் கடுமையான கட்டுப்பாடு இருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் அவர் யூனியன் ஆப் சோவியத் சோசலிஸ்ட் ரிப்பப்ளிக்கை (USSR) உலகிலேயே வல்லரசாக வளர்த்தினார்.

*யூனியன் ஆப் சோவியத் சோசியலிஸ்ட்ரிப்பப்ளிக் என்ற நாட்டின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகளை விளக்கக் காட்சி வடிவில் உருவாக்கத் தேவையான மாதிரி ஸ்லைடுகளைத் தயாரிக்கவும்.*

## புரட்சியின் பாதையில் சீனா

*“2000 ஆண்டுகால போர்கள், ஆக்கிரமிப்புகள் கடுமையான போராட்டங்களின் வேதனையான வரலாற்றிற்குப் பிறகு சீனா தனது சொந்த மக்களுடையவும், சமூக அடிப்படையிலும் பலவீனங்களைக்*

*கடப்பதற்கான அறிகுறிகளைக் காணத்துவங்கிய போது வேறு ஒரு துரதிஷ்டம் அந்த நாட்டிற்கு ஏற்பட்டது. அது சீனாவின் சுய வளர்ச்சியைத் தடை செய்த ஏகாதிபத்தியமும் வெளிநாட்டு மூலதனத்தின் நுழைவுமாக இருந்தது...”*

*எம். என். ராய்*

*ரெவல்யூஷன் அண்டு கவுண்டர் ரெவல்யூஷன் இன் சைனா*



*படம் 13.10*

19–ஆம் நூற்றாண்டில் சீனாவில் ஐரோப்பியர்களின் வருகையும் அதன் விளைவுகளையும் பற்றிய எம். என். ராய்யின் கருத்து மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சனைகளை சீனா எவ்வாறு எதிர்கொண்டது என்பதை ஆராய்வோம்.

## அதிகாரம் வணிகத்தின் வாயிலாக

ஐரோப்பிய சக்திகளின் இந்திய வருகை பற்றியும் அவர்களின் ஆதிக்கம் பற்றியும் முந்தைய அத்தியாயத்தில் விவாதித்தோம் அல்லவா. இது போலவே வணிக விருப்பங்களுக்காக வெளிநாட்டு சக்திகள் சீனாவிற்கும் வந்திருந்தனர். அபின் வணிகத்தின் மூலம் ஐரோப்பிய வணிகர்கள் சீனாவில் இருந்து அதிக அளவில் லாபம் ஈட்டினர். போதைப் பொருளான அபினின் உபயோகம் மிக வேகமாக சீனாவில் பரவியது சீன மக்களின் ஆரோக்கியத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்தது. இதைத் தொடர்ந்து சீனாவிற்கும் பிரிட்டனுக்கும் இடையே நடந்த போர் 'அபின் போர்(Opium War) என்ற பெயரில் அறியப்படுகிறது. இந்தப் போரில் சீனா தோல்வி அடைந்தது. அதைத் தொடர்ந்து நாங்கிங் உடன்படிக்கையின் படி சீனாவின் முக்கிய துறைமுகங்கள் ஆகிய கான்டன், அமோய், நிங்போ, ஷாங்காய் ஆகியவை வெளிநாட்டு வணிகத்திற்கு வேண்டி திறந்து கொடுக்கப்பட்டது.

*அபின் போர் சீனாவில் ஐரோப்பிய ஆதிக்கம் வலுப்படுத்துவதற்கு எவ்வாறு காரணமானது என்பதை விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.*

## மன்னராட்சி முடிவடைகிறது

வெளிநாட்டு சக்திகளின் அதிகரித்து வந்த தலையீடு சீனாவில் மக்களிடையே அவர்களோடு உள்ள வெறுப்பை அதிகரித்தது. இதன் விளைவாக சீனாவில் பல ரகசிய சங்கங்கள் உருவாகின. அவ்வாறு உருவான ஒரு ரகசிய சங்கமே குத்துச்சண்டை வீரர்கள் (Boxers). இவர்களின் சின்னம் குத்துச்சண்டை வீரர்களின் கைமுட்டி (Boxers Fist) ஐரோப்பிய ஆக்கிரமிப்பிற்கு எதிரே இவர்கள் நடத்திய எதிர்ப்பே

குத்துச்சண்டை வீரர் கிளர்ச்சி (Boxer Rebellion) என்று அறியப்படுகிறது. பாக்ஸர் கிளர்ச்சிக்குப்பின் பேரரசர் சீனாவில் சில சீர்திருத்தங்களை செயல்படுத்தினார் அவை என்ன என்பதை ஆராய்வோம்.

மேற்கத்திய கல்வி முறை சீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளின் அரசியல் அமைப்புகளைக் குறித்து படிப்பதற்கு ஒரு ஆணையம் நிறுவப்பட்டது.

பேரரசரின் இத்தகைய சீர்த்திருந்தங்கள் சீன மக்களைத் திருப்திப்படுத்தவில்லை. சீனாவை ஆண்ட மஞ்சு ராஜ வம்சத்தை அதிகாரத்திலிருந்து வெளியேற்றினால் மட்டுமே மேற்கத்திய சக்திகளிலிருந்து சீனாவை விடுவிக்கமுடியும் என்று மக்கள் நம்பினர். இவர்களுக்கு தலைமை வகித்தது டாக்டர் சன்யாட் சென் ஆவார். அவர் தேசியவாதம், ஜனநாயகம், சோசியலிசம் ஆகிய கருத்துகளை ஊக்குவித்தார்.

இந்த இலக்கை அடைவதற்காக குமிந்தாங் கட்சி உருவாக்கப்பட்டது. 1911-இல் புரட்சியைத் தொடர்ந்து மஞ்சு ராஜவம்சத்தினரை அதிகாரத்திலிருந்து வெளியேற்றவும், ஒரு குடியரசு அரசாங்கத்தை உருவாக்கவும் செய்தனர். ஆனால் பின்னர் சன் யாட் சென் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்யவும் யுவான் ஷி–கெய் அதிகாரத்திற்கும் வந்தார். 1916-இல் அவர் மரணத்திற்குப் பிறகு சன் யாட் சென் மீண்டும் ஆட்சிக்கு வந்தார்.

### டாக்டர் சன் யாட் சென்

*மேற்கத்திய கல்வியைப் பெற்ற சன்யாட் சென் மருத்துவப் படிப்பை முடித்தார். ஒரு சமூக சீர்த்திருத்தவாதியாக வேண்டும் என விரும்பினார். ஆனால், சீனாவில் சமூக சீர்த்திருத்தம் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து முற்போக்கான குடியரசை நிறுவுவதற்காகச் "சீன புத்துணர்ச்சிக் கட்சியை" உருவாக்கினார். இதுவே பின்னர் குமிந்தாங் கட்சியாக மாறியது. சீனப் புரட்சியின் தந்தை என்று இவர் அறியப்படுகிறார்.*

*மன்னராட்சியை சீனாவில் முடிவுக்குக் கொண்டு வர சன் யாட் சென்னிற்கும் அவரது கருத்துகளுக்கும் உள்ள பங்கினை விவாதித்து ஒரு சிறு குறிப்பு தயாரிக்கவும்.*

## சீனா மக்கள் குடியரசு

ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் புரட்சியைப் பற்றி விவாதித்தோம் அல்லவா? ரஷ்யாவின் கம்யூனிச கருத்துகள் சீனாவிலும் பரவத் தொடங்கின. வேளாண்மை செய்பவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே செல்வாக்கைப் பெற 1921 இல் மாவோ சேதுங்கின் தலைமையில் உருவாக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு முடிந்தது. ரஷ்யா, சீனாவின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்காக குமிந்தாங் குடியரசுக்கு உதவியது. கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த சன் யாட் சென் 1925 இல் காலமானார்.

சன் யாட் சென்னின் மறைவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஷியாங் கை ஷேக் நிலக்கரி, இரும்பு ஆகியவற்றின் உற்பத்தி வங்கி, காப்பீடு, வெளிநாட்டு வணிகம் ஆகியவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு திறந்து கொடுத்தார். அதன் விளைவாக அனைத்து துறைகளையும் வெளிநாட்டு சக்திகள் கட்டுப்படுத்தின. இதன்மூலம் அவர்கள் பெருந்தொகையை சீனாவிலிருந்து கைப்பற்றினர். இந்தக் கொள்கைகளை மாவோ சே துங்கின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. செம்படை (Red Army) இத்தகைய எதிர்த்து நிற்றல்களுக்குத் தலைமை தாங்கியது. 1934-இல் வேளாண் செய்பவர்களையும் தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு மாவோ சே துங் தனது பிரபலமான 'நீண்ட பேரணி' நடத்தினார். இதன் அம்சங்கள் என்ன என்பதைப் படத்தைப் பார்த்துக் கண்டறியவும்.



படம் 13.11 • மாவோ சே துங்

*1893 டிசமபர் 26 இல் மாவோயிச்சாங் மற்றும் பென்ங்கி மேய் ஆகியோருக்குப் மகனாக ஷாவோ ஷான் என்ற இடத்தில் பிறந்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர்களில் ஒருவராக இருந்தார். நீண்டப் பேரணிக்குத் தலைமை வகித்த இவர் சீன மக்கள் குடியரசின் நிறுவனருமாகும். எழுத்தறிவு, பெண்களின் உரிமைகள், சுகாதார பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்திக் கொண்டு சீனாவை உலக நாடுகளுக்கிடையில் முன்னணியில் நிறுத்துவதற்கு இவருக்கு முடிந்தது.*

## நீண்ட பேரணி கடந்து சென்ற பாதைகள் (8000 மைல்)




சித்திரம் 13.13 • நீண்டப் பேரணி கடந்து சென்ற பாதைகள்

- எங்கிருந்து நீண்ட பேரணி தொடங்கியது?
- நீண்ட பேரணி முடிந்தது எங்கே?
- மொத்தம் எத்தனை மாகாணங்களைக் கடந்து சென்றது?

1949 ஏபரல் 21- குவிந்தாங் அரசாங்கத்தின் தலைமையிடமாகயிருந்த நாங்கிங்கை செம்படை கைப்பற்றியது. தொடர்ந்து அக்டோபர் 1 ஆம் நாள் மாவோ சே துங்கின் தலைமையிலான சீனாவை மக்கள் குடியரசாக அறிவிக்கப்பட்டது.

*மக்கள் குடியரசு உருவாக்கத்தில் மாவோ சே துங்கின் பங்கைக் குறித்து விவாதம் செய்து சுயவிவர ஆல்பம் தயாரிக்கவும்.*

மாவோ சே துங்கின் தலைமையில் அநேக பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் சீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை பெரும் முன்னேற்ற குதிப்பு (The Great Leap Forward) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் உலக நாடுகளுக்கிடையே சீனா முக்கியமான சக்தியாக வளர்ந்தது.

**புரட்சியின் விளைவுகள்**

- சீனா மக்கள் குடியரசாக மாறியது
- சீனாவின் வெளிநாட்டு ஆதிக்கம் முடிவுற்றது
- வேளாண் நிலங்கள் வேளாண்மை செய்பவர்களுக்குக் கிடைத்தது
- உலக நாடுகளுக் கிடையில் சோசலிசக் கருத்துகள் பரவுவதற்குக் காரணமானது

ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள் உலக நாடுகளுக்கிடையில் நடத்திய தலையீட்டின் பாகமாக சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்கள் நடத்திய எதிர்த்து நிற்றல்களைக் குறித்தே இந்த அத்தியாயத்தில் நாம் விவாதித்தோம். இந்தப் புரட்சிகள் ஜனநாயகம், சோசலிசம் போன்ற கருத்துகள் உலக நாடுகளுக்கிடையில் ஆழமாக வேரூன்றி நின்றது. புரட்சி காலகட்டத்தில் தோன்றிய கருத்துகளும் சிந்தனைகளும் நவீன உலகின் வளர்ச்சிக்குக் காரணமானது.

## தொடர் செயல்பாடுகள்

- அமெரிக்க சுதந்திரப் போருக்கு வழிவகுத்த நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் விளக்கக் காட்சியைத் தயாரிக்கவும்.
- ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு USSR இல் இணைக்கப்பட்ட பகுதிகளின் பட்டியலைத் தயாரிக்கவும்.
- உலகில் நிகழ்ந்த முக்கியப் புரட்சிகளின் தகவல்களைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் பதிப்பு தயாரிக்கவும்.
- இரஷ்யப் புரட்சி, சீனப்புரட்சி தொடர்பான முக்கிய நிகழ்வுகளை மன வரைபடத்தின் (Mind Map) மூலம் வழங்கவும்.

குறிப்புகள்

# குறிப்புகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்–1098, கிரைம் ஸ்டோப்பர்–1090, நிர்பயா–1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் – 0471–324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***